2017 மே 15
திங்கள்
விலை: 20/-

QD / 154 / NEWS / 2017

ஹிஜ்ரி 1438 ஷஃபான் பிறை 18 | பக்கங்கள் 12 | மணி 03 | ஒளி 072

NAVAMANI DAILY
නවමණි දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்



## மோடியின் உரை எனக்கு கௌரவம்
12



## பலமடையும் மஹிந்த அணி
04



## சம அதிகார பங்கீட்டிலேயே வட, கிழக்கில் நிரந்தர அமைதி
09

## அரசாங்க பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு ஆங்கிலம்

### கல்வி அமைச்சு தீர்மானம்



அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்திலிருந்து ஆங்கிலப்பாடத்தைப் போதிப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்காக பாடப் புத்தகங்களைத் தயார்படுத்துமாறு கல்வி அமைச்சர்

11 »»»»

## ருக்மன் சேனாநாயக்க மஹிந்தவுடன் சந்திப்பு



ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் அமைச்சரும் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ். சேனாநாயக்கவின் பேரனுமான ருக்மன் சேனாநாயக்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த



11 »»»»

## அமைச்சரவை மாற்றம் இடம்பெறும் வரை
# அமைச்சரவை கூட்டம் இல்லை

■ அ.அருண் பிரசாந்த்

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தும்வரை அமைச்சரவைக் கூட்டங்களை நடத்தாதிருப்பதற்கு ஜனாதிபதி தீர்மானம் எடுத்துள்ளார்.

அத்தோடு, மே 19 ஆம் திகதிக்குப் பின்னர் நல்லாட்சி அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறும் என்றும் அரசின் நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சீனா விஜயத்தின் காரணமாகவே இது தாமதமடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நல்லாட்சி அரசின் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறும் என்று கடந்த சில நாட்களாகவே தொடர்ந்தும் தகவல்கள் வெளிவந்த வண்ணமிருந்தன. ஊடகப்பிரதானிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தபோதும் வெசாக் தினத்துக்குப் பின்னர் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறும் என்றே குறிப்பிட்டிருந்தார். எனினும், சர்வதேச வெசாக் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு வருகை தந்தமையால்,

11 »»»»

## அரச ஹஜ்குழு இன்று சவூதி பயணம்

■ ஆதில் அலி சப்ரி

சவூதி அரசின் ஹஜ் விவகாரங்கள் தொடர்பான அமைச்சுடன் 2017 ஹஜ் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதற்கு அரச ஹஜ் குழுவினர் இன்று சவூதி அரேபியா நோக்கி பயணமாகவுள்ளதாக குழுவின் தலைவர் கலாநிதி ஸியாத் எம். தாஹா தெரிவித்தார்.

கலாநிதி ஸியாத் எம். தாஹா தலைமையில் பயணமாகும் இக்குழுவில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம்.மலிக், அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.தாஸிம், தபால் சேவைகள், முஸ்லிம் சமய கலாசார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பாஹிம் ஹாஷிம் ஆகியோரும்

11 »»»»



## பொலன்னறுவை முஸ்லிம் ம.கல்லூரியில் 3மாடி கட்டிடம் இன்று திறப்பு
### ஜனாதிபதி மைத்திரி பிரதம அதிதி



பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று மாலை திறந்து வைக்கவுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக

11 »»»»

## அபுதாபி தனவந்தர் அனுசரணையில் வடபுல அகதிகளுக்கு 120 வீடுகள்

■ சுஐப்.எம்.காசிம்

வடமாகாண அகதிகளின் மீள் குடியேற்றத்துக்கென ஐக்கிய அரபு அமீரகம் அபுதாபி நாட்டைச் சேர்ந்த தனவந்தரும் கொடைவள்ளலுமான மஹ்மூத் பேட் ஹாலி அப்துல் லாஹ் அல்ஹாஜ் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளார். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் அயராத முயற்சியினாலும்

11 »»»»

## தனியார் வர்த்தக விமானங்கள் மட்டுவில் தரையிறங்க அனுமதி

இதுவரை இராணுவ கட்டுப்பாட்டு விமானங்களுக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்த மட்டக்களப்பு விமான நிலையம் இம்மாத இறுதியிலிருந்து தனியார் மற்றும் வர்த்தக ஜெட் விமானங்கள் இறங்குவதற்கும் அனுமதி வழங்கப்படவுள்ளது.

சிவில் விமான அதிகார சபையினால் மட்டக்களப்பு விமான நிலையத்துக்கு இதற்கான அங்கீகாரம் வழங்கப்படவுள்ளதாக சிவில் விமான அதிகார சபையின் பணிப்பாளர்

11 »»»»

## அரச ஊழியர்களுக்கு மலேசியாவில் தொழில் பயிற்சி



இலங்கையின் அரச சேவையின் மேலாண்மை செய்வதை அபிவிருத்தி செய்வதற்கு மலேசியா தொழில்நுட்ப ரீதியாக ஒத்துழைப்பை இலங்கை அரச சேவையாளர்களை பயிற்றுவிப்பதற்கு சிறந்ததொரு ஒத்துழைப்பை பெற்றுதருவதாக மலேசியப் பிரதமர் நஜீப் ரசாக் தெரிவித்தார்.

11 »»»»



சீனா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீன ஜனாதிபதி ஷிஜின்பிங்கை சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம். பாரியார்களான மைத்திரி விக்கிரமசிங்கவும், பிங்கும் காணப்படுகிறார்கள்.

## அமைச்சரவையில் மாற்றம்; அரசுக்கு ஆரோக்கியம்
### அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க



■ அ.அருண் பிரசாந்த்

அமைச்சரவையில் உடனடியாக மாற்றமொன்றை ஏற்படுத்துவதே அரசுக்கு ஆரோக்கியமானதாக அமையும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரும் அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

வெசாக் நிகழ்வுகள் முடிவடைந்தவுடன் அமைச்சரவையில் சில மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார். இதற்கு பிரதமர்

11 »»»»

### உயர்கல்வி முன்னேற்றத்திற்கு
## உலக வங்கி 100 மில்லி. டொலர் உதவி

இலங்கையின் உயர்க் கல்வித் துறையின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்க 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உலக வங்கியின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தப் புதிய முயற்சியானது உயர்கல்வித்துறையின் முன்னேற்றம்,

11 »»»»

## பெட் ஸ்கேனருக்கான கட்டட வேலைகள் 3 மாதங்களுக்குள் பூர்த்தி
### கதீஜா பவுண்டேஷன் தலைவர் எஸ்.எச்.முஹம்மத்



■ ஏ.எஸ்.எம். இர்ஷாட்

மகரகம அபேக்ஷ புற்றுநோய் வைத்தியசாலைக்கு புதிய பெற் ஸ்கேனர் இயந்திரம் விரைவில் கிடைக்கப்பெறவுள்ளதாக கதீஜா பவுண்டேஷன் தலைவர் எஸ்.எச்.முஹம்மட் தெரிவித்தார்.

குறிப்பாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில்

11 »»»»

## மகாபோதி வெசாக் நிகழ்வில் ஜனாதிபதி சார்பில் பைசர் முஸ்தபா

இந்தியாவில் மகாபோதியில் நடைபெற்ற வெசாக்விழாவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா கலந்து கொண்டார். இரு நாட்களாக நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் நேற்று நாடு திரும்பினார்.

இதேநேரம் சனியன்று மறிச்சுக்கட்டி காணிப்பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவிருந்த மாநாடு அமைச்சர்

11 »»»»

## தமிழர் அபிலாஷைகளை நிறைவேற்ற இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்
### சுமந்திரன் எம்.பி.

■ அ.அருண் பிரசாந்த்



புதிய அரசமைப்பின் ஊடாக தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது தொடர்பில் இலங்கைக்கு இந்திய மத்திய அரசு அழுத்தங்களை விடுக்கும் என தாம் பெரிதும் நம்புவதாக தமிழ்த்

11 »»»»

நவமணி



# இ.தொ.கா. ஆதரவாளர்களுக்கு தொண்டமான் நன்றி

(ஹட்டன் க.கிஷாந்தன்)

மலைநாட்டு புதிய கிராமங்கள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரத்தின் குழுவினர் கடந்த பல நாட்களாக அடாவடி தனத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஓர் இரு தினத்தில் காங்கிரஸின் பொது செயலாளர் ஆறுமுகன் தொண்டமானின் வேண்டுகோளுக்கமைவாக ஜனநாயக கோட்பாட்டுடன் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியை வரவேற்பதில் அணிதிரண்டு மிகவும் நாகரிகமான முறையில் நடந்து கொண்ட மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொட்டகலை தொண்டமான் தொழில்நுட்ப நிலையத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதில் மத்திய மாகாண சபையின் உறுப்பினர்களான ஏ.பி. சக்திவேல், கணபதி கனகராஜ் உள்ளிட்ட நுவரெலியா பிரதேச சபையின் முன்னாள் தலைவர் எஸ்.சதாசிவன், இ.தொ.கா இளைஞர் அணி அமைப்பாளர் ராஜமணி பிரசாத் என சில முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வருகைக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றதில் கருத்து தெரிவித்த மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேல் மேலும் தெரிவித்ததாவது,

இ.தொ.கா அங்கத்தவர்கள் மோடியை வரவேற்பதில் பெரும் ஆர்வம் கொண்டனர். அவர்களுக்கு வெயில் சூடு படாது தலைக்கவசம் வழங்கப்பட்டது. அத்தோடு இ.தொ.காவின் 30 தொடக்கம் 40 ஆயிரம் அங்கத்தவர்களை அடையாளப்படுத்தும் வகையிலும் இந்த தலைகவசம் வழங்கப்பட்டது.

தனிப்பட்ட கட்சியின் தலைவர் ஒருவரை நோர்வூட் மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் புகழ்பாடியதனால் அதை வெறுத்த பொதுமக்கள் கூச்சலிட்டனர். அதேபோன்று பிரதமர் மோடியினால் அமரர்.சௌமிய மூர்த்தி தொண்டமான் பெயரை உச்சரித்த போது உச்சாகத்துடன் வரவேற்று சந்தோஷத்தை வெளிப்படுத்தினர். இதை பிரச்சினையாக எண்ணக்கூடாது. என்றார்.

# தேர்தலை இலக்காக வைத்து கிழக்கில் அபிவிருத்தி நாடகம்

## சு.க.பிரமுகர் வஹாப் குற்றச்சாட்டு



(றியாஸ் ஆதம்)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் ஏறாவூர் பிரதேசத்தில் அபிவிருத்திக் குழுக்களை அமைத்து வருவதாகவும், இது மக்களை ஏமாற்றி தேர்தலில் வெற்றிபெறுவதற்குரிய நாடகமாகும் எனவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பிரசார செயலாளர் பீ.எம்.வஹாப் தெரிவித்தார்.

அபிவிருத்திக் குழுக்கள் எனும் பெயரில் ஏறாவூர் பிரதேசத்தில் முதலமைச்சரால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் சுமார் 5 வருட காலமாக அதிகாரத்தில் இருந்த ஹாபீஸ் நசீர் அகமட் குறிப்பாக முதலமைச்சு மற்றும் அமைச்சுக்களை தன்வசம் வைத்திருந்தார். அக்காலப் பகுதியில் ஏறாவூர் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக அவர் எந்தவொரு குழுக்களையும் நியமிக்க முன்வரவில்லை.

தற்போது கிழக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் நிறைவடைந்து தேர்தல் ஒன்றை எதிர்நோக்கவுள்ள தருவாயில் முதலமைச்சர் ஏறாவூர் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் அபிவிருத்திக் குழுக்களை அமைத்து வருகிறார். இதனால் தற்போது எந்தவொரு விடயத்தினையும் சாதித்துவிட முடியாது என்பது மக்களுக்கும் நன்கு தெரியும். இப்போது காலம் கடந்தே முதலமைச்சருக்கு ஞானம் பிறந்திருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலே பெரும் அதிகாரத்தை வைத்துக்கொண்டிருந்த போது அபிவிருத்திப் பணிகளை இந்த மண்ணிலே செய்வதற்கு தவறி விட்டு தனது பதவி பறிபோகும் தருவாயில் அபிவிருத்திக் குழுக்கள் எனும் போர்வையில் சிறு சிறு குழுக்களை அமைத்து மக்களை ஏமாற்றுவது கவலையான விடயமாகும். இக்குழுக்கள் மக்களை அவரது தேர்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்குரிய முன்னேற்பாடாகும். மக்களை ஏமாற்ற முனையும் முதலமைச்சரின் இச்செயற்பாட்டை ஏறாவூர் மக்கள் புரியாமலுமில்லை இந்நடவடிக்கையானது அவரது வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகும்.

முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட்டின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக ஏறாவூர் பிரதேசமெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதுடன் பிரதேச மக்களும் எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக தான் சார்ந்த கட்சியை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா இருக்கத்தக்கதாக அவரைப் புறக்கணித்து கட்சி செயற்பாடுகளையும், அபிவிருத்தி விடயங்களையும் முதலமைச்சர் முன்னெடுத்து வருகின்றார். இதன் காரணமாக முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா ஆகியோருக்கிடையில் அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட ரீதியாகவும் பாரிய விரிசல் காணப்படுகிறது.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவினதும் அவரது ஆதரவாளர்களினதும் பெரும் எதிர்ப்பினையும் முதலமைச்சர் சம்பாதித்துள்ளார். எதிர்வரும் தேர்தல் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட்டுக்கு பெரும் சவாலாகவே அமையவுள்ளது. அது அவருக்கு தெரியாமலுமில்லை குறிப்பாக தனது கட்சியை சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானாவின் ஆதரவாளர்களின் வாக்கு தனக்கு ஒரு போதும் கிடைக்காது என்பதனை உணர்ந்துகொண்ட முதலமைச்சர் தற்போதே தேர்தலுக்கு தயாராகிவருகின்றார்.

குறிப்பாக இன்று கிழக்கு மாகாணத்தை ஆட்சி செய்துகொண்டிருக்கும் முதலமைச்சர் அறிக்கை மாத்திரம் விடுவதிலே வல்லவராக காணப்படுகிறார். கடந்த ஏப்ரல் மாதத்திற்குள் கிழக்கிலே 4 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை வழங்குவேன் எனக் கூக்குரலிட்டார் இன்று ஏப்ரல் கடந்து மே மாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது ஒன்றுமே நடைபெறவில்லை. கிழக்கிலே சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி வெளிநாட்டுக்கு பெண்கள் செல்வதனை குறைப்பேன் என்றார் ஆனால் இவரின் கூற்றுக்குப் பின்னரே அதிகமான பெண்கள் வெளிநாடு செல்வதனையும் அவதானிக்க முடிகிறது.

முதலமைச்சர் விடுத்த வாக்குறுதிகள் தொடர்பில் மக்கள் இப்போது சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். குறுகிய அரசியல் நோக்கம் கொண்டு ஏறாவூர் நகர சபையில் வெற்றிடமில்லாத பதவிகளுக்கு அப்பாவி இளைஞர்களுக்கு தொழில்களை வழங்கி அவ்விளைஞர்களை தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முனைகிறார். அதே போன்றுதான் தனது அரசியல் கேந்திர நிலையமாக நகர சபையை பயன்படுத்திவருகிறார்.

# சாய்ந்தமருதில் மு.கா கிளை புனரமைப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது-16 ஆம் பிரிவுக் கிளையின் புனரமைப்பு கூட்டம் நேற்று சனிக்கிழமை இரவு கட்சியின் தவிசாளர் ஏ.எல்.அப்துல் மஜீட் முன்னிலையில் சாய்ந்தமருது பிரதேச அமைப்பாளர் எம்.ஐ.எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சாய்ந்தமருது-16ஆம் பிரிவு கிளையின் அமைப்பாளராக ஷரீப் ஹக்கீம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் இக்கிளையின் செயலாளராக ஷவியுர் றஹ்மான் றபீக், உதவிச் செயலாளராக ஏ.ஐ.எம்.வாருன், பொருளாளராக ஏ.எம்.நளீம், பிரதி அமைப்பாளராக ஏ.எல்.எம்.ஷியாட் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான ஏ.ஜலால்டீன், ஏ.எம்.மஜீட், ஏ.சி.சமால்டீன், கிழக்கு மாகாண சபையின் சுற்றுலாத்துறை பணிப்பாளர் சர்ஜுன் அபூபக்கர், விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரின் இணைப்பாளர் நல்பர் ஏ.பாவா உட்பட கட்சிப் பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கல்

(இறக்காமம் நிருபர்)

இறக்காமம் பிரதேச நன்னீர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு 300 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கும் நிகழ்வு இன்று(15) பிற்பகல் 3.00 மணியளவில் இறக்காமம் பிரதேச சபைக் கேட்போர் மண்டபத்தில் முன்னாள் இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் மௌலவி யூ.கே. ஜபீர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நன்னீர் மீனவர்களுக்கு வலைகளை வழங்கி வைக்கவுள்ளார்..

சுமார் 2 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த வலைகள் இறக்காமம் பிரதேசத்திலுள்ள 7 மீனவர் சங்கங்களைச் சேர்ந்த 300 நன்னீர் மீனவர்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளன. முன்னாள் இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளர் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்க இந்த மீன்பிடி வலைகள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

# அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பில் உணவு நிலையங்களில் சோதனை





(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.எல்.அலாவுடீனின் வழிகாட்டலில் அக்கரைப்பற்று மாநகர சபை மற்றும் ஆலையடிவேம்பு பிரதேச சபை ஆகிய பிரதேசங்களில் உள்ள அனைத்து உணவு கையாளும் நிலையங்களும் நேற்றுமுன்தினம் (13) சுற்றி வளைக்கப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இச்சுற்றி வளைப்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிமனைக்குட்பட்ட 13 சுகாதார சேவை அதிகாரி காரியாலயங்களிலிருந்து 60 இற்கும் மேற்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசேதகர் பி.பேரம்பலம் தலைமையில் பரிசோதனையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இப்பரிசேதனையின் போது 56 இற்கும் மேற்பட்ட உணவகங்கள், 83 பலசரக்கு சில்லறைக்கடைகள், 8 வெதுப்பகங்கள், 6 பழவிற்பனை நிலையங்கள் என்பன பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது கூடுதலான அளவு காலாவதியான உணவு பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன், ஈக்கள் மொய்த்த உணவுகளும், சுகாதாரமற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த உணவுப் பொருட்களும், சுகாதாரமற்ற நபர்களினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன.

சுகாதாரமற்ற முறையில் உணவகங்களை கையாளும் வகையில் நடத்திச் சென்ற உணவக உரிமையாளர்களுக்கு எதிராக எதிர் வரும் வாரம் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்யவுள்ளதாக மாவட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசேதகர் பி.பேரம்பலம் தெரிவித்தார்.

# காலமானார்

காலி மாநகர சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர் பயாஸ் லதீபின் தாயார் ஸித்தி மஸீஹா நேற்றுமுன்தினம் காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கத்தில் அமைச்சர்களான வஜிர அபேவர்தன,கயன்த கருணாதிலக,முன்னாள் அமைச்சர்கள்,மாகாண மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். காலம் சென்ற ஸித்தி மஸீஹா ரக்பி வீரர் வஸீம் தாஜுதீனின் உம்மும்மா என்பது குறிப்பிடத்தக்கது.





திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் மக்களிடம் கையளிக்கப்படவுள்ள வைத்தியசாலை மற்றும் கடற்கரை பூங்கா மற்றும் கலாசார மண்டப வேலைத்திட்டங்களை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் நேற்றுமுன்தினம் உரிய அதிகாரிகளுடன் விரைந்து வேலைத்திட்டங்களின் முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்தார். அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும், இவ்வேலைத்திட்டங்களை மிக அவசரமாக முன்னெடுப்பது தொடர்பாகவும் அங்கு உரியவர்களிடம் கலந்துரையாடுவதை படங்களில் காணலாம்.

(கந்தளாய் நிருபர் முபாரக்)

## நீத்தார் பெருமை

# ஆரம்ப கல்வித் துறையின் தீபம்! கல்வியியலாளர் எஸ்.எம்.ஆர். சூதீன்



கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி மரணித்த தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரியும் கல்வியியலாளருமான எஸ்.எம்.ஆர். சூதீன் நினைவாக இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.

அவர் தொடர்பாக அவரோடு தேசிய கல்வி நிறுவகத்தில் பணியாற்றிய திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் வாஹித் ஆசிரியர் மற்றும் தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளரும் இஸ்லாம் பாட இணைப்பாளருமான அஷ்ஷெய்க் ஜே.எம். ஜுலார் (நளீமி), சூதீன் ஆசிரியரின் குடும்பத்தினர் வழங்கிய தகவல்களை மையமாகக் கொண்டு இவ்வாக்கம் தொகுக்கப்படுகிறது.

அம்பாந்தோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப் எஸ்.எம்.ஆர். சூதீன் தனது ஆரம்பக் கல்வியை அம்பாந்தோட்டை தர்ம கபீர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (தற்போது அது அம்பாந்தோட்டை லாஹிரா தேசிய பாடசாலை) கற்றார். ராஜகிரிய ஆயுர் வேத வைத்தியக் கல்லூரியில் இரண்டு வருட கல்வியை பூர்த்திசெய்த நிலையில் 1977ஆம் ஆண்டு கல்வித் துறைக்குள் ஆசிரியராக காலடி எடுத்து வைத்தார். அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆரம்ப பிரிவு ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற அவர், பின்னர் கல்விமாணி (Bachelor of Education B.Ed.) கற்கைநெறியை பூர்த்தி செய்தார்.

மன்வானை அல்முபாரக் வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றிய அவர், கொழும்பு ஹமீத் அல்ஹுசைனி பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியராக பணியாற்றினார். அதன் ஆரம்ப பிரிவின் வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்புச் செய்தார். அங்கு ஆசிரியராக பணியாற்றுகின்றபோது பாடவிதான அபிவிருத்தி நிலையத்தோடு (தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்படுவதற்கு முன்) தொடர்புகளை வைத்திருந்தார் இணைந்து பணியாற்றினார். தேசிய கல்வி நிறுவகம் உருவாக்கப்பட்டதன் பின்னர் அதன் ஆரம்ப பிரிவுக்கான உதவிச் செயற்திட்ட அதிகாரியாக இணைந்தார். பின்னர் செயற்திட்ட அதிகாரி, பிரதம செயற்திட்ட அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார்.

அங்கு பணியாற்றுகின்றபோது பங்களாதேஷுக்குச் சென்று அங்குள்ள ஆரம்ப கல்வித் துறையை அவதானித்து துறைசார் அனுபவத்தைப் பெற்று பங்களிப்புச் செய்தார்.

தேசிய கல்வி நிறுவகத்தில் பணியாற்றும் போது சமாதானக் கல்வி என்ற ஒரு பகுதி இருந்தது. அதிலும் அவர் தனது ஆழ்ந்த ஈடுபாட்டை வெளிப்படுத்தினார். தேசிய கல்வி நிறுவகத்தில் ஆரம்ப பிரிவுக்கான பிரதம செயற்திட்ட அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்த அதேநேரம் இஸ்லாம் பாடத்திற்கான ஒருங்கிணைப்பாளர் வெற்றிடம் நிலவியது. அந்த வெற்றிடம் நிரப்பப்படும் வரை அந்தப் பொறுப்புகளும் இவரிடமே ஒப்படைக்கப்பட்டன. அதனையும் மிகச் சிறப்பாக மேற்கொண்டார்.

அவர் இஸ்லாம் பாடத்தில், ஷரீஆ துறையில் புலமை பெற்றிருக்கா விட்டாலும் இஸ்லாத்தில், ஷரீஆ துறையில் ஆழ்ந்த புலமை பெற்றவர்களை, ஆலிம்களை இனங்கண்டார். அவர்களை வீடு தேடிச் சென்று சந்தித்தார். இதன் முக்கியத்துவம் குறித்து தெளிவுபடுத்தினார். இஸ்லாம் பாட கலைத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி கைவேடு என்பவற்றைத் தயாரிப்பதில் அவர்களது பங்களிப்பைப் பெற்று தனது பொறுப்புக்களை கச்சிதமாக செய்து முடிக்க வேண்டுமென்பதில் குறியாக இருந்தார்.

நடைமுறையிலுள்ள அஹதிய்யா பாடத்திட்டத்தை வடிவமைப்பதில் கணிசமான பங்களிப்புகளை நல்கியவர் அவர். மட்டுமன்றி, அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வந்தார். எல்லோருடனும் மிகவும் அன்பாக பழகும் அவர், பிறருக்கு உதவுவதில் முன்நிற்பவர்.

கொழும்பு லாஹிரா கல்லூரியில் ஆரம்ப பிரிவு ஆசிரிய பயிற்றுவிப்பாளராக இணைந்து அங்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கினார்.

2002ஆம் ஆண்டில் சவூதி மன்னரின் அழைப்பில் இலங்கையிலிருந்து ஹஜ்ஜுக்கு சென்ற 20 விருந்தினர்களில் ஒருவராக இருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் பெற்ற அவர், சுகயீனத்தையும் பொருட்படுத்தாமல் மே முதல் வாரம் தனது குடும்பத்தாருடன் உம்ராவை நிறைவேற்றுவதற்கு மக்கா சொல்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

எஸ்.எம்.ஆர். சூதீன் ஆசிரியர் சில மாதங்களாக புற்றுநோய்க்கான சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையில் கடந்த 27.04.2017 அன்று பகல்பொழுதில் உலகிலிருந்து விடைபெற்றார். அப்போது அவருக்கு வயது 65. அன்னாரது அத்தனை நற்பணிகளையும் கல்விப் பணிகளையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக! அன்னாருக்கு புனித உம்ரா கிரியை நிறைவேற்றிய கூலியை வழங்குவானாக!

-ஜெம்ஸித் அஸீஸ்

# ஆட்சிபீட பேராசைக்காரர்களே பேரீச்சம்பழ புரளி கிளப்புகின்றனர்

## தே.ஐ.முன்னணி தலைவர் அசாத் சாலி

(வத்துகாமம் நிருபர்)

இன்று நாட்டில் காணப்படுகின்ற அநேக பிரச்சினைகளின் பின்னணியில் ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்ற பேராசைகொண்ட ராஜபக்ஷ குழுவினரே காணப்படுவதாக முன்னாள் மத்திய மாகாண சபை அங்கத்தவரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான ஆசாத் சாலி தெரிவித்தார்.

கண்டியில் வைத்து சனியன்று(13) வதும் உண்டு. அதற்கு அரசுடன் கதைத்து வரியற்ற விதத்தில் பெற்றுக் கொள்ளும் நடை முறை தொடர்ந்து காணப்படுகின்றது.

இதே போல் சைட்டம் பிரச்சினை புதிதாக ஆரம்பித்தது போல் காட்டப் படுகிறது. இதுவும் அதேபோல்தான். முன்னை ஆட்சியாளர் சைட்டமுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்கள். இன்று வேண்டாம் என்கின்றார்கள். டப்பட்டுக் காணப்படுகின்றன. அவற்றை குத்தகைக்கு வழங்குவதால் எமக்கு வருமானம் வருகிறது. அதேநேரம் போதிய கைவிருப்பை வைத்துக்கொள்ளவும் முடியும். அதற்காகாக திருகோணமலை துறைமுகத்தை விற்பதாக பொய் கூறி மக்களை திசை திருப்புகின்றனர்.

இன்று பாராளுமன்றில் எமக்காகக் குரல் கொடுக்க அனுப்பப்பட்ட 21 எம்.பிக்க உள்ளனர். அவர்களை 21 ஊமைகள்







ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாட்டில் அடிக்கடி பல்வேறு புரளிகள் ஏற்படுகின்றன. அதில் புதிதாக முஸ்லிம்களை சீண்டுவதற்கு பேரீச்சம்பழ புரளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேரீச்சப்பழங்களுக்கு இன்று நேற்றல்ல. எட்டு வருடங்களுக்கு முன்பிருந்தே வரி அறவிடும் நடைமுறை உண்டு. அதற்கு வரி விதிக்காவிட்டால் கசிப்பு தயாரித்தலுக்கும் அதனைப் பயன்படுத்துவார்கள். எனவே சாதாரண பாவனையாளர்களுக்கு வரி விதிப்பு புதிய விடயமல்ல. அதே நேரம் சவூதி அரேபியா போன்ற நாடுகள் பேரீச்சம் பழத்தை அன்பளிப்புச் செய்

அதேபோல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி என்னைக் குத்தை கொள்வளவு செய்யவே இங்கு வருவதாகவும் கறுப்புக் கொடி காட்ட வேண்டும் என்றும் பொது மக்களை தூண்டி விட்டு மறுபுறமாக அவருடன் பேச்சுவார்த்தை நடத்திய முன்னாள் தலைவரும் இருக்கத்தான் செய்கிறார். வெளியே பொது மக்கள் முன் மோடி வேண்டாம். இரகசியமாக அவருடன் கதைக்க முடியும். இது மக்களை தூண்டி விடும் நாடகமாகும்.

அதேபோல் திருகோணமலை எண்ணெய்க்குதம் பற்றி செய்தியும் உள்ளது. இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில் அமைக்கப்பட்ட குதங்கள் சும்மா கைவி

என்று அழைக்கவேண்டும். அவர்களது மௌனம் கலைவதே இல்லை. ஒரு முஸ்லிம் அமைச்சரிடம் என்ன கேட்டாலும் தம்பியிடம் கேளுங்கள் என்கிறார். அப்படியாயின் தனது தம்பியையே பாராளுமன்றம் அனுப்பி அமைச்சராக்கி இருக்கலாமே. இந்தியாவில் இருந்து பட்டதாரி ஆசிரியர்களை மலையகப் பாடசாலைகளுக்கு கொண்டு வரப்போவதாக அரசு கூறும் அதே நேரம் கிழக்கு மாகாண தமிழ் பட்டதாரிகள் தமக்கு வேலைகேட்டு ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். ஏன் கிழக்கு மாகாண பட்டதாரிகளை மலையகத்திற்கு ஆசிரியர்களாக நியமிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியலமைப்பு சவால் பற்றிய கருத்தரங்கில் கிரியல்ல, பிமல்

அரசியலமைப்புச் சவால் பற்றிய கருத்தரங்கொன்று இன்று மாலை 4.30 மணிக்கு கொழும்பு 10, தபால் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளன ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கில் பாராளுமன்றத்தின் சபை முதல்வரும், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் உரையாற்றுவர்.

நிகழ்வு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைவர் பீ.எம்.பாருக் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பொது மக்களும் கலந்து கொள்ள முடியும் என சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# அதிவேக வீதி விபத்து: பெண்ணொருவர் பலி

தெற்கு அதிவேக வீதியின் களனிகம பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் கொட்டாவயில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த வேன் ஒன்று முன்னால் பயணித்த கொள்கலனுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதன்போது படுகாயமடைந்த வேன் சாரதி மற்றும் இரு பெண்கள் களுத்துறை - நாகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளை, அதில் பெண்ணொருவர் பலியாகியுள்ளார்.

பத்தரமுல்லை, கோட்டை பிரதேசத்தை சேர்ந்த 46 வயதுடைய தமிலா கொடிதுவக்கு என்ற பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கக் கலக்கமே விபத்துக்கான காரணமாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு, உயிரிழந்த பெண்ணின் சடலம் நாகொடை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த வெள்ளிக்கிழமை (12) கண்டி ஜனாதிபதி மாளிகையில் நினைவுப் புத்தகத்தில் கைச்சாத்திடும்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டதை படத்தில் காணலாம். (படம் - ஷபீக் ஹுஸைன்)

# பிறை பார்ப்பதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கருத்தரங்கு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

பிறை பார்ப்பதில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் அதனை மக்களுக்கு தெளிவூட்டும் வகையிலான கருத்தரங்கு ஒன்றினை கொழும்பு பெரிய பள்ளிவாசல் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பிறைக் குழுவுடன் இணைந்து நேற்று கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிரதான மண்டபத்தில் பள்ளி வாசலின் தலைவர் சட்டத்தரணி நத்வி பகாவுதீன் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, பிறைப்பார்ப்பது எவ்வாறு, கண்ட பிறைகள் தொடர்பாக சாட்சிகளுடன் முடிவெடுப்பது அதில் ஏற்படும் தடங்கல்கள், குறைபாடுகளைத் தீர்ப்பது மற்றும் இஸ்லாமிய மாதங்களை தீர்ப்பதில் வானியலின் பங்கு ஆகிய தலைப்புக்களில் மௌலவி ஏ.எல்.எம்.ரிழா(அல்-மக்தூமி), மௌலவி எஸ்.ஐ.எம்.அஸ்மீர் (ஹுஸைனி), மௌலவி எம்.எச்.அப்துல் நாசர் (றஹ்மானி) ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு வருகை தந்தவர்களுக்கு விளக்கமளித்தனர்.

வரவேற்புரையை பெரிய பள்ளிவாசலின் தலைவர் சட்டத்தரணி நத்வி பகவுதீனும், தலைமை உரையை பிறைக் குழுவின் தலைவர் மௌலவி ஏ.டபிள்யு.எம்.நியாழ் (பாரி)யும், விஷேட உரையை பிறைக் குழுவின் பிரதித் தலைவர் மௌலவி ஜே. அப்துல் ஹமீட் (பஹ்ஜி)யும் அகில இலங்கை ஜமிய்யதுல் உலமா சார்பாக மௌலவி முக்சிதும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் சார்பாக ஏ.எஸ்.எம்.ஜாவிதும் உரை நிகழ்த்தினர். நன்றியுரையை கொழும்பு பெரிய பள்ளிவாசலின் மதீனதுல் இல்ம் அறபிக் கல்லூரியின் பிரதி அதிபர் மௌலவி எம்.எப்.அப்துல் அஸீஸ் வழங்கினார்.

இந்நிகழ்வின் சகல பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், ஷாவியாக்கள் மற்றும் மேமன் சங்கப் பிரதிநிதிகள், புத்தி ஜீவிகள், மார்க்க அறிஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# மியன்மாரை ஜனநாயக அரசாக மாற்ற இலங்கையின் ஒத்துழைப்பு வேண்டும்

## மியன்மார் அரச தலைவி அவுன் சான் சூகீ



மியன்மார் அரசை ஜனநாயக அரசாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், பாராளுமன்றத்தை சக்திமிக்கமுறையில் உருவாக்கி கொள்வதற்கும் இலங்கை அரசின் அனுபவங்களை ஒத்துழைப்பாக பெற்றுதரும்படி மியன்மாரின் அரச தலைவி அவுன் சான் சூகி கேட்டுகொண்டுள்ளார்.

சீனா பீஜிங் நகரில் நேற்றையதினம் ஆரம்பமான 'ஒரே கரையோரம் ஒரே பாதை' என்ற மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேநேரம், மியன்மாரில் பிரதானமாக சவாலாக சக்தியுள்ள ஜனநாயக முறையை உறுதிப்படுத்துகொள்ளுதல் அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில், இலங்கை அரசினால் பெற்றுகொடுக்கக்கூடிய அனைத்து ஒத்துழைப்புக்களையும் பெற்றுகொடுக்க தாம் தயார் என்றும், இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை மியன்மாருக்கு விஜயம் மேற்கொள்ள தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்தோடு, அவுன் சான் சூகியை இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளுமாறு பிரதமர் அழைப்பு விடுத்ததோடு, இலங்கைக்கு வந்து கண்டி நகரை பார்வையிடவேண்டும் என்றும் அவுன் சான் சூகி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், சாகல ரத்நாயக்க, மலிக் சமரவிக்ரம, மற்றும் பிரமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, சீனாவிற்கான இலங்கை தூதுவர் கருணாசேன கொடிதுவக்கு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# சாதாரண பரீட்சையில் சித்தியடையாத 4000 மாணவர்கள்; உயர்தரத்தில்

கடந்த டிசம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரணப்பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களை எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் உயர்தர வகுப்புகளில் இணைத்துகொள்ள கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதனடிப்படையில், கடந்த கல்வி பொதுத் தராதர பரீட்சையில் 4 ஆயிரம் மாணவர்கள் சித்தியடையவில்லை. சித்தியடையாத மாணவர்களின் நன்மை கருதியே இவ்வாறானதொரு நடவடிக்கை கல்வியமைச்சால் எடுக்கப்பட்டது.

4 ஆயிரம் மாணவர்களுக்கு உயர்தர வகுப்பில் தொழிற் கல்வி வழங்கும் நோக்கில் 40 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டில் பத்தாயிரம் மாணவர்களுக்கு உயர்தர வகுப்பில் தொழிற் கல்வி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களையும் உயர்தர வகுப்பில் இணைத்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சகல மாணவர்களுக்கும் 13 வருட கட்டாயக் கல்வி வழங்கும் வேலைத் திட்டத்திற்கு அமைய புதிய நடைமுறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



ஐக்கிய நாடுகள் வெசாக் வைபத்தில் நிறைவு நாள் விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்துள்ள நேபாள ஜனாதிபதி பிந்தியா தேவி பண்டாரிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட விருந்துபசாரம் ஒன்றினை நேற்று காலை வழங்கினார். இந்த விருந்துபசாரம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ச மற்றும் தலதா அத்துக்கோரள உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்: ஜனாதிபதியுடன் இன்று பேச்சு

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பாக மற்றுமொரு விசேட பேச்சுவார்த்தையொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் கொழும்பு கம்பஹா உள்ளிட்ட 12 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதற்காக சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்தியர்களுக்கும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைத்து தரப்பினருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருப்பதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்தது.

இந்த வருடத்தில் இதுவரையில் நாடு முழுவதிலும் 44 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, இதில் 80 பேர் உயிரிழந்துள்ளனர்.

மழையுடன் கூடிய காலநிலையுடன் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டிருந்தது. இதனால் டெங்கு டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் அப்பிரிவு சுட்டிக்காட்டியது.

# காற்றுடன் மழை பெய்யும்

(பா.மலர்ம்பிகை)

நாட்டின் வட பிராந்தியங்களில் எதிர்வரும் சில தினங்களுக்கு மணிக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் அதிகமாக கடும் காற்று வீசும் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி மொஹமட் சாலிஹின் தெரிவித்தார்.

தென்மேல் பருவப்பெயர்ச்சி காலநிலை ஆரம்பிக்கவுள்ளதால் நாட்டில் மேற்கு, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யவுள்ளதோடு, பிற்பகல் 2 மணியின் பின்னர் பெரும்பாலான இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும். கடல்



காற்று 1 மணித்தியாலயத்துக்கு 30-40 மீற்றர் வேகத்தில் தென்மேற்கு திசையை நோக்கி வீசும். புத்தளம் தொடக்கம் காலியூடாக பொத்துவில் வரை பலத்த காற்று வீசி மழையை எதிர்பார்க்க முடியும்.

இதனால் மீனவ தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக கவனத்துடன் செயற்படுவது நல்லது என வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி மொஹமட் சாலிஹன் குறிப்பிட்டார்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
15TH MAY 2017 - MONDAY

# மோடி வருகையால் பலமடையும் இந்திய - இலங்கை உறவு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ளார். இலங்கையில் நடைபெற்ற சர்வதேச வெசாக் நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதற்காகவே, நரேந்திர மோடி இலங்கை வந்திருந்தார். இப்போது, சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளின் நிறைவு விழாவில் பங்கேற்பதற்காக நேபாளின் ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி இலங்கை வந்துள்ளார்

தெற்காசிய பிராந்தியத்தின் பலம்வாய்ந்த நாடுகளில் ஒன்றான இந்தியாவின் பிரதமர் என்ற வகையிலும், இலங்கையின் அயல் நாடு என்ற வகையிலும், இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக, அரசியல், பொருளாதார முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கின்றது.

இலங்கை – இந்திய உறவு வரலாற்றுக் காலம் முதல் மிகவும் பலமாக இருந்து வந்தபோதும், சமீப காலமாக அதில் சில தளர்வுகளும், பிரச்சினைகளும் அவ்வப்போது எழுந்து வந்திருந்தன. எனினும், இப்போதைய நல்லாட்சி அரசின் கீழான வெளியுறவுக் கொள்கைகள் மிகவும் சிறந்த நிலையை எட்டியுள்ளதால், இந்தியாவுடனான உறவு மிகவும் பலம்வாய்ந்ததாக மாறியுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விஜயம், சர்வதேச வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்காக அமைந்திருந்தபோதும், மலையகத்தில், இந்திய வம்சாவளி தமிழர்களை சந்திப்பதும், அவரது பயணத்தின் ஓர் அங்கமாக இருந்தது.

இந்தியாவின் செலவில் அமைக்கப்பட்ட டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை திறந்து வைத்து உரையாற்றிய, நரேந்திர மோடி, இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கை பொருளாதாரத்தில் ஆற்றிவரும் பங்களிப்பு குறித்தும் பேசியுள்ளார்.

உண்மையில், இந்திய வம்சாவளி தமிழர்கள்தான், இலங்கையின் தேயிலைத் தொழிற்துறையின் முதுகெலும்பாக இருக்கின்றனர். தேயிலை என்றால் சிலோன், சிலோன் என்றால் தேயிலை என்ற நிலைக்கு இலங்கையின் நாமத்தை சர்வதேசத்திற்கு கொண்டு சென்றதில், இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு மிகப் பெரும் பங்குள்ளது.

இந்த வகையில், தம் பூர்வீக நாட்டின் அரச தலைவர் ஒருவர் தம்மை சந்தித்துள்ளது குறித்து இந்திய வம்சாவளி தமிழர்கள் சந்தோசமடைகின்றனர். அத்தோடு, இந்தியாவின் செலவில் வைத்தியசாலையொன்று அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளமையும் அவர்களை சந்தோசப்படுத்தியுள்ளது.

இந்தியாவின் செலவில் அமைக்கப்படவிருந்த வீடுகளின் எண்ணிக்கை, இப்போது 4000 இலிருந்து 10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது இந்திய இலங்கை உறவில் அதிகரித்து வரும் நம்பிக்கையையும், செல்வாக்கையுமே காட்டுகின்றது.

எமது பிரதமர் ரணில் விக்ரமசிங்க கடந்த ஆண்டு இந்தியா சென்றிருந்த போது பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களுக்காக வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியாவின் உதவியை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை போன்ற ஒரு நாடு தனியாக முன்னேறுவது சாத்தியம் குறைந்த ஒரு விடயமாகும். எனவே, பிராந்தியத்திலுள்ள பலம்வாய்ந்த நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளுடனான பலம்வாய்ந்த அரசியல், பொருளாதார உறவுகளைக் கட்டியெழுப்புவதன் மூலமே, இலங்கையை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லலாம்.

அதேவேளை, இலங்கையின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைப்பதற்கு வெளிநாடுகள் எடுக்கும் முயற்சிகள் தடுக்கப்பட வேண்டியவையாகும். இந்தியாவாக இருந்தாலும், அமெரிக்காவாக இருந்தாலும் இலங்கையின் உள்விவகாரங்களில் மூக்கை நுழைக்க பிரயத்தனம் மேற்கொள்வதாயின், அதற்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதற்கு அரசு தயங்கக் கூடாது.

அயல் நாடுகளுடனான உறவுகள் அரசியல், பொருளாதார நலன்களை மையப்படுத்தி அமைய வேண்டுமேயொழிய, நம் நாட்டை தாரைவார்த்துக் கொடுப்பதாக அமைந்துவிடக்கூடாது. இந்த விடயத்தை நல்லாட்சி அரசு நன்கு புரிந்து வைத்துள்ளது என்று நாம் நம்புகின்றோம்.

---

# பலமடையும் மஹிந்த அணி

ஏ.கே மிஸ்பாஹுல் ஹக்
சம்மாந்துறை

உலகம் முழுவதும் மே முதலாம் திகதி தொழிலாளர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந் நாளானது பலத்த போராட்டங்களின் பின்னர் தொழிலாளர்களின் உரிமைகள் வென்றெடுக்கப்பட்ட தினமாகும். அன்று தொடக்கம் இன்று வரை ஏனைய நாடுகளை விட இலங்கை நாடு அத் தினத்திற்கு விசேட முக்கியத்துவம் அளிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இது ஒரு வகையில் தொழிலாளர்களை கௌரவப்படுத்துவதாக அமைந்தாலும் தொழிலாளர் தினத்தில் தொழிலாளர்களின் விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படாது, அது அரசியல் களமாக மாறியிருப்பது அத் தொழிலாளர் தினத்தை அகௌரவப் படுத்துவதாகவும் அமைகிறது.தொழிலார் தினத்தில் தொழிலார்களை வெயிலில் வாட்டி வதைக்கும் நிகழ்வு அரங்கேறுவதும் கண்டிக்கத்தக்கதாகும். தொழிலாளர்கள் எனும் போது பல்வேறு மட்டத்தில் தொழிலாளர்கள் உள்ள போதும் அடிமட்ட தொழிலாளர்களை நோக்கிய பார்வையே மிகவும் அவசியமானது. இன்று இலங்கை நாட்டில் தொழிலாளர்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். மலையக தோட்ட தொழிலாளர்கள் தங்களது பல்வேறு தேவைகளை முன்னிறுத்தி பல வருடங்களாக தீர்வை எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.இலங்கையில் நிலவும் வறட்சி காரணமாக 14 மாவட்டங்களை சேர்ந்த ஒன்பது இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந் நிகழ்வு நடைபெற்ற சமகாலத்தில் வறட்சி நிலவுவதன் காரணமாக அடிமட்ட தொழிலாளர்களான விவசாயிகளுக்குதகுந்த நிவாரணம் வழங்குவதுபற்றியதான கருத்தாடல்கள் சென்றிருக்க வேண்டும். அவைகள் பற்றியெல்லாம் அரசியல் கட்சிகள் சிறிதும் கவனத்திற் கொண்டிருக்கவில்லை.

இலங்கையில்தொழிலாளர்களின் உரிமைகளை முன்னிறுத்தி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் நாளாந்தம்மேற்கொள்ளப்படுகின்றன. அவைகளை கட்டுப்படுத்தவென்றே பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையிலான தனியான பாதுகாப்பு பிரிவு அமைக்கவும் சிந்திக்கப்படுகிறது. எதிர்காலத்தில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டங்களை செய்ய தொழிற் சங்கங்கள் தயாராகி வருவதாகவும் அறிய முடிகிறது. இப்படி இலங்கை தொழிலாளர்களுக்கு ஆயிரம் தேவைகள் உள்ள போதும் அவற்றை பற்றியெல்லாம் பேசாமல் அரசியல் பேசி மகிழ்ந்தமையானது மரண வீட்டில் திருமணக் கதை கதைப்பது போன்றே உள்ளது.நடைபெற்ற மே தின நிகழ்வுகளிலுள் ஜாதிக ஹெல உறுமயவானது அடிப்படை வசதிகளற்ற தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு ஒன்றிணைவோம் என்ற தொனிப் பொருளில் நடாத்தி சற்றுதொழிலாளர்களை நினைவு கூர்ந்திருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியினரின் மே தின கூட்டத்தில் தொழிலாளர்களின் அர்ப்பணிப்புக்களை வெளிக்காட்டும் வகையிலான அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள் இடம் பிடித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது. இவர்களின் கூட்டத்தில் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தலைமையிலான தனியான பாதுகாப்பு பிரிவு அமைப்பது தொடர்பிலான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. இதற்கு பதில் அளித்துள்ள ஜனாதிபதி மைத்திரி அரசியல் நோக்கோடு நடாத்தப்படும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்தவே இப் பாதுகாப்பு பிரிவை அமைக்கவுள்ளதாக கூறியுள்ளார்.

அவ்வாறானால் ஓர் ஆர்ப்பாட்டம் நிகழும் போது அது அரசியல் இலாபம் கொண்டது என உறுதி செய்த பின்பு தான் இப் பிரிவு அதனை கட்டுப்படுத்த செல்ல வேண்டும். ஓர் ஆர்ப்பாட்டம் அரசியல் இலாபம் கருதி மேற்கொள்ளப்படுகிறது என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் கிடைத்தால் அதனை மக்களிடம் வெளிப்படுத்தினாலேயே அவ் ஆர்ப்பாட்டம் தானாகவே பிசு பிசுத்து போகும்.ஜனாதிபதி முன் வைக்கும் காரணம் ஏற்க முடியாததாகும். இதனூடாக இவ்வரசு தாங்கள் ஆர்ப்பாட்டங்களினூடாக பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளோம் என பகிரங்கமாக வெளிப்படுத்துகிறது. எதிர்வரும் காலங்களிலாவது குறைந்தது தொழிலாளர் தினங்களில் தொழிலார்களின் விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி தொழிலாளர்களை அரசியல் கட்சிகள் கௌரவப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

இலங்கையில் இடம்பெறும் மே தின நிகழ்வுகளை அரசியல் கட்சிகள் தங்களது மக்கள் பலத்தை வெளிக்காட்டவே பயன்படுத்தி வருகின்றன. ஆட்சி மாற்றத்திற்கு முன்பு இடம்பெற்ற தொழிலாளர் தினங்களுக்கும் ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு இடம்பெற்ற தொழிலாளர் தினங்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடுகளுள்ளன. ஆட்சி மாற்றத்திற்கு முன்பு மிக நீண்ட காலமாக சு.க,ஐ.தே.க,ம.வி.மு ஆகியனவே தங்களது மக்கள் பலத்தை நிரூபிப்பதன் மூலம் தங்களது மக்கள் செல்வாக்கை வெளிக்காட்டின. ஆட்சி மாற்றத்தின் பிற்பாடு சு.க இரு அணிகளாக பிரிந்ததன் காரணமாக சு.க,ஐ.தே.க,முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான பொது கூட்டணி,ம.வி.மு ஆகிய குழுவினரிடையே பலத்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.இதில் மஹிந்த ராஜபக்ஷவின் மக்கள் செல்வாக்கு எவ்வாறு அமையும் என்பதே அனைவரினதும்பலத்த எதிர்பார்ப்பு எனலாம். ஆட்சி மாற்றம் நிகழ்ந்த வருடமான 2015ஆம் ஆண்டு மஹிந்த அணியினர் கிருலப்பனையில் ஒரு மே தின கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை. இருப்பினும் இக் கூட்டம் இடம்பெற்ற இடத்திற்கு அருகாமையில் சென்று அவர் திரும்பி வந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன. அவ் வருடம் இந் நிகழ்வை பிரமாண்டமாக ஏற்பாடு செய்யும் வகையில் மஹிந்த அணியினர் பலம் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை.இதில் பெருமளவான மக்கள் கலந்து கொள்ளாமையால், இதில் மஹிந்த ராஜபக்ஸ கலந்து கொண்டிருந்தால் அவரது மக்கள்செல்வாக்கை குறைத்துக் கொள்ளச் செய்திருக்கும். இது ஆட்சி மாற்றம் நிகழ்ந்து ஒரு சில மாதங்களில் இடம்பெற்ற நிகழ்வு என்பதால் மஹிந்தவின் பின்னால் அணி திரள பலர் அஞ்சிக் கொண்டிருந்தனர். இந் நிகழ்வின் பெருமளவான மக்கள் கலந்து கொள்ளாமையினால்,இந் நிகழ்வு மஹிந்த அணியினரின் மக்கள் செல்வாக்கை ஏளனம் செய்த ஒன்று எனலாம்.இருந்தாலும் இன்று மஹிந்தவின் பின்னால் மக்கள் அலை திரண்டு செல்வதற்கு காரணம் இவ்வாறான ஏளனங்களை எல்லாம் தாங்கிக் கொண்டு அவர்கள் பயணித்தமையே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அவ்வாண்டு ஐ.தே.கவும்,சு.கவும் மஹிந்த ராஜபக்ஷவின் சவால் இல்லாமையின் காரணமாக பலத்த மகிழ்ச்சியில் மே தினத்தை கொண்டாடின.

2016ஆம் ஆண்டுமே தினமானது இலங்கை மக்களின் பலத்த எதிர்பார்ப்பை பெற்றிருந்தது. அவ்வருடமானது மஹிந்த ராஜபக்ஸ தனது பலத்தை உணர்ந்து இவ்வாட்சியை கவிழ்க்க தனது திட்டங்களை ஒவ்வொன்றாக அவிழ்த்து விட்டு இவ்வாட்சிக்கு சவால் விடுத்துக் கொண்டிருந்த காலமாகும். அவர்அவ்வாண்டு தனித்து தொழிலாளர் தினத்தை நடாத்துவார் என்று அனைவரும் நம்பினார். 2015ம் ஆண்டு மஹிந்த அணியினரின் மே தினத்தை சவாலாக கருதாதவர்கள் 2016ஆம் ஆண்டய மஹிந்த அணியினரின் மே தினத்தை தங்களுக்கான சவாலாக கருதி செயற்பட்டனர். மஹிந்த அணியினர் மே தினத்திற்கு முன்பேஇவ்வரசை கவிழ்ப்பதற்கான நிகழ்வுகளை பல்வேறு இடங்களிலும் நடாத்திக் கொண்டிருந்தார்.இவற்றினூடாகஇம் முறை தாங்கள் மே தினத்தை தனித்து நடாத்தினால் பாரிய வெற்றியை பெறாது போனாலும் தோல்வியை சந்திக்க மாட்டோம் என்ற செய்தியை பெற்றுக்கொண்டனர். மஹிந்த ராஜபக்ஷ,தனியாக மே தினத்தை நடாத்தாமல் தடுக்க பல்வேறு முயற்சிகள் நடாத்தப்பட்டன.2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மஹிந்தவின் புதல்வர் யோசித்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தார்.மார்ச் மாதமளவிலேயே அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது. இன்னும் மஹிந்த குடும்பத்தினர் கைது செய்யப்படலாம் என்ற அச்சம் நிலவியது. அன்று குறித்த மே தினத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வதா என்பது கூட சற்று சந்தேகமாகவே இருந்தது.இதில் கலந்து கொள்வோருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென சு.கவினால் எச்சரிக்கப்பட்டுமிருந்தது. இவ்வாறான தடைகள் அனைத்தையும் கவனத்திற் கொள்ளாமலேயே அன்று மஹிந்த ராஜபக்ஸ தனியாக மே தினத்தை நடாத்திக் காட்டியிருந்தார். அவ் ஆண்டு அவர் நினைத்தளவு மக்களை திரட்ட முடியாது போனாலும் தோல்வியை சந்திக்கவில்லை எனலாம். இந் நிகழ்வினூடாக இன்னும் சிறிது முயற்சி செய்தால் அவர் தனது இலக்கை அடையலாம் என்பதை புரிந்து கொண்டார். இதன் பின்னரான அவர்களது செயற்பாடுகள் மிகவும் வீரியத்துடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது.அவ்வாண்டு அவர் அவர்களது அணியினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொள்வதில் சற்று உறுதியாக இல்லாமல் இருந்தமையே அவர் இவ்வரசின் எச்சரிக்கைகளுக்கு சிறிது அஞ்சியதை எடுத்துக் காட்டுகிறது.

எதிர்வரும் மே தினத்திலுள் இலங்கை அரசு மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்தியே ஆக வேண்டும். இன்னும் இவற்றை இழுத்தடிக்க முடியாது. இவ்வருடம் இடம்பெற்ற மே தினத்தில் பிரதான அரசியல் கட்சிகள் கூட்டும் மக்கள் எண்ணிக்கை எதிர்வரும் தேர்தல்களின் முடிவில் மிகவும் தாக்கம் செலுத்தும். இதன் காரணமாக பிரதான அரசியல் கட்சிகளின் மக்களை ஒன்று திரட்டும் முயற்சி தீவிரமாக இருந்தது.இவ்வருடம் மஹிந்த ராஜபக்ஷ முன்னர் போன்றல்லாது சிறிதும் அச்சமின்றி முழு மூச்சுடன் மே தின விடயங்களை முன்னெடுத்தார். இதனைதனது பலத்தை நிரூபிக்கும் ஒன்றாகவும் கருதினார். பொதுவாகஅரசியல் கட்சிகள் சிறிய பரப்பிலுள் கூட்டமொன்றை நடாத்தி, அங்குசன நெரிசலை ஏற்படுத்தி, மக்கள் அதிகம் கலந்து கொண்டதான தோற்றத்தை ஏற்படுத்தி தங்களது ஆதரவாளர்களை மகிழ்ச்சிப் படுத்துவதோடு உளவியல் ரீதியாக பலப்படுத்திக் கொள்வர். இருந்தாலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது மே தினத்தை நடாத்துவதற்கு காலி முகத்திடலை தெரிவும் செய்தார். முதலில்இவ் இடத்தை தெரிவு செய்ததற்கே அலாதித் துணிவு வேண்டும். மஹிந்த ராஜபக்ஷ காலி முகத் திடலை தெரிவு செய்தமையை மஹிந்தவுக்கு எதிரான அணியினர் தங்களுக்கு சாதகமான விடயமாக கருதினர். காலி முகத் திடல் 18 ஏக்கர் பரப்பளவு கொண்ட மிகப் பெரும் நிலப் பரப்பு என்பதால் அதனை மக்களால் நிரப்புவது சாதாரண விடயமல்ல எனவும் கருதினர். சஜித் பிரேமதாசா போன்ற ஐக்கிய தேசிய கட்சியின் உயர் மட்டத்தினர் முடிந்தால் காலி முகத்திடலை நிரப்பிக் காட்டுமாறுமஹிந்த அணியினருக்கு பகிரங்கசவால் விட்டனர். மஹிந்த அணியினர் இம்முறை இடம்பெற்ற மே தினத்தின் போது தனது எதிரணியினரின் முகத்தில் கரியை பூசி அதனை நிரப்பி காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனை யாராலும் மறுக்க முடியாது. கடந்த ஒரு வார காலமாக இலங்கை மக்களின் வாய்களில் மஹிந்த ஒன்று கூட்டி காட்டிய மக்கள் எண்ணிக்கை பற்றிய கதைகளைத் தான் அவதானிக்க முடிந்தது. அதே நேரம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க போன்றோர் மக்களை திரட்டுவதால் ஆட்சி மாறாது என கூறி மகிந்தவின் மக்கள் செல்வாக்கை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.



2016ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சி நடாத்திய மே தின கூட்டத்தின் போது 75,000 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். அவ் வருடம் ஐ.தே.க ஒன்று கூட்டிக் காட்டிய மக்கள் எண்ணிக்கையானது ஏனைய கட்சிகள் ஒன்று கூட்டிக் காட்டிய மக்கள் எண்ணிக்கையை சிறிதும் எட்டாத காரணத்தால் ஐக்கிய தேசிய கட்சி தனது மக்கள் செல்வாக்கை உறுதியாக நிலை நிறுத்திக்கொண்டது. இவ் வருடம் 65000 மக்கள் கலந்து கொண்டிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் எண்ணிக்கையானது 13.33 வீதத்தால்வீழ்ச்சி கண்டுள்ளது.இது மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது நம்பிக்கையிழந்து ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் ஓர் இருண்ட யுகத்தை நோக்கி பயணிப்பதை எடுத்துக் காட்டுகிறது. கடந்த முறை இடம்பெற்ற மே தினத்தில் மைத்திரி தலைமையிலான சு.க, முப்பதாயிரம் அளவிலானோரை ஒன்றுகூட்டி இருந்தது. இம் முறை 58000 பேரை ஒன்று கூட்டியுள்ளது. இது 93.33 வீத அதிகரிப்பாகும். கடந்த ஆண்டு மஹிந்த அணியினர் இருபத்தையாயிரம் அளவிலானோரை ஒன்று கூட்டி இருந்தனர். இம்முறை ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோரை ஒன்றுகூட்டி இருந்தனர். இது 300வீத அதிகரிப்பாகும். இவ் இரு வருட மக்கள் எண்ணிக்கையானது பல்வேறு விடயங்களை கட்டிக் காட்டுகின்றது. தற்போது முன்னாள் ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஸவிடம் எந்தவிதமான அரசியல் அதிகாரங்களுமில்லை.ஏனைய ஐ.தே.க,சு.க அணியினரிடம் அனைத்து அதிகாரங்களும் உள்ளன.இவ்வாறான நிலையில் இவர்கள் அனைவரையும் புறந்தள்ளி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிகமான மக்களை ஒன்று கூட்டியுள்ளமை அவர் எட்ட முடியாத மக்கள் ஆதரவை தன் வசப்படுத்தியுள்ளார் என்பதை எடுத்து காட்டுகிறது.இம் முறை ஒன்று கூடியுள்ள மக்கள் எண்ணிக்கையை வைத்து நோக்கும் போது ஐக்கிய தேசிய கட்சியின் மக்கள் எண்ணிக்கையில் சிறிதளவே குறைவு உள்ளது. சு.காவின் மக்கள் எண்ணிக்கையில் பல மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது சு.கவின் ஆதரவாளர்கள் கடந்த முறை யாரை ஆதரிப்பது என்ற சிந்தனையில்லவரையும் ஆதரிக்காது நடுநிலை பேணியுள்ளனர். இம் முறை அனைவரும் ஒரு முடிவெடுத்து எவரையாவது ஆதரிக்க வேண்டும் என்ற ரீதியிலும் சிந்திக்க தோன்றுகிறது. கடந்த வருடம் ம.வி.மு 7,000 அளவிலானோரையே ஒன்று கூட்டி இருந்தது. இவ் வருடம் 20,000 அளவிலானோரை ஒன்று கூட்டி காட்டியுள்ளது. இவ்விடயமானது ம.வி.மு பாரிய வளர்ச்சி கண்டு வருவதை அறிந்து கொள்ளச் செய்கிறது. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் மீது நம்பிக்கை இழந்த மக்கள் இவ்வாட்சியை கொண்டு வந்தார்கள். அன்றைய ஆட்சியை விட இன்றைய ஆட்சி ஒப்பீட்டளவில் மோசமாகவே உள்ளது. இதன் காரணமாக இவ்விரு ஆட்சியாளர்களின் மீது வெறுப்புக் கொண்டு இலங்கை மக்கள் மூன்றாவது தெரிவான ம.வி.மு பக்கம் தங்களது பார்வைகளை திருப்புவதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மைத்திரிதலைமையிலான சு.க அணியினரே ஐ.தே.கவின் மக்கள் எண்ணிக்கையை நெருங்கியுள்ளனர். ஒரு கோணத்தில் நோக்கினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூட்டிய மக்கள் எண்ணிக்கையும் சு.கவின் மக்கள் எண்ணிக்கையாக குறிப்பிடலாம். காலியில் இடம்பெற்ற மே தின கூட்டமும் எங்களுடையதென ஸ்ரீ.சு.க கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை இரண்டையும் ஒன்று சேர்த்து நோக்கினால் ஐக்கிய தேசிய கட்சியை விட பல மடங்கு மக்கள் பலத்தில் சு.க உள்ளது எனலாம். சுதந்திர கட்சியானது இலங்கையின் பழம்பெரும் கட்சிகளில் ஒன்று. இக் கட்சியை உயர் நிலைக்கு கொண்டு போராடியவர்கள் இக் கட்சியை அழியாமல் பாதுகாக்கும் சிந்தனையில் இருப்பார்கள். அன்று மைத்திரி சு.கவை உடைத்து வெளியேறிய போது மஹிந்த மீது பூரண திருப்தி இல்லாத போதும் சு.க தோல்வியை சந்திக்கப்போகின்றதே என மேடையில் அழுதவர்களும் உள்ளனர். இன்று மைத்திரி தலைமையிலான சு.கவில் உள்ளவர்களில் அதிகமானவர்கள் கட்சி பற்றாளர்களே தவிர மைத்திரி அணியினர் அல்ல. அதிலுள்ள மேலும் சிலர் பதவியை நோக்காக கொண்டவர்களே. இவர்கள் அனைவருக்கும் மீண்டும் சு.கவுடன் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஸ இணைவதே சிறந்ததாகும். அப்போதுதான் கட்சிப் பற்றாளர்கள் கட்சியை பாதுகாப்பார்கள், பதவி மீது பற்றுக்கொண்டவர்கள் பதவிகளை பாதுகாத்து கொள்வார்கள். தொழிலாளர் தினம் இடம்பெற்ற மறு தினமே மைத்திரியையும் மஹிந்தவையும் இணைப்பது தொடர்பிலான முயற்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியாக சு.கவை சேர்ந்த மைத்திரி இருந்தாலும் நாட்டின் அதிகாரம்மிக்க செயற்பாடுகளில் பிரதமரே ஈடுபட்டு வருகிறார்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியை விட சு.க பல மடங்கு மக்கள் பலத்தில் உள்ள போது ரணிலுக்கு இத்தனை அதிகாரங்கள் இருப்பதை சு.கவை சேர்ந்தவர்களால் ஜீரணிக்க முடியாது. பல விடயங்களில் ரணிலும் மைத்திரியும் மோதிக் கொள்வதை அவதானிக்க முடிகிறது. இதன் பிற்பாடு மோதல் ஏற்படும் போதெல்லாம் சு.கவுடன் மகிந்தவை இணைத்து ஆட்சியமைக்கும் சிந்தனைகள் சு.கவினரிடையே எழும். ஜனாதிபதி மைத்திரியை பொறுத்தமட்டில் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொள்வது மிகவும் ஆபத்தானது. மகிந்தவின் இத்தனை வீழ்ச்சிக்கும் இவரே பிரதான காரணகர்த்தாவாவார்.அவரை மஹிந்த ராஜபக்ஸ மன்னித்து கொள்வார் என்று நம்பினால் அவரைப் போன்ற ஏமாளியாக யாரும் இருக்க மாட்டார்கள். இவருடைய செயற்பாடுகள் ஐ.தே.கவுடனான தனது பயணத்தை மீண்டும் உறுதி செய்து கொள்வதாக அமையும்.மே தினத்தை தொடர்ந்து இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஐ.தே.காக்கும் சு.கவுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை களைவதற்காக மைத்திரியினால் ஒரு யோசனை முன் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த மக்கள் எண்ணிக்கையை எதிர்கொள்ளுமளவு ஐக்கிய தேசிய கட்சிக்கும் பலமில்லை.அவர்கள் தங்களது ஆட்சியை உறுதி செய்து கொள்ள மைத்திரியுடன் பயணிப்பதே பொருத்தமானது.

இத்தளவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு மக்கள் செல்வாக்கு அதிகரிக்க என்ன காரணம் என்பது மிகவும் ஆழமாய் சிந்திக்க வேண்டிய பகுதியாகும்.

(தொடர் 11 ஆம் பக்கம்)

# 2000 கறவைப் பசுக்கள் பண்ணையாளர்களிடம் கையளிப்பு



(கிண்ணியா ஏ.ஆர்.எம்.றிபாஸ்)

கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சினூடாக நேற்றுமுன்தினம் (13) திருகோணமலை சீனக் குடா அஷ்ரப் துறைமுகத்தில் 2000 கரவைப் பசுக்கள் நியூசிலாந்தில் இருந்து கொண்டு வரப்பட்டு ஊவா, மத்திய மாகாணங்களில் உள்ள பாற் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் போது அதிதிகளாக கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீ.கரீஸன், கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அமீர் அலி மற்றும் ஊவா, மத்திய மாகாண அரசியல் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இறக்குமதி செய்யப்பட்ட கரவைப் பசுக்கள் அமைச்சர்களினூடாக கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு பிரதி அமைச்சர் அமீர் அலி உரையாற்றுகையில், அரசாங்கத்தின் கீழ் 2000 இற்கு அதிகமான கரவைப் பசுக்கள் எங்களுடைய அமைச்சினூடாக இறக்குமதி செய்து கையேற்கின்ற வைபவத்திலே நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம் நியூஸிலாந்திலே இருந்து தருவிக்கப்பட்ட இந்த 2000 கரவைப் பசுக்களையும் இந்த நல்லாட்சி அரசாங்கத்திலேயே தாங்கள் மலையக மக்களுக்கு, குளிர்பிரதேசத்தின் இருக்கின்ற மக்களுக்கு வழங்குவதற்காக முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றோம் இந்த விடயத்திலே எங்களுடைய அமைச்சர் கரீஸன் எடுத்துக் கொண்ட அபரிதமான முயற்சிக்கு நான் இந்த இடத்திலே நன்றி கூற கடமைப் பட்டுள்ளேன். எதிர்காலத்திலே வடக்கிலும், கிழக்கிலும் இருக்கின்ற மக்களுக்காக உலர் வலய நாட்டிலிருந்து இவ்வாறான பசுக்களை இறக்கு மதி செய்து எங்களது அமைச்சினூடாக வழங்க இருக்கின்றோம் என்றார்.

## கல்பிட்டியில் சுவசக்தி கூட்டம்

(பாலாவி ஏ.ஏ.முனாப்)

கல்பிட்டி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பகுதிகளில் வாழும் அங்கவீனமுற்ற நபர்களின் சுவசக்தி அமைப்பு கூட்டம் 18 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் கல்பிட்டி பிரதேச செயலக காரியாலயம் பழைய கட்டட தொகுதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புத்தளம் மாவட்ட ஒழுங்கமைப்பு சமூக சேவை உத்தியோகத்தர் இக்கூட்டத்திற்கு வருகைத்தரவிருப்பதால் இதில் சம்பந்தப்பட்டவரோ அல்லது உங்கள் வீட்டின் பிரதிநிதி ஒருவரை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

### தொழுகை நேரங்கள்

15.05.2017

| சுபஹ் | ழுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|
| 4.34 | 12.08 | 3.30 | 6.20 | 7.34 |

கொழும்பை அண்டியுள்ள பகுதிகளுக்குரியது; ஏனைய பிரதேசங்களுக்கான நேர வேறுபாட்டை கவனத்திற்கொள்ளவும்

# தப்லீக் ஜமாஅத் மீதான கெடுபிடிகள் அதிகரிப்பு

**தளர்த்துவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்; எதிரணி பிரமுகர் இபாஸ்**



இலங்கையில் தப்லீக் ஜமாத்தினர் மீதான கெடு பிடிகளை தளர்த்துமாறு முஸ்லிம் அமைச்சர்கள் அரசுக்கு அழுத்தம் வழங்க வேண்டுமென பாணந்துறை முன்னாள் பிரதேச சபை தலைவர் இபாஸ் நபுஹான் குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

இன்றைய ஆட்சியில் இலங்கை நாட்டில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பான ஒவ்வொரு விடயமும் மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. எந்த வழிகளில் எல்லாம் முஸ்லிம்களை அடக்க முடியுமோ அத்தனை விடயங்களும் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறான செயற்பாடுகளில் ஒன்றாகவே வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் தப்லீக் ஜமாத்தினர் மீதான கெடுபிடிகள் அதிகரித்துள்ளதையும் நாம் காண்கிறோம்.

புனிதஇஸ்லாத்தை பரப்பும் நோக்கில் வெளிநாடுகளில் இருந்து தப்லீக் ஜமாத்தினர் இலங்கை வருவது வழமை. இவர்கள் பல ஆண்டு காலமாக இலங்கைக்கு மார்க்க பிரசாரம் பரப்பும் நோக்கில் வருகின்றனர். இதற்கு முன்பு ஒரு போதுமில்லாதவாறு இவர்களுக்கு விசா வழங்குவதில் உள்ள கெடு பிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு இலங்கை உளவுத் துறை அமைப்பின் கெடுபிடிகள் தப்லீக் ஜமாத்தின் கொழும்பு மர்கசினுள்ளும் அதிகமாக காணப்படுவதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் தப்லீக் ஜமாத்தினரின் செயற்பாடுகளினூடாக இஸ்லாம் பலரை சென்றடைந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வாறு இலங்கை அரசு செய்வதனூடாக இஸ்லாம் மார்க்கம் பரப்பப்படுவதை தடுத்தல் அவர்களது சிந்தனையாக இருக்கலாம். இதனை இயக்க வெறி பிடித்த சிலர் கணக்கில் எடுக்காமல் விடலாம். முஸ்லிம் என்ற காரணத்தால் இது நடைபெறுவதால் இதனை முஸ்லிம்கள் இலகுவாக கணக்கிட முடியாது. இவ் வரசு தனது இனவாத முகத்தை பல வடிவங்களில் வெளிப்படுத்துகின்ற போதும் முஸ்லிம்களும் முஸ்லிம் அரசியல் வாதிகளும் அவர்களின் வால் பிடித்தே அலைவது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான விடயங்களை முஸ்லிம் அரசியல் வாதிகள் நன்கு அறிந்திருந்தும் மக்களுக்கு வெளிப்படுத்தாமல் மௌனமாக உள்ளார்கள் என்பதே உண்மையாகும். இது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடைய ஆட்சி காலத்தில் நடந்தேறி இருந்தால் ஒரு சில முஸ்லிம் அரசியல் வாதிகள் தனக்கு முன்னால் ஆயிரக்கணக்கான மைக்குகளை வைத்து முன்னாள் ஜனாதிபதியை முஸ்லிம்களின் எதிரியாக எத்தெந்த வடிவில் எல்லாம் காட்ட முடியுமோ காட்டி இருப்பார்கள்.

இன்று அவர்கள் இவ்வாட்சியின் பங்குதாரர்களாக இருப்பதால் இதனை வெளிப்படுத்த ஆட்கள் பற்றாக் குறை நிலவுகிறது.

இலங்கைக்கு வரும் தஃவா பணியாளர்களை திருப்பி அனுப்பாமல் அவர்களுக்கு அவர்களுக்கு வீசா வழங்கக்கூடிய ஒரு பொறி முறையை உடனடியாக உருவாக்க வேண்டும்.

அதை விடுத்து அரசாங்கத்தின் உள்ளே இருக்கும் அமைச்சர்கள் ஆள் மாறி ஆள் அறிக்கை விடுவதனால் ஒன்றுமே நடக்கப் போவதில்லை.

# ரிஸான் நிலாமின் ஜனாஸா பெருந்திரளானோர் மத்தியில் நல்லடக்கம்







மூத்த ஊடகவியலாளரான எம்.ஏ.எம். நிலாமின் கனிஷ்ட புதல்வர் முஹம்மத் ரிஸானின் ஜனாஸா நல்லடக்கம் கடந்த வெள்ளியன்று காலை பெருந்திரளானோரது பிரசன்னத்துடன் கல்கொழுவை ஜூம்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் இடம்பெற்றது. அரசியல் பிரமுகர்கள் உலமாக்கள் ஊடகவியலாளர்கள் மற்றும் முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் பிரதேசவாசிகள் பெருந்தொகையானோர் ஜனாஸாத்தொழுகையில் கலந்து கொண்டனர்.

ஊடகவியலாளர் நிலாம் தன் மகனின் ஜனாஸா தொழுகையை நடத்தி வைத்தார். அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிஷாட், ஏ.எச்.எம். பௌசி பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மற்றும் முன்னாள் அமைச்சர்களான பசீர் சேகுதாவுத், ஏ.எச்.எம். அஸ்வர், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், உட்பட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் முக்கியஸ்தர்களும் ஜனாஸாவில் கலந்துகொண்டனர். இருபிள்ளைகளின் தந்தையான முஹம்மத் ரிஸான் இருத நோயினால் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த வியாழனன்று காலமானார்.

# பணிப்பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் ஆடைத் தொழிற்சாலை நிறுவும் திட்டம் வெற்றி

**கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர்**



(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்திலிருந்து வீட்டுப் பணிப்பெண்களாக வேலைவாய்ப்புப் பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்களுக்கு உள்ளூரிலேயே வேலை வாய்ப்பு வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட திட்டம் தற்போது வெற்றியளித்து வருவதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கு நாட்டுக்குச் செல்லும் பணிப்பெண்கள் அங்கு அனுபவிக்கும் துன்பங்களை நேரடியாகச் சென்று பார்த்ததில் நன்கு அறிந்து வைத்திருப்பதால் இந்தப் பெண்களின் அவல வாழ்வுக்கு வழிகாட்ட உள்ளூர் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைத் திட்டம் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு முதலமைச்சரின் எண்ணக்கருவுக்கமைய உருவாக்கப்பட்டு வரும் திருகோணமலை சம்பூர்-சீதனவெளி ஆடைத் தொழிற்சாலையை நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டபோது இந்தக் கருத்தை வெளியிட்டார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ளூர் பெண்களுக்குத் தொழில்வாய்ப்பையும் நாட்டுக்குப் பொருளாதார வருமானத்தையும் ஈட்டித் தருவதற்காக சர்வதேச தரத்திலான 3 ஆடைத் தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டம் வெற்றியளித்துள்ளது.

முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் நகரம் ஐயங்கேணியில் அமைக்கப்பட்டு கடந்த வருடம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ள சர்வதேச தரத்திலான ஆடைத்தொழிற்சாலை மற்றும் கைத்தறி ஆலைகளில் நேரடியாக சுமார் 500 பேரும் மறைமுகமாக சுமார் 200 பேரும் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அதேபோன்று தற்போது திருகோணமலை- சீதனவெளி, மற்றும் அம்பாறை, வங்காவடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வரும் பாரிய ஆடைத் தொழிற்சாலைகளில் நேரடியாக சுமார் 1000 பேரும் மறைமுகமாக சுமார் 600 பேரும் தொழில் வாய்ப்புப்பெறுவர்.

இதன் மூலம் கிழக்கு மாகாணத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகப் பெண்களின் நீண்ட காலத் துயரங்களுக்கு விடிவு கிடைப்பதோடு அவர்களது குடும்பத்திலும் மறுமலர்ச்சி ஏற்படும். இதுபோன்று இந்த ஆடைத் தொழிற்சாலைத் திட்டத்தையும் இன்னும்பல உள்ளூர் வளங்களைக் கொண்டு சர்வதேசத்திற்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பொருளாதார வலயங்களையும் உருவாக்கும் செயற்திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாக முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# ஆயித்திய மலைப்பகுதியில் 25 வீடுகள் நிர்மாணம்

(அஸ்லம் மௌலானா)

மட்டக்களப்பு ஆயித்தியமலைப் பிரதேசத்தில் 25 வீடுகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. நீர் விநியோகம் செய்வதற்கான குழாய்கள் பதிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில் அந்த பிரதேசத்துக்கான நீர் வழங்கப்படும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆயித்தியமலையில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டி சனிக்கிழமை (13) மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - விளையாட்டுப் போட்டிகள் மூலம் தலைமைத்துவ பண்பு மற்றும் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுகிறது. விளையாட்டில் அதிகம் ஈடுபடுகின்ற போது விட்டுக் கொடுப்பு சகிப்புத் தன்மை ஒற்றுமை வெற்றி தோல்வி ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு உருவாகிறது.

ஆயித்தியமலை பிரதேச மக்கள் குடி நீருக்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதை நான் அறிவேன் தற்போது ஆயித்தியமலை சந்திவரை நீர்க்குழாய் பதிக்கப்பட்டுள்ளது கரடியனாறு வரை செல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பிரதேசத்துக்கு விரைவாக குடிநீரை வழங்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

இந்த பிரதேச மக்கள் கல்வியில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் கல்வியால் மாத்திரமே ஒரு சமூகத்தை முன்னேற்றமடையச் செய்ய முடியும் பிரதேசத்திலும் பாடசாலையை கட்டியெழுப்புவதில் ஆர்வம் காட்ட வேண்டும். இந்த பிரதேசத்தில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளார்கள் அவர்களுடன் இணைந்து நல்ல விடயங்களை செய்ய வேண்டும் என்றார்.

# அட்டாளைச்சேனை கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்யும் வேலைத்திட்டம்



(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சுற்றாடலை பேணும் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை கடற்கரைப் பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டு அழகு படுத்தப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச சபை, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பிரதேச ஜம்இய்யதுல் உலமா சபை, அந்நபா கலாசார நிலையம் ஆகியன இணைந்து இச் செயற்திட்டத்தினை மேற்கொண்டன.

வைத்திய நிபுணர் டாக்டர் மனாப் ஷெரீப் தலைமையில் ஆரம்பமான இவ்வேலைத் திட்டம் அட்டாளைச்சேனை றகுமானியாபாத் கடற்கரைப் பிரதேசத்தில் இடம்பெற்றன. இதன்போது கடற்கரைப் பிரதேசம் சுத்தம் செய்யபட்டு பிரதேச சபை வாகனங்கள் மூலம் சேகரிக்கப்பட்ட குப்பைகூழங்கள் அட்டாளைச்சேனை பிரதேச சபை வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தப்பட்டன.

இதன்போது கரையோரப் பிரதேச சுத்தம் பேணும் விஷேட பெயர்ப் பலகை மற்றும் அறிவுறுத்தற் பதாகைகள் போன்றன பொருத்தப்பட்டதுடன், இப்பிரதேசத்தில் சேர்கின்ற கழிவுகளைச் சேகரிக்கும் தொட்டிகளும் பொது அமைப்புகளுக்கு வழங்கப்பட்டன. இதேவேளை அட்டாளைச்சேனை பிரதான வீதி வடிகான் வலையமைப்பினையும் கரையோரப் பிரதேசத்தினையும் ஒழுங்குபடுத்தும் செயற்திட்டமும் அமுல்படுத்தப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர், கிழக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ.எம்.பாயில் உள்ளிட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.




# மதீனாவை அழவைத்த பிலாலின் பாங்கொலி



நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் மரணம் சம்பவித்து, சில நாட்களின் பின்னர் பிலால் (ரழி) மதீனாவிற்குள் வருகிறார். நபியவர்கள் பிலாலை அழைத்து அடிக்கடி எனக்கு ஆறுதலளிக்க மாட்டீர்களா? என வினவுவார்கள். பிலால் (ரழி)யின் (அதானை.) பாங்கொலியை கேட்பதில் நபிக்கு அப்படியொரு ஆறுதல்.

மதீனாவுக்குள் பிலாலை கண்ட அமீருல் முஃமினீன் அபூபக்கர் (ரழி) பாங்கு சொல்லுங்கள் பிலாலே என்றார்கள். நபியின் பிரிவிற்கு பின் நான் பாங்கு சொல்வதாகவே இல்லை என்ற பதில் வேகமாக வந்தது பிலால் (ரழி)யின் நாவிலிருந்து.

பாதையில் சந்தித்த உமர் (ரழி)யின் வேண்டுகோளும் அதுவாகவே இருந்தது. பிலால் (ரழி)யிடமிருந்தும் அதே பதில். பிலால் வரும் வழியில் சந்தித்த மூத்த ஸஹாபாக்கள் எல்லோரும் வேண்டியதும் அதைத்தான். பிலாலிடமிருந்து வந்த பதிலில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

மஸ்ஜிதுன் நபவி. ஹஸன், ஹுஸைன் (ரழி) பிலால் (ரழி)யை கண்டதும் ஓடிவந்து கட்டியணைத்து, ஸலாம் கூறிய பின்னர், அவர்களும் அதைத்தான் வேண்டினர். பிலாலே உங்கள் குரலில் அதானை கேட்க ஆசையாக இருக்கிறது. சொல்வீர்களா?

இப்போது பிலால் பேசாமல் மேலே ஏறினார். உரக்க அதான் சொன்னார். மதீனாவே திரண்டது.

பாங்கின் இடையில் அஷ்ஹது அன்ன முஹம்மதன் .... என்ற வார்த்தைகள் வரும் போது முடியவில்லை பிலாலால். தேம்பி சிறு குழந்தை போல அழ ஆரம்பித்து விட்டார். வரலாறு இதனை எப்படி பதிகிறது தெரியுமா? மதீனா இரண்டு முறை தான் அழுதது. ஒன்று நபியின் மரணத்தின் போது. மற்றையது பிலாலின் பாங்கின் போது என.

அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்ற பிலாலின் குரல் நபியுடன் தாம் வாழ்ந்த பசுமையான நினைவுகளை ஒவ்வொரு ஸஹாபியின் இதயத்திலும் கிளறிவிட்டது. அவர்களது ஆழ்மனது எழுந்து நின்ற கணங்கள்.

நபியவர்கள் நபித் தோழர்களுடன் இப்படித்தான் வாழ்ந்தார்கள். பின்னாட்களில் அபூபக்கர், உமர் (ரழி) அவர்கள் வேண்டியும் சொல்லாத உங்கள் நாவு எப்படி ஹஸன், ஹுஸைன் (ரழி) வேண்டிய போது சொன்னது என சில ஸஹாபாக்கள் கேட்ட போது பிலால் சொன்னார்...

அவர்கள் உயரத்தில், உடலமைப்பில், உருவத்தில் என் ரசூலுல்லாஹ் போலவே இருந்தார்கள்.

அவர்கள் வினவிய விதமும் கூட நபி என்னிடம் கேட்டது போலவே இருந்தது. அந்த நபியின் தாக்கம் தான் என்னை பாங்கு சொல்ல வைத்தது என்று. இது தான் நபியின் ஆளுமை!

# ரமழானில் அல்குர்ஆனும் இளைஞர்களும்



(பஸ்ஹான் நவாஸ்)

நாம் ஓரிரு வாரங்களில் புனித ரமழான் மாதத்தை அடையவுள்ளோம். முஸ்லிம்கள் புனித ரமழானில் அல்குர்ஆனுடனான உறவை மிகவும் நெருக்கமாக பேணுகின்றனர். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஒரு ஜுஸ்உவையாவது பூர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்கும். ரமழானில் குறிப்பாக இரவு நேரங்களில் ஹிஸ்புல் குர்ஆன் தப்ஸீர் வகுப்புக்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. இவ்வாறான ஆன்மீக அமர்வுகள் எம்மில் பல மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் ஐயம் இல்லை.

ஆனால், தப்ஸீர் வகுப்புக்களில் கலந்துகொள்வதில் காட்டும் ஆர்வம் ஹிஸ்புல் குர்ஆனில் பங்கேற்பதில் இளைஞர்களும் பெரியவர்களும் காட்டுவதில்லை என்ற பரவலான விமர்சனம் இருக்கிறது. ஹிஸ்புல் குர்ஆன் என்பது பத்து அல்லது பதினைந்து பேர் வட்ட வடிவில் அமர்ந்து அல்குர்ஆனை ஓதுவதாகும். ஒருவர் ஓதும் போது ஏனையவர்கள் அமைதியாக அல்குர்ஆனை கிரகித்துக்கொண்டும் பார்த்துக்கொண்டும் இருப்பார்கள். தவறு ஏற்படும் போது அங்கிருக்கும் ஹாபிழ் அல்லது ஆலிம் திருத்திக் கொடுப்பார். உச்சரிப்பு நிறுத்தி ஓதவேண்டிய இடம் உட்பட இலக்கண சட்டங்களையும் எல்லோரும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு அந்த அமர்வில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு ஐனை பூர்த்தி செய்வர். இதற்கமைய ஒரு நாளைக்கு ஒரு ஜுஸ்உ பூர்த்தி செய்யப்படும். இதன் மூலம் அல்குர்ஆனை ஓதும் திறன் மேலும் வளமடையும்.

ஆனால் கடந்த காலங்களில் ஹிஸ்பு மஜ்லிஸ்களில் இளைஞர்களின் பங்கேற்பு மிகவும் குறைவாக இருக்கிறது என்ற ஆதங்கத்தை நாம் ஏற்றாக வேண்டும். முதியவர்கள் சிறுவர்களுக்கு மத்தியில் ஓதும் போது பிழை ஏற்படலாம், அல்லது எங்களுக்கு அழுத்தம் திருத்தமாக அல்குர்ஆனை ஓதமுடியவில்லை என பல சிக்கல்கள் நடைமுறை ரீதியாக எமக்குள் இருந்து வருகின்றன. இதனால் ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸ்களில் போய் உட்கார்ந்து ஓதுவதற்கு வெட்கப்படுகிறோம். இவ்வாறான பிரச்சினைளை சீர்செய்ய இளம் வயது ஆலிம்களை கொண்டு ஹிப்ழ் அமர்வுகளை நடத்தலாம். இதனால் சபைக்கூச்சமோ பயமோ ஏற்பட மாட்டாது. எமது கண்ணியமிக்க இமாம்களும் ஆலிம்களும் நிர்வாகிகளும் இன்றிலிருந்தே இந்த விடயம் பற்றி கவனிக்கலாம். அல்குர்ஆனை ஓதாத உள்ளங்கள் பாழடைந்த வீடுகளுக்கு ஒப்புவிக்கப்படுகின்றன.

# நேர முகாமைத்துவம்



(புஷ்ரா பாரூக்)

நேரம்! நேரம் எனும்போது எல்லோர் மனதிலும் நேரம் திரைப்படம்தான் நினைவில் வருகின்றது. காலம் நம்மை மாற்றி விருப்பது அவ்வாறல்லவா! இயங்கும் உலகில் நம் வேலை இயந்திரமாக இயங்கும் இல்லத்தரசிகளின் வேலை இலகுவில் முடிய, மீதி நேரங்கள் தொலைக்காட்சி, அலைபேசி, வலைத்தொடர்பு, கடைவீதி, உலா என ஷைத்தானின் கைவசம் போவது கவலைக்குரிய விடயமாகும்.

பூகோளகமயத்தில் தொலைந்தது நம் நேரம் மட்டுமல்ல. உயிரிலும் மேலான இறைநம்பிக்கையுமே. அது எப்படி என்ற கேள்வி வருகின்றதல்லவா? இன்றைய விஞ்ஞான ஆய்வுகளுக்கமைய, தொலைக்காட்சி மூலம் நிறம், பின்னணி, உருவம் என அனைத்து விடயங்களையும் மனித மூளை ஒரே நேரத்தில் கிரகிப்பதால் மூளையின் கற்பனைத் திறமை செயலிழக்கத்தொடங்கி விட்டதாம். அதனால் என்ன? கதையும், கவிதையும், கட்டுரையும் எழுதத்தானே கற்பனைத் திறன் வேண்டுமென்று எண்ணுகிறீர்களா? இல்லை. இறைநம்பிக்கையின் மிக முக்கியமான பகுதி மறுமை பற்றிய நம்பிக்கையும், சிந்தனையுமாகும்.

இஸ்லாத்தின் அனைத்து கடமைகளுமே நேரம் குறிப்பிடப்பட்டவையே. எந் நேரமும் இறைநம்பிக்கை, தொழுகை நேரம் குறிக்கப்பட்ட ஐவேளை, ரமழான் மாதத்தில் நோன்பு, வருடம் ஒருமுறை ஸக்காத், வசதி படைத்தோருக்கு வாழ்வில் ஒருமுறை ஹஜ் கடமை என அனைத்துமே அல்லாஹ்வால் நேரம் நிர்ணயிக்கப்பட்ட அழகிய அட்டவணையாக உள்ளது.

ஷைத்தான் நம்மை நேரத்தை வைத்து வழிகெடுக்க முயற்சிக்கிறான். நாம் நல்ல விடயங்களை, அல்லாஹ்வின் கட்டளைகளை செய்ய முற்படும்போது, ??இதை செய்யாதே?? என்ற எண்ணத்தை ஒரு போதும் மனதில் போடுவதில்லை. மாறாக, பிறகு செய்யலாம், சிறிது தாமதித்து செய்யலாம், நாளை செய்யலாம் என்ற சிந்தனையை மனதில் விதைக்கிறான்.

நாளை மறுமையில் இறைவன், உனது இளமையை? ஓய்வு நேரத்தை எவ்வாறு பயன்படுத்தினாய்? என்று கேட்கும் போது பதிலளிக்கத் தயாரான முறையிலா நம் நேரம் கழிகின்றது? மீதமாகும் நேரத்தையும், காலத்தையும் மறுமையின் நல்ல சேமிப்பாக மாற்றிட முயற்சிப்போமாக. எமது நேரத்தை இறை வணக்கத்திற்காக, பயனுள்ள கல்விக்காக, இறைவனின் அத்தாட்சிகளை பார்க்க, சிந்திக்க, பிறருக்கு உதவ என்று பிரித்துக்கொண்டு பயன்படுத்துவோமாக.

# இலங்கையிலுள்ள பாடசாலைகளின் தரங்கள்



(பீ.எப்.எம் றிஷாட்)

இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கு நீண்ட வரலாறு உண்டு.தேசிய மற்றும் சர்வதேசப் பாடசாலைகளின் வகிபாகம் இன்று கல்வித்துறையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.நாட்டின் தேவையினை அளவிடுகின்ற ஓர் அளவுகோலாக கல்வியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.ஒரு நாட்டின் எதிர்காலத்தை உற்பத்தி செய்கின்ற ஓர் இடம்தான் பாடசாலை.எதிர்கால நல்ல சமுதாயமொன்றை தீர்மானிப்பவை பாடசாலைகளாகும்.ஒரு நாட்டின் அனைத்து மக்களுக்கும் சம அந்தஸ்த்துடன் கல்வியை வழங்குகின்ற ஒரே இடம் பாடசாலையாகும்.ஆனால் இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளும் இந்த தகுதியைப் பெற்றுள்ளனவா? அதுதான் இன்று எம்முன்னால் இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினையாக விளங்குகிறது.இதில் ஒரு சில பாடசாலைகளை முற்றாக மூடிவிடக்கூடிய நிலையிலும், இன்னும் சில பாடசாலைகளில் அளவுக்கு மிஞ்சிய மாணவர்களுக்கு கல்வியை வழங்குவது போன்றவை இங்குள்ள முக்கிய பிரச்சினைகளாகும்.

இதில் பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதுடன், சில பாடசாலைகளில் அளவுக்கு மிஞ்சிய ஆசிரியர்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் பாடசாலைகளை நடத்திச் செல்வதில் அதிக செலவு, திட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்தி பெற்றோர்களிடமிருந்து பணத்தை அறவிடுவது போன்றவை இன்று பாடசாலைகளில் சர்வ சாதாரணமாக இடம்பெற்று வருகின்றன. வரலாற்று ரீதியான முக்கியத்துவமும், அரசியல் தலையீடுகளும் கொண்ட பாடசாலைகளுக்கு அரசு தொடர்ந்து நிதியுதவிகளை செய்து வருகின்றது.அத்துடன் தமது பாடசாலைகளுக்கு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசியல்வாதிகளின் பின்னால் ஓடித் திரியும் அதிபர்களும் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள்.எனவே ஒரு நாட்டின் நல்லாட்சி தொடர்ந்து நிலைக்குமா?இந்நிலைமையை மீள்பரிசீலனை செய்து மாற்று திட்டமொன்றை மேற்கொள்ள அரசியல் தலைமைகளால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் இன்று வாய்மூடி தலைமறைவாகவே இருக்கிறார்கள்.

வளப்பற்றாக்குறை காரணமாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள பிரதான பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு அல்லது 5ஆம் தர புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் தரம் 6ற்கு அல்லது சாதாரண தரத்துக்கு மட்டும் சேர்த்துக் கொண்டு இடைநடுவே இணைத்துக் கொள்ளப்படுகின்ற வகுப்புகளுக்காக இடைக்காலத் தடையொன்றை பிறப்பிக்க உரிய அதிகாரிகள் ஏன் தயங்குகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது. கல்விக்கு சமமான அந்தஸ்து வழங்குவதைவிட பல்வேறு காரணங்களால் இழுத்து மூடப்படுகின்ற பாடசாலைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு இன்று காணப்படுகிறது.எனவே இலங்கையில் தற்போது இலவசக் கல்வியின் முக்கியத்துவம் குறைவடைந்து வந்தாலும், பாடசாலைகளின் தரங்கள் மற்றும் வளப்பற்றாக்குறை உள்விட்ட அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக நல்லாட்சி அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதனால் நாட்டின் எதிர்கால சமுதாயம் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# பிரபல்ய பாடசாலைகளின் மோகம் தணியுமா?

(எம்.எம்.ஏ ஸமட்)

ஒரு மனிதனின் அடிப்படை உரிமைகளில் கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதும் ஒன்று. இலங்கையின் அரசியலமைப்பிலும் அதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் எப்பிரதேசத்தில் வாழ்ந்தாலும் இந்நாட்டுப் பிரஜைகள் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய கல்வி வாய்ப்பைப் பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுப்பது ஒவ்வொரு பெற்றோரினதும், சமூகத்தினதும் தார்மீகப் பொறுப்பாகும்.

சமகாலத்தில் அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு பெற்றோரும், பாதுகாவலர்களும் அவர்களை அர்ப்பணிக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், அப்பொறுப்பை நிறைவேற்றுவதில் சில பெற்றோர்கள் வேண்டத்தகாத சிரமங்களை அறிந்தும் அறியாமலும் எதிர்நோக்குகிறார்கள். பிள்ளைகளுக்கான பாடசாலைகளைத் தெரிவு செய்வதிலும், பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக வழங்கப்படும் அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் முறையாகப் பின்பற்றுவதிலுமே அச்சிரமங்கள் எதிர்நோக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது பொறுத்தமாகும்.

எல்லோருக்கும் எல்லா வாய்ப்புக்களும் கிடைப்பதில்லை. அவ்வாறே எல்லாப் பிள்ளைளுக்கும் சகல வசதிகளும் நிறைந்த பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பமும் கிடைப்பதில்லை. அவ்வாறு வசதி வாய்ப்புக்கள் நிறைந்த பாடசாலைகளில் கல்வி கற்ற சகல பிள்ளைகளும் சாதனையாளர்களாக மிளிர்ந்ததாக வரலாறும் இல்லை. இருப்பினும், ஒரு சில பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இந்நாட்டிலுள்ள வசதிகள் நிறைந்த பிரபல்ய பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளை இணைத்துக்கொள்வதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர்.இப்பிரயத்தனங்களை கல்வி அமைச்சின் ஆய்வுத் தரவுகள் மூலம் அறிய முடிகிறது.

கல்வி அமைச்சின் ஆய்வின் பிரகாரம், பொதுமக்களுக்கான தினத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கல்வி அமைச்சுக்கு வருகை தருவோரில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பிள்ளைகளை பிரபல்ய பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்காகவே வருகை தருவதாக அறியப்பட்டுள்ளது.

இவ்வாறு பிள்ளைகளை பிரபல்ய பாடசாலைகளில் இணைப்பதற்கான அனுமதியினைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றவர்கள் அவர்களின் முயற்சிகள் கைகூடாத போது, முறையற்ற வழிகளிலும் பிள்ளைப் அப் பாடசாலைகளில் இணைத்துக்கொள்வதற்கு ஆர்வப்படுவதையும் அதில் ஒரு சில பிரபல்ய பாடசாலைகளின் அதிபர்கள் சிக்கிக் கொள்வதையும் கடந்த காலங்களில் நிகழ்ந்த அசிங்கமான நிகழ்வுகளைப் படம்போடுகின்றன.

கல்விச் சுரங்கம்

எம்.றிஷாட்

# நாசாவை மிரள வைத்த இளம் விஞ்ஞானி ரியாத்

(அபூஸைனி முஹம்மத் ஸல்பிகார்)



இந்தியாவில் நடந்து முடிந்த பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் மொத்தம் 750 மதிப்பெண்கள்தான் பெற்றிருக்கிறார் ரியாத் ஷாருக். நாம் பொதுவாக, ஒருவர் பெற்ற மதிப்பெண்களை வைத்துத் தானே அவரது புத்திக்கூர்மையை, திறமையை எல்லாம் கணக்கிடுவோம். அதே வித்தையைப் பயன்படுத்தி ரியாத் ஷாருக் எந்தளவிற்கு திறமையானவர், புத்திக்கூர்மையுள்ளவர் என்பதைக் கணக்கிட்டு கொள்ளுங்கள்.

ஆனால், நீங்கள் மதிப்பெண்களை வைத்துக் கணக்கிடும் அவரது திறமையை விடப் பன்மடங்குத் திறமைகள் குவிந்து கிடக்கின்றன அவரிடம். பிள்ளைகளின் அதிக மதிப்பெண்களைப் பார்த்துத் பெற்றோர்கள் பூரித்துப் போயிருந்த அதே கணத்தில் ரியாத்திடம் பேசினோம்.

★உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்?

என் பெயர் முகமது ரியாத் ஷாருக். இப்போதுதான் பிளஸ் 2 முடித்தேன். ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியாவின் தலைமை விஞ்ஞானி. நான் கண்டுபிடித்த 64 கிராம் எடை கொண்ட செயற்கைக்கோள் நாசாவின் ரொக்கெட்டில் கூடிய சீக்கிரமே பறக்க தயாராகவுள்ளது.

★பரீட்சையில் எவ்வளவு மதிப்பெண்கள்?

750 புள்ளிகள் எடுத்துள்ளேன். எனக்கு ரொம்ப பிடித்த இயற்பியல் பாடத்தில் 132 புள்ளிகள். நான் 750 - 850 புள்ளிகளை எதிர்பார்த்தேன். அதே மாதிரிதான் வந்துள்ளது.

★மதிப்பெண்கள் குறைந்ததற்கு வீட்டில் திட்டு விழுந்ததா?

அப்படி எதுவும் நடக்கவில்லை. அம்மா, மாமா ரெண்டு பேரும் எதுவும் சொல்லவில்லை. ஆசிரியர்கள் தான் இன்னும் கொஞ்சம் அதிகம் புள்ளிகள் எடுத்திருக்கலாம் என்று சொன்னார்கள். இடையில் எனக்கு கொஞ்சம் உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. காலாண்டுத் தேர்வு எழுத முடியாமல் போய்விட்டது.

★இந்தியாவில் மதிப்பெண்களை வைத்துத்தான் ஒரு மாணவனின் புத்திசாலித்தனத்தை முடிவு பண்ணுவார்கள். அதை எப்படி கருதுகிறீர்கள்?

நல்ல புள்ளிகள் எடுத்த மாணவர்கள் கண்டிப்பா நல்ல படிப்பாளியாகத் தான் இருப்பாங்க. ஆனால், அவர்கள் எல்லோருமே அறிவாளியா என்று கேட்டால், உண்மையில் எல்லோருமே கிடையாது. பாடப் புத்தகங்களை அட்டையாக மனப்பாடம் பண்ணி அதை அப்படியே பரீட்சையில் எழுதி, ஆயிரத்திற்கு மேல் புள்ளிகள் வாங்கி எந்தப் பிரயோசனமும் இல்லை. படிக்கிற பாடத்தை நல்லாப் புரிஞ்சு படிக்கிறது தான் முக்கியம்னு நினைக்கிறேன். ஞாபக சக்தியைவிட, படைப்பாற்றல் தன்மை ஒரு மாணவனுக்கு ரொம்ப ரொம்ப முக்கியமானது.

★உங்கள் நண்பர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

நாங்கள் எடுத்த மதிப்பெண்களை மாற்ற முடியாது. ஆனால், நமக்குப் பிடிச்ச துறையை இனிமேல் தேர்ந்தெடுத்து நமது வாழ்க்கையை நமக்குப் பிடித்த மாதிரி மாற்றிக் கொள்ளலாம்.

நீங்க படிச்ச அல்ஜீப்ரா, ட்ரிக்னாமெட்ரி எல்லாமே ஏதோ ஓர் இடத்தில் உங்களுக்கு உபயோகப்படும். படித்தவை எதுவும் பயன்படாமல் போகாது.

பெற்றோர்களும் மற்ற மாணவர்களோடு உங்கள் பிள்ளைகளை ஒப்பிட்டு பார்க்காதீர்கள், படிப்பு விடயத்தில் அழுத்தம் கொடுக்காதீர்கள்.

# சாய்ந்தமருது வைத்தியசாலை

# உருமாற்றம் பெறுகிறதா?

எம்.எம்.எம்.நூருல்ஹக், சாய்ந்தமருது

சாய்ந்தமருது பிரதேச (மாவட்ட) வைத்தியசாலை கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைக்கப்பட்டு விசேட முறிவு வைத்திய அலகாக இயங்க வைப்பதற்கான ஒரு முன் மொழிவை இன்றைய சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசீம் முன்வைத்து அதனை சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல்பரிபாலன சபை, சாய்ந்தமருது வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் புத்திஜீவிகள் ஏற்றுக் கொண்டதாக அண்மையில் சில செய்திகள் பகிரப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையை தள வைத்தியசாலையாக தரமுயர்த்தித் தர வேண்டும் என்கின்ற கோரிக்கையை பிரதி அமைச்சரிடம் முன்வைத்த போதே,அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையோடு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையை இணைப்பது தொடர்பான கருத்தை அமைச்சர் முன்னிறுத்தி இருக்கின்றார். இது ''இணறு வெட்டப்போய் பூதம் கிழம்பிய'' கதையை நமக்கு ஞாபகப்படுத்தி வைக்கின்றது.

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை 1952 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சராக திருமதி விமலா விஜயவர்த்தனவினால் அடிக்கல் நாட்டப்பட்டு, சிறியதொரு மத்திய மருந்தகமாக செயற்பட தொடங்கிய ஒரு வைத்தியசாலையாகும்.அதுமாத்திரமன்றி 1975 களில் பிரசவ விடுதிகளைக் கொண்ட வைத்தியசாலையாக செயற்படத் தொடங்கியதும் குறிப்பிடத்தக்கது.இத்தகைய தொன்மையைக் கொண்ட ஒரு வைத்தியசாலை வேறொரு பகுதியில் அமைந்திருக்கின்ற வைத்தியசாலையோடு இணைக்கப்படுகின்ற போது அந்த ஊருக்காக இருந்து வந்த வைத்தியசாலை வளத்தையும் தடயத்தையும் இல்லாமல் செய்து விடுகின்ற ஆபத்தை விளைவிக்கும்.



இன்றிருக்கும் அரசியல் அதிகாரம் சாய்ந்தமருது வைத்தியசாலையை தரமுயர்த்தித் தருவதற்கான வாய்ப்பை கொண்டதல்ல என்பதை பிரதியமைச்சர் பைசால் காசிமின் மாற்றுக் கருத்து வெளிப்படுத்துகின்றது. அதுமாத்திரமன்றி தள வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவை அங்கீகாரத்தை புல்மோட்டை, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய மூன்று வைத்தியசாலைகளுக்கு வழங்கியிருந்தன. இவற்றில் சாய்ந்தமருது தவிர்ந்த ஏனைய இரண்டுவைத்தியசாலைகளும் தரமுயர்த்தப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானத்தை முன்னெடுக்கின்ற போது சுகாதார அமைச்சராக இருந்தவர் எம்.எஸ்.எம் சுபைர் ஆவார்.இவர் மு.கா. கட்சி சாராதவராவார்.ஆதலால் இவரது காலத்தில் இதனை அடைந்து கொள்வதற்கு சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் ஆர்வத்தைக் காட்டியிருக்கவில்லை. எனினும் கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்டிருந்த அமைச்சரவை மாற்றத்தின் அடிப்படையில் மு.கா வைச் சார்ந்த மன்சூர் முதலிலும் பின்னர் நஸீர் ஆகியோர் சுகாதார அமைச்சர்களாக வந்தனர். இந்நிலையில்தான் சாய்ந்தமருது தவிர்ந்த ஏனைய கிழக்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் பெற்றிருந்த புல்மோட்டை, நிந்தவூர் ஆகிய வைத்தியசாலைகள் தரமுயர்த்தப்பட்டன என்பது கவனிக்கத் தக்கது.

ஸ்ரீலங்கா மு.காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அதன் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரஃப் தொட்டு அதன் பின்னைய தலைவர் றவூப் ஹக்கீம் வரை சாய்ந்தமருது மக்கள் தமது முழுமையான ஆதரவை நல்கி வந்துள்ளனர். . இவ்விரு தலைவர்களும் இம்மக்களுக்குத் தேவையான விடய அபிவிருத்திகளிலும் வளப்பெருக்கங்களிலும் புறக்கணிப்பு இயல்பை வெளிப்படுத்திய தருணங்கள் நிறைய உண்டு.

குறிப்பாக சாய்தமருது வைத்தியசாலை உயர்சிக்கு முதல்தடைச்சுவரை எம்.எச்.எம் அஷ்ரஃப் ஏற்படுத்தியிருந்தார். இவ் வைத்தியசாலைக்கு வந்த உதவிகள், உபகரணங்கள் கூட தராது, இன்றைய அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கும் அதன் தரத்தைஉயர்த்துவதற்கும் அஷ்ரஃப் வழிசெய்திருந்தார். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இம்மக்கள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் மு.காவிற்கு பங்களிப்பு செய்வதை அன்றும் கைவிடவில்லை இன்றும் மாற்றிக்கொள்ளவில்லை.

இப்படியான எமது சாய்ந்தமருது மக்களுக்கு மு.கா. பல்வேறு துரோகத்தை செய்வதற்கும் குழிபறிப்பதற்கும் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்ற கடும்போக்குகளைத்தான் இன்றுவரை அனுபவிக்கும் அவலத்தை சந்தித்துக் கொண்டிருப்பது மறைவன்று. இத்தகைய அழுத்தங்களில் இருந்து சாய்ந்தமருது மக்கள் விடுபட்டதாகத் தெரியவில்லை என்பதற்கு அப்பால், நசுக்குதல்களை தொடர்ந்தேர்ச்சியாக எதிர்கொள்கின்ற இடர்களில் இருந்த எமது மக்கள் விடுபடுகின்ற விடிவுகாலம் இன்னும் தோன்றவில்லை.

ஏன் இப்படிக் கருத வேண்டியிருக்கிறதென்றால், கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றிருந்த சாய்ந்தமருது வைத்தியசாலையை தரமுயர்த்தும் விடயத்தில் மு.கா கட்சியை சார்ந்த சுககாதார அமைச்சராக வந்த மன்சூரோ அல்லது அதன் பிற்பாடு வந்த நஸீரோ இது விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை.  ஆனால் இவர்களின் வெற்றிக்குப் பின்னால் நமது ஊர் மக்களின் ஆதரவுக்கரமின்றி மக்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது மக்கள் கேட்டு வந்தும், அதனைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு இவர்கள் மீது இருந்து வருகின்றது. உண்மையில் மக்கள் பிரதிநிதி என்போர் அம் மக்களினால் அடையாளப்படுத்தும் தேவைகளின் பின்னால் தொடர்ந்துபயணிக்காதுவிட்டாலும் கூட, அம்மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் என்பதை மறக்கலாமா?

எமது சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் அதன் சமயப் பணிகளுக்கு அப்பால் ஊரின் தேவைகள் குறித்து அரசியல் ரீதியாக பெரிதும் அக்கறை காட்டுவதில்லை என்கின்ற ஒரு குற்றச்சாட்டு அவர்கள் மீது இருப்பதையும் மறுக்கமாட்டார்கள். ஏனெனில் எமது ஊர் பெரிய பள்ளிவாசல் தலைவர் உட்பட்ட சபைக்கு என்று ஒரு அரசியல் பின்னணி இருக்கிறது.அது ஐக்கிய தேசியக் கட்சி சார்பு மற்றும் ஸ்ரீ லங்கா மு.கா விருப்பு நிலை என்பதுதான் அதன் அரசியல் பின்னணி ஆகும்.

இதனால்த்தான் அண்மைக்காலங்களில் எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை முன்னெடுத்த எமது ஊருக்கான உள்ளூராட்சிமன்ற உருவாக்க முயற்சி, வைத்தியசாலை தரமுயர்த்துதல் என்பனவற்றின் மீதான அவர்களின் ஈடுபாடு தோல்வியைத் தழுவியதிலிருந்தும் புரியக் கூடியதாக இருக்கின்றது.

முன்னாள் மாகாண சபை சுகாதார அமைச்சர் எம்.எஸ்.எம் சுபைர் அமைச்சரவை அங்கீகாரத்தை எடுத்துக் கொண்ட தருணத்தில் அவரைச் சந்திப்பதற்கு நமது பெரிய பள்ளி நிர்வாகம் முயற்சி எடுக்கவில்லை. இவர் நமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு பிடிப்பில்லாத அரசியல் பின்னணியைக் கொண்டவர் என்பதினால் நமது பெரிய பள்ளிவாசல் சபை தவிர்த்திருக்கலாம்.என்றாலும் அவர்களுக்குப் பிடித்தமான மு.கா. சார்ந்த பிரதிநிதிகள் சுகாதார அமைச்சர்களாக (மன்சூர், நஸீர்) வந்த போதிலாவது சந்திப்புக்களையும் அழுத்தங்களையும் பிரயோகிப்பதற்கு நமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் முனைந்திருந்தால் எமது வைத்தியசாலையை தரமுயர்த்தியிருக்க முடியும்.

இதனைச் செய்ய நமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் முன்வரவில்லை. இதனாலும் இன்று உருவாக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலைகளின் இணைப்புத் தன்மைக்கு தலைசாய்ப்பவர்களாக மாற வேண்டிய அவலத்தை அவர்கள் சுமக்க வேண்டியவர்கள் என்ற அடையாளத்தை இன்று உரித்தாக்கி இருக்கின்றது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சராக அதாவுல்லா இருந்த காலம் மிக முக்கியமானது. உரிய விடயத்திற்கு அவர் அமைச்சராக இருந்தார்.அதேநேரம் சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சிமன்றத்தை நிறுவ வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.இந்தசந்தர்ப்பங்களில் மு.கா.எமது ஊருக்கான உள்ளூராட்சி மன்ற கோரிக்கையை கணக்கில் எடுக்காத ஓர் இயங்குதலுக்குள் உட்பட்டிருந்தனர்.எமது ஊர் பெரிய பள்ளிவாசல் நிர்வாகமும் மு.கா.சார்பு நிலையை அதிகம் கொண்டிருந்த காரணத்தினால் அதாவுல்லாவின் பக்கம் கவனத்தை கிஞ்சிற்றும் செலுத்த அவர்கள் விரும்பவில்லை. உள்ளூராட்சிமன்ற கோரிக்கையில் அதிக தீவிர செயற்பாட்டு இயல்பில் இயங்கிவந்த மறுமலர்ச்சி மன்றம் அதாவுல்லாவின் சந்திப்புக்காக பெரிய பள்ளிவாசலின் ஆதரவை உள்ளார்ந்தமாகத் தந்து, எங்களோடு வாருங்கள் என்று கேட்ட போதும் கூட, எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை அதற்கு இசைந்து வரவில்லை.

இப்படி கடினப் போக்கில் இருந்த எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் மு.கா வின் அசைவு உள்ளூராட்சி சபையை நிறுவுவதில் திரும்பிய போது தான் எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகமும் கவனத்தைச் செலுத்த தயாராகினர். அந்த சூழலில் அதாவுல்லாவின் அரசியல் அதிகாரம் இல்லாதிருந்தது மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் மீதான நமது மக்களின் தீவிர செயற்பாட்டின் காரணமாக மு.கா வினர் இதற்கு உடன்பட்டதினையும் நாம் அவதானிக்கலாம். அதேநேரம் எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் அரசியல் பின்புலம் எதை நோக்கியது என்பதையும் கோடிட்டுக் காட்டி வைக்கின்றது.

பொதுவாக எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் மு.கா சார்பு நிலையில் இருக்கின்றது. நமது மக்களும் கூடிய பாகம் அதற்கு இசைவாக இருந்து வருகின்றனர் என்பது மிகப் பிரத்தியட்சமானது. மு.கா வின் தலைவரோ அதன் அரசியல் மக்கள் பிரதிநிதிகளோ நம்மூர் பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் மீதும் நமது மக்கள் மீதும் ஆதரவாகவும் அவர்களின் நியாயங்களை செவிமடுக்க வேண்டும் என்கின்ற உணர்வோடும் இயங்கும் இயல்பைக் கொண்டிருக்கவில்லை என்பதற்கு அண்மைய மூன்று சம்பவங்களை இதற்கு உதாரணமாக நாம் எடுத்து நோக்க முடியும்.

1. கல்முனை மாநகர முதல்வராக இருந்த நம் ஊரைச் சேர்ந்த அதுவும் மு.கா வின் பிரதிநிதியுமான சிராஸ் மீரசாகிபுவின் பதவிக்காலத்தின் ஆறு மாதங்களை மேலதிகமாக நீடித்து தர வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றமை. (இந்த நீடிப்பு சாய்ந்தமருது கடற்கரையில் அமைத்து வரப்பட்ட பார்க் வேலையை நிறைவு செய்வதற்காக என்ற நியாயத்தோடு கேட்டும் அது நடைபெறவில்லை. பின்னர் வந்த மேயர் இந்த பார்க் முழுமைப்படுத்தாதுஅரை குறையாகத் திறந்து மக்கள் பாவனைக்கு விடாது தடுத்து வைத்திருந்த வரலாற்றையும் பார்க்கின்றோம்.

2. சாய்ந்தமருது மக்களின் நீண்டகால கோரிக்கையான உள்ளூராட்சி மன்றத்தினை விரைவாகப் பெற்றுத் தருவதாக எமதுபெரிய பள்ளிவாசல் நிர்வாகத்திடம் வாக்குறுதியளித்தும், பின்னர் பிரதமர் ஊடாக உள்ளூராட்சிமன்றம் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தும் இன்று வரை உள்ளூராட்சிமன்ற கோரிக்கை நிறைவேற்றித்தரவில்லை. அதற்கு மு.கா தரப்பினால் சொல்லப்பட்ட காரணம் எல்லை நிர்ணயம் நடைபெற்றுக் கொண்டிருப்பதினால் அது முடிவுற்ற பின்னர் செய்து தரப்படும் என்பதாகும்.

இது குறித்து நாம் அப்போதே எமது பள்ளி நிர்வாகிகளுக்கு விளக்கிச் சொன்னோம் சில கடிதங்கள் பெறப்பட வேண்டும் என்று அவர்கள் சொன்ன போதும், அவைகள் அவசியமற்றவை என்பதனையும் எடுத்துரைத்திருந்தோம். இவ்வாறான நடைமுறைக்கப்பால் உள்ளூராட்சிமன்றத்தை உருவாக்க முடியும் என்பதைனையும் நாங்கள் தெளிவுபடுத்தியிருந்தோம்.எமது பெரிய பள்ளி நிர்வாகத்தினிடம் இருந்த மு.கா வின் மீதான பிடிப்பு எமது நியாயங்களையும் நடைமுறை சாத்தியமான கருத்துக்களையும் அவர்களை ஏற்க விடாதுதடுத்து நிறுத்தியது.

ஆனால் நாம் அங்கு குறிப்பிட்டுக் காட்டிய கடந்த கால நிகழ்வுகளைப் போல் அண்மையில் பொலன்னறுவையில் இரண்டு உள்ளூராட்சி மன்றங்களை புதிதாக உருவாக்கியுள்ளனர்.அதுவும் எல்லை நிர்ணய குழுவின் நடவடிக்கைகள் நிறைவடையாத நிலையில் ஆகும். இப்போதும் எமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் எமதுபிராந்திய அரசியல் அதிகாரத்தை வைத்துள்ள மு.கா வினரை தொடர்ந்தேர்சியான அழுத்தங்களைக் கொடுக்காது நீண்ட தொய்வில் வைத்திருக்கின்றனர்.

3. எமது பிரதேச வைத்தியசாலையை தள வைத்தியசாலையாக தரமுயர்த்தி மாற்றித்தருமாறு கோரிக்கை விடுப்பதற்குச் சென்ற எமது பள்ளி நிர்வாகத்தினர்களின் எண்ணத்தில் மாற்றுச் சிந்தனையை விதைத்து அதுவும் இந்த வைத்தியசாலையை இவ் ஊருக்கென்ற தன்மையை முற்றாக இழக்கச் செய்கின்ற மூளைச் சலவை செய்யப்பட்டு, வைத்தியசாலைகளின் இணைப்புக்கு இணக்கம் தெரிவிக்கும் அளவிற்கு அவர்கள் உடன்பட்டிருப்பதானது நமது பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகளின் அரசியல் சாயத்தை வெளிப்படுத்துகின்றது.

ஓர் ஊரில் இரண்டு கண்கள் என போற்றப்படுவது வைத்தியசாலையும் நூலகமுமாகும்.ஆயின் இவ்விரண்டையும் எந்த ஊர்களும் எதற்காகவும் இழப்பதற்கு தயார் ஆவது என்பது சிந்தனை ரீதியான முன்னெடுப்பாகாது.இவை இரண்டும் இல்லாத ஊர்கள் அவைகளை உருவாக்குவதற்காக படுகின்ற அவதிகளை அறிந்து வைத்துள்ள நாம், இருப்பதை இழந்து விடுவதற்கு துணிந்திருப்பது ஆரோக்கியமான நெறியல்ல.

நமது சாய்ந்தமருது வைத்தியசாலை அம்பாறை மாவட்த்தில் அமைந்துள்ள பல ஊர்களில் அமைந்துள்ள வைத்தியசாலைகளின் காலத்திற்கு முந்திய தொன்மையைக் கொண்டதாகும். அது மாத்திரமன்றி இவ் ஊரின் மக்கள் தொகையைவிடகுறைந்த பிரதேசங்களுக்கெல்லாம் வைத்தியசாலை இருந்து வரும் போது எம் ஊர் வைத்தியசாலையை வேறு பிரதேசத்துடன் இணைத்து அல்லது தாரை வார்த்துக் கொடுத்து இல்லாமல் செய்வது மாபெரும் வரலாற்றுத் தவறாகும். வைத்தியசாலை என்பது நமது ஊரின் சுகாதாரத் துறையோடு மட்டுமன்றி வரலாற்றுத் தடயத்தோடும் தொடர்புபட்டதாகும்.



இணைத்துக்கொடுத்துவிட்டு அதனை மீண்டும் பிரித்து எடுப்பது அவ்வளவு இலகுவான ஒன்றுமல்ல. நிர்வாக ரீதியாக ஏற்படுகின்ற சிக்கல்கள் மற்றும் இதனை அழிக்க வேண்டும் என்கின்ற உணர்வுடைய ஆதிக்க அதிகாரங்களை கைவிழந்து விடுவதற்கு ஆயத்தமாகாத கடும் போக்கையும் நாம் இதில் சந்திக்க முடியும். இதற்கு நல்லதொரு உதாரணமாக அரசாங்கம் கொண்டுவந்த உள்ளூராட்சி சட்ட திட்டத்திற்கு அமைவாக நாம் தனித்திருந்த சபையை இழந்தோம் அதனை மீட்டிப் பெறுவதில் நாம் இன்று எதிர்கொள்கின்ற பல வகையான ஆதிக்க அகோரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாம்.நமது கரங்களில் இருந்த ஒன்றை இணைத்துக் கொடுப்பதற்கு சம்மதம் தெரிவிப்பது ஓர் அடி முட்டாள் தனமாகவே அமையலாம்

இன்று சாய்ந்தமருதுஅரசியல் அதிகாரத்தில் பின்தங்கி இருக்கின்றது என்பதற்காக இனி வரும் காலம் எல்லாம் அப்படித்தான் இருக்குமென்று கணித்துக் கொள்ளக்கூடாது. சில வேளை எமது மக்களின் எதிர்பார்ப்பின் நியாயத்தையும் அது கடந்து வந்த அநீதிகளையும் ஆதிக்க அடக்குமுறைமைகளிலிருந்தும் விடுதலை அழிப்பதற்கு உறுதியுடன் செயற்படுகின்ற அரசியல் பிரதிநிதித்துவம் ஒன்று நமதூரில் இருந்தோ அல்லது இவ் ஊருக்கு வெளியிலிருந்தோ உருவாகி விடாது என்று நாம் இன்று தீர்மானிப்பது முறையல்ல. நாளை வருவான் ஒருவன் என்று நம்புவதும் விவேகத்தின் வழி தான். எமது சாய்ந்தமருது வைத்தியசாலையை தரமுயர்த்துவதற்கு சங்கடங்கள் இருப்பின், அவ்வைத்தியசாலையை இன்றிருக்கும் தரத்துடனேனும் தொடர்ந்து இருப்பதற்கு அனுமதிப்பதுதான் நியாயத்தின் நெறிமுறையுமாகும்.

சாய்ந்தமருதுக்குரிய சொத்தான வைத்தியசாலையை இன்னுமொரு பிரதேசத்துடன் இணைத்துத்தான் அந்த வளத்தை காப்பாற்ற வேண்டுமென்பதுமல்ல. இப்போது கூட அவர்கள் இணைத்து செய்ய வேண்டும் என்று கூறுவதை இளையாதும் செய்ய முடியும். உதாரணமாக தள வைத்தியசாலையுடனான இணைப்புக்குப் பதிலாக தனி அலகொன்றை நேரடியாக மத்திய சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வகையில் துறை சார்ந்த வைத்தியசாலைகளாக இயங்கி வருகின்ற மகரகமையில் அமைந்துள்ள புற்றுநோய் மருத்துவமனை கொழும்பில் அமைந்துள்ள டி சொய்ஷா மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் கண் வைத்தியசாலை வெலிசறையில் அமைந்துள்ள மார்பு சிகிச்சை விசேட வைத்தியசாலை போன்று இன்று உருவாக்க முற்படுகின்ற விபத்து-முறிவு வைத்தியசாலையை இங்கு உருவாக்க முடியும்.அப்படித் தோற்றுவிக்க பிரதியமைச்சர் பைசால் காசீம் சிந்திக்கத் தவறியது ஏன்?

அவ்வாறு தோற்றுவிக்கப்படுகின்ற போதுதான் இந்த விபத்து முறிவு விசேட வைத்தியசாலையை மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களும் ஆகக் குறைந்த பட்சமாவது முதலில் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கும். மாறாக ஒரு தள வைத்தியசாலையோடு இணைக்கப்படுகின்ற போது இப்பகுதியில் அமைந்துள்ள ஏனைய தள வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற வளத்தையும் அதற்கான வைத்திய நிபுணர்களையுமே கொண்டு இயங்க முடியும்.

நேரடியாக மத்திய சுகாதார அமைச்சின் கீழ் இயங்குகின்ற தனி விசேட விபத்து முறிவு வைத்தியசாலையாக உருவாக்குவதற்கு முனைகின்ற போதுதான் தனித்துவமாகவும் அதற்கான பிரபல்யமான வைத்திய நிபுணர்களையும் இங்கு கொண்டு வர முடியும். நமது ஊரின் வளம் பலருக்கும் பயன்படுவதாகவும் நமது ஊரின் வைத்தியசாலை என்ற அம்சமும் இழக்கப்படாத பாதுகாப்பையும் உறுதி செய்யும். அப்படியல்லாது இப்போது முன்வைத்திருக்கின்ற திட்டத்தின் பின்னால் பல துரோகங்களும் சூழ்ச்சிகளும் வேரோடிக் கிடக்கின்றன என்பது தான் யதார்த்தமாகும்.

ஆகவே இந்த விடயத்தில் கல்முனைத் தொகுதியைப் மையப்படுத்திய அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மு.கா.பிரதித் தலைவருமான பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் தலையிட்டு சாய்ந்தமருது மக்களின் விருப்புக்கு மாறாக அவ் ஊரின் வைத்தியசாலையை கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையுடன் இணைக்கக் கூடாது என்று கருத்துப்பட ஓர் அறிக்கையை பகிரங்கமாக உடனடியாக விடுக்க வேண்டும். மேலும் இந்த விடயத்தை அவரது தலைவர் ரவூப் ஹக்கீமின் கவனத்திற்கு உட்படுத்தியும் பிரதியமைச்சர் பைசால் காசிமின் பிழையான அணுகுமுறைமையையும் கைவிட நடவடிக்கை மேற்கொள்வது பிரதியமைச்சர் ஹரீஸின் மக்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தின் தார்மீகக் கடமை என்பதை நினைவுபடுத்தி வைக்கின்றோம்.

★★★

# இனவாத ஊடகங்கள் முஸ்லிம்களை துரத்தி துரத்தி அடிக்கின்றன

## பரிசளிப்பு விழாவில் அமைச்சர் றிஷாத்

வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்துக்கு எத்தனை தடைகளைப் போட முடியுமோ அத்தனை உச்சக்கட்டத் தடைகளையும் இனவாதிகளும் இனவாத சிங்கள ஊடகங்களும் மேற்கொண்டு வருவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான றிஷாட்

அதிகாரிகள் சிலரும் எமது சமூகத்துக்கு வரலாற்றுத் துரோகம் இழைக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரபு நாட்டின் தனவந்தர் சிலரை அழைத்துக் கொண்டு முல்லைத்தீவு மக்களின் வீடில்

செய்கின்றனர். அங்கு ஓர் அடிக்கல் கூட நாட்டாத நிலையில் இவ்வாறு பிரசாரம் மேற்கொள்கின்றனர்.

வடமாகாண முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழ்ந்த ஆரம்ப

களை இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கும் ஆயத்தப்படுத்துகின்றனர்.

26 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு இலட்சம் வட மாகாண அகதிகளை தாங்கி வாழும் இந்த மாவட்ட மக்கள்





பதியுதீன் தெரிவித்தார்.

புத்தளம் தில்லையடி அன்சாரி வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று (13) அதிபர் வதூத் தலைமையில் இடம்பெற்ற போது பிரதம விருந்தினராக அவர் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது,

முஸ்லிம் சமூகம் இன்று பல்வேறு சோதனைகளையும் வேதனைகளையும் எதிர்நோக்கி ஒரு துன்பியல் வாழ்வில் நீச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றது. சமாதானம் முடிவடைந்து நிம்மதியும் விடிவும் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த நாம் தொடர்ந்தும் ஏக்கத்திலேயே வாழ்கின்றோம். எனினும் எமது இலட்சியத்தை நோக்கி அர்ப்பணிப்புக்களுடன் சவால்களுக்கு முகம் கொடுத்து பயணத்தைத் தொடர்கின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள் குடியேற்றம் என்பது கானல் நீராகவும் ஒரு கேள்விக்குறியாகவும் மாறி வருகின்றது. ஒரு சில அரசியல்வாதிகளும் அரசாங்க

லாப் பிரச்சினைகளைக் காட்ட அங்கு சென்று அந்த மக்களை சந்தித்தோம். பின்னர் அரச அதிபருடனும் வீடு கட்டுவதற்குத் தேவையான காணி தொடர்பில் உரையாடினோம். இவற்றை எவ்வாறோ மோப்பம் பிடித்த யாழ்ப்பாண பத்திரிகையொன்று அதே நாள் " அமைச்சர் றிஷாட் முல்லைத்தீவில் காட்டை அழித்து வீடுகளைக் கட்ட தனவந்தர்களை அழைத்து வந்திருக்கின்றார் என கொட்டை எழுத்துக்களில் எமது முயற்சியை ஊதிப் பெருப்பித்து செய்திகளை வெளியிட்டனர். அதே போன்று அங்கு வந்திருந்த இனவாத ஊடகங்களும் தமது செய்திகளில் நாங்கள் காட்டை அழித்து வீடு கட்டுவதாக பொய்யான இட்டுக்கட்டப்பட்ட செய்திகளை ஒளிபரப்பின.

பல்வேறு கஷ்டங்களும் பலமாத முயற்சியின் இந்த தனவந்தர்களை நாம் அங்கு அழைத்து சென்று உதவிகளை பெற்றுக் கொடுக்க முயற்சித்த போதும் மனிதாபிமானமில்லாமல் பிரசாரங்களை

காலங்களில் அவர்களின் கல்வித்தேவைக்காக பல்வேறு பிரயத்தனங்களுக்கு மத்தியில் இங்கு 6 பாடசாலைகளை ஆரம்பித்தோம். 5ஆம் ஆண்டுவரை ஆரம்பிக்கப்பட்ட அன்சாரி வித்தியாலயமும் அதில் ஒன்று. இன்று அப் பாடசாலை 9 ஆம் ஆண்டு வரை தரமுயர்ந்து 450 மாணவர்கள் வரை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர். என அறியும் போது சந்தோசமாக இருக்கின்றது.

புத்தளத்தைப் பொறுத்தவரை இலங்கையின் சூழலியல் பாதிப்புக்களையெல்லாம் தாங்கி தன்னந்தனியாக அனுபவிக்கும் ஒரு மாவட்டமாக அமைந்துள்ளது. சீமெந்து தொழிற்சாலை, நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஆகியவற்றினால் பெரும் பாதிப்புக்குள்ளான இந்த மாவட்ட மக்களுக்கு புதிதாக குப்பைப் பிரச்சினையையும் ஏற்படுத்தியுள்ளனர். இது போதாதென்று கற்பிட்டியில் சாலாவ ஆயுதக் கிடங்குகளின் ஆயுதங்

அதனால் தமது வளங்களைப் பறிகொடுத்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற போதும் இன்னுமே அந்த மக்களை அரவணைத்தே அன்புடன் வாழ்கின்றார்கள். எனவே இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்ட மீள் குடியேற்றம் இன்றியமையாததாகின்றது என்றும் அமைச்சர் கூறினார். தில்லையடி அன்சாரி வித்தியாலயத்துக்கு பன்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாடசாலை திருத்தத்துக்கென ரூபா 12 இலட்சம் ஒதுக்கீடு செய்வதாக கூறிய அமைச்சர், இந்த பாடசாலைப் பாதையை கொங்கிறீட் செய்வதற்கு 35 இலட்சத்தை தருவதாக வாக்களித்தார். இந்த நிகழ்வில் நவவி எம்.பி, அமைப்பாளர் அலி சப்றி, டொக்டர் இல்யாஸ், பொறியியலாளர் யாசீன், தில்லையடி முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஹாஜா அலாவுதீன், முன்னாள் நகர சபை உறுப்பினர் முஹ்சி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தை தரமுயர்த்தவும்

### பைசால் காசீம் வேண்டுகோள்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை நகரக் காரியாலயத்தை அம்பாறை மாவட்ட கரையோர பிராந்தியத்திற்குரிய அதிகாரம் கொண்ட தனியான காரியாலயமாக தரமுயர்த்துமாறு வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கல்முனையிலுள்ள சில காரியாலயங்கள் முன்னர் அம்பாறைக்கு இடமாற்றப்பட்டுள்ளமை உண்மை என்கின்ற போதிலும் வீடமைப்பு, அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை நகரக் காரியாலயத்தை இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக சமூக வலைத்தளங்களில் வெளிவந்துள்ள செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை. இது திட்டமிட்டு பரப்பப்படும் புரளியாகும்.

கல்முனை காரியாலயத்தில் கடமையாற்றுகின்ற சில உத்தியோகத்தர்கள் பல வருடங்களாக இடமாற்றம் இன்றி இங்கேயே தொடர்ந்து கடமையாற்றி வருகின்றனர். தற்போது அவர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதனால், இதனை இரத்துச்செய்வதற்காக இப்படியொரு வதந்தியை பரப்பி விட்டுள்ளனர் என்று முகாமையாளர் என்னிடம் சுட்டிக்காட்டினார். பிரதேச மக்களை உசுப்பேற்றி விட்டு, அதன் மூலம் ஏற்படுகின்ற குழப்பகரமான சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமது இருப்பை கல்முனையில் தக்க வைத்துக் கொள்வதற்கு அவர்கள் முயற்சித்து வருகின்றனர் என்பதை எம்மால் உணர முடிகின்றது. தற்போது அம்பாறை மாவட்டத்தில் அரசியல் ரீதியாக பல சதிகள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற இத்தருணத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் மீது திட்டமிட்டு பழிகள் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இன்னுமொரு பழியை சுமத்தி ஒன்றுமே அறியாத மக்களிடத்தில் குறித்த மக்கள் பிரதிநிதிகள் பற்றி வெறுப்பினை உண்டாக்குவதற்கு சிலர் இப்புரளியை கையிலெடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை நகரக் காரியாலயம் சகல அதிகாரங்களும் கொண்டதாக தரமுயர்த்தப்பட்டு, அம்பாறை மாவட்ட கரையோர பிராந்தியத்திற்குரிய தனியான காரியாலயமாக மாற்றியமைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இது தொடர்பாக வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் வலியுறுத்தியுள்ளேன் என்றார்.

## பட்டதாரிகளை வேலை வாய்ப்புக்குள் உள்வாங்க மாகாண விஷேட அமைச்சரவைக் கூட்டம்

(ஹாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்திலுள்ள பட்டதாரிகளை வேலைவாய்ப்புக்குள் உள்வாங்குவதற்கான மாகாண அமைச்சரவையின் விஷேட கூட்டம் மே 17 ஆம் திகதி இடம்பெறுமென்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாகக் கேட்டபோது அவர் நேற்றைய தினம் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். இது விடயமாக தொடர்ந்து கூறிய அவர், முதலில் மாகாணத்தில் எங்கெங்கு, என்னென்ன பாடங்களுக்காக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற விபரங்களைப் பெறும் வேலைகள் அடுத்த ஓரிரு நாட்களில் ஆரம்பித்து விடும். அதற்கான பணிப்புரைகள் ஏற்கெனவே உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன.

17ஆம் திகதி இடம்பெறுகின்ற மாகாண அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் அடுத்து வரும் ஓரிரு வாரங்களுக்குள் பட்டதாரிகளை வேலைவாய்ப்புக்குள் உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் மாகாண சபையால் கோரப்படும்.

மாகாண அமைச்சரவையிலே எடுக்கப்படும் தீர்மானங்கள் உடனடியாக அமுல்படுத்தப்படும் வகையில் அறுதியாகவும், உறுதியாகவும் இருக்கும். கிழக்கு மாகாணத்தின் பாடசாலைகளிலுள்ள 4784 ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான அனுமதியை தேசிய முகாமைத்துவ திணைக்களம் கடந்த வாரம் கிழக்கு மாகாண சபைக்கு வழங்கியிருந்தது.

அந்த அனுமதியின் பிரகாரமே உடனடியாக 1000 பேரும் பின்னர் கட்டங்கட்டமாக ஏனைய அனுமதி வழங்கப்பட்ட 3784 பேரும் நியமனம் செய்யப்படவுள்ளார்கள்.

## அக்கரைப்பற்றில் விழிப்புணர்வு ஊர்வலம்

(அட்டாளைச்சேனை எம்.ஏ.றமீஸ்)

பொதுமக்களை அதிகளவில் தாக்கி வரும் தொற்றா நோயின் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி நேற்றுமுன்தினம் (13) அக்கரைப்பற்று நகரில் இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஐ.எம். ஜவாஹிர் தலைமையில் வைத்தியசாலை வளாகத்தில் ஆரம்பமான இவ் விழிப்புணர்வுப் பேரணி அக்கரைப்பற்று பிரதான வீதி வழியாகச் சென்று அக்கரைப்பற்று தேசிய பாடசாலை மைதானம் வரை சென்றடைந்தது. மைதானத்தில் ஒன்று கூடியயோர் விஷேட உடற்பயிற்சியிலும் கலந்து கொண்டனர்.

தொற்றா நோயின் தாக்கம் பற்றியும் அதிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் நடைமுறைகள் பற்றியதுமான கையேடுகள் இவ்விழிப்புணர்வு ஊர்வலத்தின் போது பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன், தொற்றா நோயின் தாக்கம் பற்றி பல்வேறான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தாங்கிச் சென்றதுடன்



விழிப்புணர்வுக் கோசங்களையும் அவர்கள் எழுப்பிச் சென்றனர்.

இதேவேளை தொற்றா நோயின் தாக்கம் பற்றியும் அதிலிருந்து மக்கள் விடுபடுவதற்கான வழிவகைகள் பற்றியதுமான விஷேட செயன்முறைப் பயிற்சி அக்கரைப்பற்று இராம கிருஷ்ண மகா வித்தியாலயத்தில் துறைசார்ந்த அதிகாரிகளுடன் இடம்பெற்றது. இதன்போது வைத்தியர்கள், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர், சமூக ஆர்வலர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு எதிராக விவசாயிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வாகனேரி நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள முள்ளிவட்டுவான், கல்வளை மற்றும் அடம்படிவட்டுவான் விவசாய கண்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களுக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முறையாக நீர் விநியோகம் செய்யப்படவில்லை என்று கோரி நேற்று முள்ளிவட்டுவான் தரவை பகுதியில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு எதிராக சுலோகங்களை ஏந்தி தங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

நீர் குறைவாக உள்ள காலப்பகுதியில் வாகனேரி குளத்திற்கான நீர்ப்பாசனம் வழங்கும் போது எக்காரணம் கொண்டும் புனானை அணைக்கட்டுக் கதவுகளை திறக்கக்கூடாது என்று பொதுச் சபை தீர்மானம் உள்ளது அதே போன்று மாதுறுஓயா தீர்மானமும் உள்ளது இவ்வாறு தீர்மானம் இருக்கும் போது புனானை அணைக்கட்டு கதவுகளை திறப்பதன் காரணமாக வாகனேரி குளத்தினை மாத்திரம் நம்பி விவசாயம் செய்யும் இரண்டாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களைக் கொண்ட விவசாயிகள் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

இதே வேளை 1990ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை முள்ளிவட்டுவான் மற்றும் அடம்படி வட்டுவான் விவசாய கண்டங்களைச் சேர்ந்த வாய்க்காலுக்கான வான் கதவுகள் திருத்தம் செய்யப்படாமல் பழுதடைந்து காணப்படுவதாகவும் இதனை திருத்தம் செய்து தரும்படி கோரிக்கை விடுத்த விவசாயிகள் தங்களது பிரதேசத்தில் மாடு மற்றும் யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் இதனை நிவர்த்தி செய்து தருவதற்கு மின்சார வேலிகளை அமைத்து தருமாறும் உரிய அதிகாரிகளிடம் கேட்டுக் கொள்வதாக கோரிக்கை விடுத்தனர்.

## பொத்துவில் மத்திய கல்லூரியில் 'மீண்டும் பாடசாலைக்கு' நிகழ்வு






(எம்.எஸ்.அம்கல் ஹுஸ்டா, பொத்துவில்)

பொத்துவில் மத்திய கல்லூரி மற்றும் பொத்துவில் அறிவார்ந்தோர் சங்கம் இணைந்து நடாத்திய மீண்டும் பாடசாலைக்கு எனும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இப்பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் கலந்து கொண்டதுடன் பாடசாலையில் அதிபர்களாக ஆசிரியர்களாக ஏற்கனவே கடமையாற்றியவர்களும் வெள்ளை நிற சேட்டும் காற்சட்டையும் அணிந்து கலந்து கொண்டனர். பாடசாலையில் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமையாற்றியவர்கள் அதிதிகளாக வரவேற்கப்பட்டதுடன் ஆராதனை மற்றும் உடற்பயிற்சியும் இடம்பெற்றது.

பின்னர் அதிதிகளால் மாதிரி வகுப்பறை நிகழ்வுகள் நடாத்தப்பட்டதுடன், ஆராதனை மண்டபத்தில் மீட்டிப்பார்த்தல் எனும் தலைப்பில் பழைய மாணவர்கள் மீட்டலும் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் கே.ஹம்ஸா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர், உப வலய, கோட்டக் கல்விப் பணிப்பாளர், வைத்திய அத்தியட்சகர், ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். இவ்வேளை பொத்துவில் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றியத்திற்கான தெரிவும் இடம்பெற்றது.




# அன்னையரை மதிப்போம்; இறையருள் பெறுவோம்

இஸட்.ஏ. றஹ்மான்
ஒலுவில்

அன்னை இன்றி எவருமில்லை. தாயின் மூலமே உலகம் மனித விருத்தியை அடைகின்றது. இதனால் தான் தாய்மை முக்கியமானதாக கருதப்படுகிறது. மனிதனுக்கு மட்டுமன்றி ஏனைய படைப்புகளுக்கும் தாய் (அன்னை) முக்கியமானவளாகும். இருந்த போதிலும் படைப்புக்களின் சிறந்த படைப்பான மனித இனத்தின் தாய் மிகவும் முக்கியமானவள். ஒரு பெண் தாய்மை அடையும் போது அவள் உயர் அந்தஸ்துடன் அன்னை எனும் பெயரை அடைந்து கொள்கிறாள்.

உலகிலுள்ள பல நாடுகள் அன்னையரை கௌரவப்படுத்துமுகமாக சர்வதேச அன்னையர் தினத்தை ஒவ்வொரு வருடமும் கொண்டாகின்றன. இதனடிப்படையில் ஒவ்வொரு வருடமும் மே மாதத்தின் இரண்டாம்(2) ஞாயிறு சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. (இவ்வாண்டு) 2017இல் மே 14ல் சர்வதேச அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. இத் தினத்தில் மட்டுமன்றி ஒவ்வொரு நாளும் நாம் அன்னையரை கௌரவப்படுத்துவது மிக முக்கியமான விடயமாகும்.



இதற்கு நாம் தாய்மாரின் முக்கியத்துவத் நினைவு கூர வேண்டும். அன்னையின் முக்கியம் பற்றி மதங்களும், வேத நூல்களும் முக்கியப்படுத்தி கூறியுள்ளன. இஸ்லாம் மதத்தில் ''தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உண்டு'' என கூறப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாத்தின் போதகரும் முஸ்லிம்களின் தலைவருமான நபி முஹம்மது (ஸல்) அவர்களிடம் ஒரு தோழர் கேட்டார். நான் உலகில் மிகவும் முதன்மைப் படுத்தக்கூடியவர் யார்? இதற்கு நபி அவர்கள் உனது தாய் எனக் கூறினார்கள். இக்கேள்வியை அத் தோழர் மீண்டும் கேட்டார். அதற்கும் நபி அவர்கள் மறுபடியும் தாய் என்றார்கள். மூன்றாம் முறையும் இதே கேள்வியை நபி அவர்களிடம் அத் தோழர் கேட்டார். அதற்கும் நபி அவர்கள் தாய் என்றார்கள். மீண்டும் நான்காவது முறையும் இக் கேள்வியை கேட்ட போது உனது தந்தை என நபி கூறினார்கள்.

எனவே தாய் என்பவள் ஒரு மனிதனுக்கு உலகில் மிகவும் முதன்மையானவள் ஆனால் இன்று நடப்பது என்ன? 10 மாதம் சுமந்து பெற்ற தாயை எம்மில் பலர் மதிப்பதில்லை. திருமணம் முடிக்கும் மட்டும் தாயுடன் பாசமாக இருக்கும் பலர் திருமணம் செய்து விட்டால் தாயை விட்டும் தூரமாகி விடுகின்றனர். இவர்கள் தம்மை தாமே பாவத்துக்குள் உட்படுத்துகின்றனர். ஏன் எனில் ''தாய்க்குப்பின் தாரம்'' ஆனால் இவர்கள் ''தாரத்திற்குப் பின் தாய்'' என மாற்றிவிட்டார்கள். இது மிகவும் மோசமான செயற்பாடாகும்.

மேலும் அல்குர்ஆனில் உனது பெற்றோர் (தாய் தந்தை) வயதை அடைந்தால் அவர்களிடம் சீ என்ற வார்த்தையை கூட பாவிக்க வேண்டாம் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நம்மில் சிலர் சீ எனக் கூறி விட்டாவது விடவில்லை. முதியோர் இல்லத்தில் சீக்கிரமாக சேர்த்து விடுகிறோம் இது என்ன அநியாயம் அன்னையின் அன்பு பற்றி ஒரு கதை கூறப்படும் ஒரு மனிதன் தன் தாயினை கொலை செய்து அவளது இதயத்தை எடுத்துக் கொண்டு செல்லும் போது அவனது காலில் கல்பட்டு அவன் வேதனைப் பட்ட போது அவ் இதயம் 'மகனே பார்த்து செல்லக்கூடாதா? உனது கால்; வலிக்குமே' என வருத்தப்பட்டதாம். இதனால்தான் என்னவோ கூறுவார்கள் 'பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு' என்று தாயின் மகிமை பற்றி மேலும் பல அமுத மொழிகளைக் கூறமுடியும்.

'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்' ஒரு மனிதனை படைப்பவன் இறைவன் அதற்கு வழியாக இருப்பவள் அன்னை இதனால் தான் இவ்வாறு கூறப்படுகிறது. மேலும் 'தாயிற் சிறந்த கோயிலுமில்லை' இறைவனை வழிபடும் இடம் கோயில் இதனை விட தாய் சிறந்தவள் எனக் கூறப்பட்டுள்ளது ஏன் எனில் தாயை கவனியாமல், தாய்க்கு நோவினை செய்துவிட்டு கோயிலுக்கும், பள்ளிவாசலுக்கும் போவதால் எப் பயனுமில்லை. இவ் வணக்கத்தை இறைவன் ஏற்றுக் கொள்ளவும் மாட்டான்.

அன்னையின் அருமை பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். அன்னையரை அவமானப்படுத்துபவர்கள் இறைவனிடத்தில் மதிக்கப்படமாட்டார்கள். இறைவனை அவர்கள் தினமும் தொழுதாலும் அது ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது என்பதுதான் உண்மை. இதற்கு ஒரு வரலாற்றுச் சம்பவம் எடுத்துக்காட்டாக உள்ளது. இறைவனை மிகவும் வழிபடுபவரும், எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவருமான ஒரு தோழர் மரணப்படுக்கையில் இருந்தார் அப்போது அவருடைய நாவு இறைவனை துதி செய்ய மறுத்தது. அதனை கவனித்த இறை தூதர் யோசித்தார்கள். ஏன் இவருக்கு இந் நிலை. பின்பு கேட்டார்கள் இவருக்கு தாய் உண்டா? அதற்கு ஆம் எனக் கூறப்பட்டது. தாய் அழைக்கப்பட்டார் தாயிடம் இறை தூதர் சொன்னார் அவரை மன்னியுங்கள் அவருடைய நாவு இறை விசுவாசத்தை மொழிவதற்கு மறுக்கிறது. அதற்கு அத் தாய் முடியாது என கூறினார். அதன் பின்னர் இறை தூதர் தமது தோழர்களிடம் கூறினார்கள் 'விறகு கொண்டு வாருங்கள் இவரை எரிப்போம்' என அப்போது அத் தாய் பாசம் காரணமாக நான் மன்னித்து விட்டேன் எனக் கூறினார். அதன் பின்னர் அத் தோழர் இறை விசுவாசத்தை மொழிந்தார். இவ் வரலாற்றிலிருந்து பல பாடங்களை நாம் படிக்க வேண்டியுள்ளது. இந்த மனிதர் தனது தாயை கவனிக்கவில்லை இதனால் இவரின் வழிபாடுகள் கூட ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்னை ஓர் ஆலயம் என்பர் ஏன் எனில் இறைவனை வணங்கும் இடம் போல்தான் அன்னை காணப்படுகிறாள். எனவே இறைவனின் அருளைப் பெற வேண்டுமானால் அவசியம் தாய்மாரை கௌரவப்படுத்துவதுடன் அவர்களை பராமரிக்க வேண்டும். எம்மில் பலர் ஆலயத்தை சுத்தமாகவும், கௌரவமாகவும் வைத்து பாதுகாக்கின்றார்கள். ஆனால் எம்மை இவ் உலகில் உதிக்க வைத்த எமது அன்னையை பாது காப்பதில் தவறி விடுகின்றார்கள்.



இதனால் நாம் இறைவனின் அருளைப் பெற முடியாது. அன்னையை ஆதரிப்பதில் பெண்கள் முக்கியம் பெறுகின்றனர். ஒரு மனிதனுக்கு மனைவியாக ஆகும் பெண் நிச்சயம் தாயாக மாறும் நிலை ஏற்படும். எனவே தமது கணவன்மார்கள் அன்னையை அரவணைக்க உதவ வேண்டும். ஆனால் இந்த நிலைமாறியுள்ளது. சில ஆண்கள் தாய்மாரை பார்க்கக்கூட லாயக்கற்று மனைவிமாரின் சொற்படி நடக்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயம். இவர்கள் பெற்றோர்கள். ஆனால் இதே நிலை அவர்களுக்கும் வரும். ஆனால் இன்று அன்னையரின் சிறப்பை அனைவரும் மறந்துவிட்டனர். இதனால்தான் இந்த புதுவருடத்தில் எமது நாட்டில் ஓர் இளைஞன் தனது காதலிக்கு பரிசு வழங்கக் காசு கொடுக்க மறுத்ததின் காரணமாக தனது தாயை கொலை செய்துள்ளான். எனவே இன்று அன்னையரின் சிறப்புப் பற்றி விழிப்புணர்வு பெறுவது முக்கியமாகும். எனவே இந்த சர்வதேச அன்னையர் தினத்தில் அனைவரும் அன்னையரை மதிக்கவும், அரவணைக்கவும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் எம் அனைவருக்கும் அருள் புரிவானாக!

---

**கடந்த வெள்ளி 12ஆம் திகதி மாலை அக்கரைப்பற்றுக் கடற்கரையில் நடைபெற்ற முழு நிலவில் கலை இரவு நிகழ்ச்சிகளின் போது பன்னூலாசிரியர் எம்.ஐ.எம்.முஹைதீனுக்கு அவர் பிறந்த தாய் நகரான அக்கரைப்பற்றில் அவரது அளப்பெரும் சேவைகளைப் பாராட்டி அவருக்கு முதறிஞர் பட்டத்தை அக்கரைப்பற்று முஸ்லிம்கள் சார்பாக முஸ்லிம் தேசிய ஆய்வகம் வழங்கி கௌரவித்தது. அதன்போது அவர் ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பட்டது.**

# சம அதிகாரப்பங்கீட்டிலேயே வட, கிழக்கில் நிரந்தர அமைதி



வடக்கு கிழக்கில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் உறுதிப்படுத்துவது வட கிழக்குத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் சம அதிகாரப் பங்கீட்டிலேயே பெரிதும் தங்கியுள்ளது.

உரையாற்றிய மூதறிஞர் முஹைதீன் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தின் கீழ் மாகாண மட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட இருப்பதாகவும் வடக்கு கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டு வடகிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட இருப்பதாகவும் 1986இல் செய்திகள் உறுதிப்படுத்தின. அவ்வாறாயின் வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களை ஒருங்கிணைத்து ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை உருவாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை முழு இலங்கையிலும் முதன்முதலில் முன் வைத்தது கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி தான். அதன் தலைவராக நானும் செயலாளராக சகோதரர் சேகு இஸ்ஸதீனும் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கான கோரிக்கையை பத்திரிகை வாயிலாக தொடர்ச்சியாக தெரியப்படுத்தி வந்தோம்.

1986 நவம்பர் 29இல் கொழும்பு பாஷா விலாவில் சேகு இஸ்ஸதீனின் வழிகாட்டலில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸ் ஆறாவது தேசிய மாநாட்டில் அதன் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக்கான கோரிக்கையை முன் வைக்கும் ஆலோசனை சேகு இஸ்ஸதீனாலேயே முற்படுத்தப்பட்டது. 1988இல் நடைபெற்ற தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட வேண்டுமென்று முன்னின்றதும் அத்தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் 17 மாகாண சபை உறுப்பினர்களை வென்றெடுப்பதற்கும் முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபைக் கோரிக்கையே காரணமாக அமைந்தது என்பதுவும் வரலாறாகும்.

1990க்குப் பிறகும் மாறி மாறி வந்த சிங்கள பௌத்த தேசிய அரசாங்கங்கள் வடக்கு கிழக்கு தமிழ்த் தேசியத்தினதும், முஸ்லிம் தேசியத்தினதும் தனித்துவமான பிரத்தியேகமான அபிலாஷைகளை, அதிகாரப் பரவலாக்கத்தின் அர்த்தபுஷ்டியான கோரிக்கைகளை சிரத்தை கொடுக்காது ஒதுக்கியே வந்துள்ளன.

இன்று வடக்கையும் கிழக்கையும் மொத்தமாக இணைத்து தமக்கான ஒரு சமஷ்டி ஆட்சி அதிகாரத்தை முழு வடகிழக்கிலும் தமிழர்கள் கோரி வருகின்றனர். பல தீர்வுத்திட்ட முன்மொழிவுகள் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளன.

துரதிஷ்டவசமாக முஸ்லிம் தரப்பில் இருந்து எதுவிதமான ஆக்கபூர்வமான தீர்வுத்திட்ட வரைபும் இதுவரை முஸ்லிம் கட்சிகளால் ஒன்றிணைந்தோ அல்லது தனித்தோ முன்வைக்கப்படவில்லை என்பது அதிர்ச்சிக்குரிய துயரமாகும். எனினும் சகோதரர் சேகு இஸ்ஸதீன், முன்னாள் அமைச்சர் முஸ்லிம் தேசிய ஆய்வகத்தின் தலைவர் வடக்கு கிழக்கு இணைக்கப்படுவதையோ அல்லது இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கென சமஷ்டி ஆட்சி வழங்கப்படுவதையோ தாம் எதிர்க்கவில்லை என்று கூறியுள்ளார். ஆயினும் வடக்கு கிழக்கு முஸ்லிம் பெரும்பான்மை பிரதேசங்களில் தமிழர்களுக்கான சமஷ்டி ஆட்சி அதிகாரம் செல்லுபடியற்றது என்றும் அதற்குப் பதிலாக வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு வழங்கப்படச் சாத்தியமான சமஷ்டி ஆட்சிக்கோ அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட மாகாண சபைக்கோ தரத்திலும் ரகத்திலும் சமமான முஸ்லிம் சமஷ்டி ஆட்சியையோ அல்லது அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்ட மாகாண சபையையோ வழங்க வேண்டுமென்று கூறி வருகிறார். இதுவே 86இல் எமது அசலான தீர்வுத்திட்டமாக இருந்தது.

90இல் வடமாகாண முஸ்லிம்கள் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் இருந்து புலிகளால் துப்பாக்கி முனையில் துரத்தியடிக்கப்பட்டனர். அவர்களில் 75 நூற்று வீதமானோர் இன்னும் சிங்கள மொழி மாவட்டங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர். வடக்கில் தமது பாரம்பரிய வாழிடங்களுக்கு திரும்பும் அவர்களது கால் நூற்றாண்டு காலக்கனவு இன்னும் கைகூட வழி பிறக்கவில்லை.

அந்த வடமாகாண முஸ்லிம்களின் துயர் தீர்க்கும் பாரிய தார்மீக சமூகக் கடமை தமிழ் பேசும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் தலை மீது சுமத்தப்பட்டுள்ளது. தமது மாகாண மக்களைப் பற்றி மட்டும் கருத்துக்கெடுத்து அரைகுறை அறிவில் செயற்படாமல் சகோதர வடமாகாண முஸ்லிம்களுக்குத் தேவைப்படும் அரசியல் ஆத்மீகப் பலத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கே உள்ளது.

இதற்குரிய ஒரே வழி வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் அனைவரையும் முஸ்லிம் தேசியம் என்ற ஒரே குடையின் கீழ் ஒருமைப்படுத்தித் தமிழ்த் தேசியத்திற்கு தமிழர் சமஷ்டியும் முஸ்லிம் தேசியத்திற்கு முஸ்லிம் சமஷ்டியும் பெறப் போராடுவது தான். இதற்காக நாம் இன்று முழு மூச்சோடு முயற்சிக்காமல் விடுவோமானால் நமது வம்சங்களுக்கும் நமது வாரிசுகளுக்கும் நாம் பெரும் துரோகத்தை செய்தவர்களாவோம்.

பெப்ரவரி 10இல் மட்டக்களப்பில் எழுக தமிழ் பேரணி இறுதி உரையாக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் இணைந்த வடகிழக்கில் முஸ்லிம்களுக்கும் தனியான சமஷ்டி ஆட்சி வழங்கப்பட வேண்டும் என்பதை தாம் வலியுறுத்துவதாக பகிரங்கமாக அறிவித்ததை நாம் இங்கு நினைவுகூர வேண்டியிருக்கிறது.

இதன் பின்னராவது முஸ்லிம் அரசியல் பிரதானிகளின் வழிகாட்டலை கருத்துக் கெடுத்து முஸ்லிம் தலைமைத்துவக் கட்சிகள் செயற்படவேண்டியிருப்பது காலத்தின் கட்டளையாகும். நமது ஊரான இந்த அக்கரைப்பற்றின் இரண்டு கண்களாகவே நானும் சகோதரர் சேகு இஸ்ஸதீனும் செயற்பட்டு வடக்கு கிழக்கு முஸ்லிம் தேசியத்திற்கு வழிகாட்டியுள்ளோம். இது நாம் பிறந்த தாய் நகருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாகும்.

முஸ்லிம் தேசியத்திற்கு மட்டுமல்லாது மொத்த இலங்கை முஸ்லிம்களுக்குமான எனது சிந்தனைச் சேவைகளைப் பாராட்டி சகோதரர் சேகு இஸ்ஸதீனின் தலைமையிலுள்ள முஸ்லிம் தேசிய ஆய்வகம் எனக்கு மூதறிஞர் எனப் பட்டமளித்து கௌரவித்ததை நான் அன்போடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக் கொள்கிறேன்.

எனது தாய் நகருக்காகவும் எமது வடகிழக்கு முஸ்லிம் தேசியத்தின் எதிர்கால நன்மைக்காகவும் நான் செய்துள்ள சிந்தனைப் பங்களிப்பை இறைவன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனமுருகப் பிரார்த்திக்கிறேன். சகோதரர் சேகு இஸ்ஸதீனும் அவரது தோழர்களும் எனது வழியைத் தொடர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஆத்ம சாந்தியை அளிக்கிறது என்றும் கூறினார்.

நவமணி



# 29 நாடுகளுடனான சீன வர்த்தக ஒத்துழைப்பு பேச்சு

## மாநாட்டை புறக்கணித்தது இந்தியா

உலக வர்த்தகத்தை மையப்படுத்தி சீனாவில், 'ஒரே அமைப்பு ஒரே சாலை' என்ற பெயரில் மாநாடு நடைபெற்றுவருகிறது. இதனைமுன்னிட்டு இந்தியா உட்பட 29 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இம் மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடின் பங்கேற்கவுள்ளார். மேலும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் 4 முதலமைச்சர்கள், 5 அமைச்சர்கள் பங்கேற்கின்றனர். இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நேபாள துணை பிரதமர் கிருஷ்ண பகதூர் மகாரா, வங்கதேசம், மாலத்தீவு, தென் கொரியா, பிரான்ஸ், ஜெர்மன், பிரித்தானியா நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று ஆலோசனை நடத்திவருகின்றனர்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தலைமையில் நடக்கும் இந்த மாநாட்டில் பங்கேற்க இந்தியாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் மாநாட்டில் பாகிஸ்தான், ரஷ்யா, இலங்கைக்கு முக்கியத்துவம் அளிப்பதாலும், இந்தியாவின் இறையாண்மைக்கு எதிரான பல்வேறு நிலைப்பாட்டை தொடர்ந்து சீனா எடுப்பதாலும், மாநாட்டை புறக்கணிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

குறிப்பாக சீனா - பாகிஸ்தான் பொருளாதார பாதைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிகிறது. அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும் இந்தியா இதில் பங்கேற்பதில்லை என்று முடிவு எடுத்துள்ளது. இருப்பினும் சீனாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி மாநாட்டில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவிக்கையில், சீன மாநாட்டில் இந்தியா நிச்சயம் பங்கேற்க வேண்டும். இதுவரை இந்திய தலைவர்கள் இங்கு வரவில்லை - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பாக். துப்பாக்கி சூட்டில் 10 பேர் பலி

பாகிஸ்தானின் குவாதார் துறைமுகம் அருகே வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது மர்மகும்பல் நடத்திய தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

இதில் 8 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். துப்பாக்கி சூட்டில் காயமடைந்த மேலும் 2 பேர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். தாக்குதல் நடத்திய மர்மக்கும்பல் அங்கிருந்து தப்பியோடியது. இத் தாக்குதலுக்கு இது வரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

## பிரித்தானியா - ஸ்வீடன் - பிரான்ஸ் உட்பட 100 நாடுகளில்



# 'சைபர் அட்டக்'



## முன்னணி நிறுவனங்களின் கணினிகள் முடக்கம் மீண்டும் செயற்பட பிணைத்தொகை கோரும் ஹேக்கர்கள்

## அடுத்த தாக்குதல் இன்று; வல்லுநர்கள் எச்சரிக்கை

பிரித்தானியா, ஸ்வீடன், பிரான்ஸ் உட்பட சுமார் 100 நாடுகளில் இணையத்தள தாக்குதல் (சைபர் அட்டக்) நடத்தப்பட்டுள்ளது. இதனால் முன்னணி நிறுவனங்களின் கணினி செயற்பாடுகள் முடங்கியுள்ளன. இவை மீண்டும் செயற்பட பிணைத் தொகை கோரப்படுகிறது.

ஸ்வீடன், பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் வெள்ளியன்று இத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது தெரியவந்தது. குறிப்பாக, பிரித்தானியாவின் தேசிய சுகாதார சேவை துறை மற்றும் முன்னணி வைத்திய சாலைகளின் கணினிகள் முடங்கியுள்ளன.

இதனால், பிரித்தானியாவில் அம்பியுலன்ஸ் உட்பட மருத்துவ சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலைகள் மூடப்பட்டுள்ளன. அவசர தேவையை தவிர்த்து, நோயாளிகள் வைத்தியசாலைக்கு வர வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். உள் நோயாளிகளின் சிலர் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதுகுறித்து பிரித்தானிய பிரதமர் தெரசா மே தெரிவிக்கையில்,இது மருத்துவ துறையை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. சர்வதேச அளவில் நிகழ்த்தப் பட்டுள்ள இத்தாக்குதலால் பல நாடுகளைச் சேர்ந்த பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றார்.

இதேபோன்று ஸ்பெயினின் தொலைத் தொடர்பு நிறுவனமான டெலிபோனிகாவின் கணினிகளும் இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து இணையத்தள பாதுகாப்பு மென்பொருள் நிறுவனமான அவாஸ்ட் வெளியிட்ட அறிக்கையில், இதுபோன்ற தாக்குதல் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் வேகமாக பரவி வருகிறது. உலகம் முழுவதும் ஒரு மணி நேரத்தில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. 24 மணி நேரத்தில் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட கணினிகள் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தாக்குதலுக்கு 'ரேன்சம் வேர்' எனப்படும் வைரஸே காரணம் என தெரியவந்துள்ளது. இந்த வைரஸ் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுவதாகவும் இதைத் திறந்ததும் அந்த கணினியின் செயற்பாடு முடங்கி விடுவதாகவும் கூறப்படுகிறது.

இந்த வைரஸ் ஒரு மணி நேரத்துக்கு 50 இலட்சம் பேருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப் படுவதாக போர்ஸ்பொயின்ட் செக்யூரிட்டி லேப் தெரிவித்துள்ளது.

இத் தாக்குதல் அவுஸ்திரேலியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, மெக்சிகோ, ஸ்பெயின், போர்த்துக்கல், ரஷ்யா, சீனா, இந்தியா, உக்ரைன் மற்றும் எகிப்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்டுள்ளதாகவும் போர்ஸ் பாயின்ட் தெரிவித்துள்ளது.



குறிப்பாக இத்தாக்குதலால் ரஷ்யா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதை அந்நாட்டு உள் துறை அமைச்சகமும் உறுதிப்படுத்தியுள்ளது.

இணையத்தள பாதுகாப்பு நிறுவனமான கஸ்பர்ஸ்கி லேப், அமெரிக்க உள்துறையின் கீழ் இயங்கும் கணினி பாதுகாப்பு நிறுவனமும் (யு.எஸ்.சி.ஆர்.டி) இத் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளன.

### பிணைத் தொகை

பாதிக்கப்பட்ட கணினி திரைகளில், உங்கள் கோப்புகள் என்க்ரிப்ட் செய்யப் பட்டுள்ளது. இதை நீக்குவதற்கு 300 டொலரை (ரூ.20,000) பிட்கொயினாக (ஒன் லைன் கரன்சி) தர வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு சபையில் (என்.எஸ்.ஏ) இதுபோன்ற மென்பொருள் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே அங்கிருந்து திருடப்பட்ட மென்பொருளைக் கொண்டு இத் தாக்குதல் நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே, மைக்ரோசாப்ட் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களும் இத் துறை சார்ந்த நிபுணர்களும் இத் தாக்குதல் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

இத்தாலியின் பாரி நகரில், ஜி7 நாடுகளின் நிதியமைச்சர்கள் உச்சி மாநாடு வெள்ளியன்று தொடங்கியது. சர்வதேச வங்கியியல் நடைமுறை, பங்குச் சந்தைகள் உள்ளிட்டவற்றில் இணையதள தாக்குதல் நடத்தப்பட்டால் அதை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து இதில் ஆலோசிக்க திட்டமிடப்பட்டது. இந்நிலையில், உலகம் முழுவதும் இணையத்தள தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### நாளை அடுத்த தாக்கு

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமையன்று உலகளவில் நடத்தப்பட்ட இணைய வழி தாக்குதலில் சுமார் 1.25 இலட்சத்திற்கும் மேற்பட்ட கணினி அமைப்புகள் பாதிப்படைந்த நிலையில், அடுத்து ஒரு மிகப்பெரிய இணைய தாக்குதல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக பாதுகாப்பு வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

பிரித்தானியாவைச் சேர்ந்த கணினி பாதுகாப்பு வல்லுநரான மால்வேர் டெக் என்பவர், ''மற்றொரு இணைய தாக்குதல் வந்து கொண்டிருக்கிறது. வரும் திங்களன்று தாக்கலாம்'' என்று எச்சரித்துள்ளார்.

ரான்சம்வேர் தாக்குதலின் வீரியத்தை கட்டுப்படுத்த இவர் உதவினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகம் பலவிதம்

## ஏலம் போகும் காதல் பூட்டு

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பிரதான பாலங்களின் காதலர்கள், என்றென்றும் தங்கள் காதல் அழியாமல், இணைபிரியாமல் இருக்க, பூட்டு ஒன்றில் பெயரை எழுதி, அதை பாலத்தின் இரும்பு வேலியில் பூட்டி, சாவியை ஆற்றில் வீசுவது வழக்கம்.

இப் பழக்கம் 1800ஆம் ஆண்டிலிருந்து கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால், ஒவ்வொரு பாலத்திலும் டொன் கணக்கில் பூட்டின் எடை அதிகரித்து, பாலத்தின் பாதுகாப்பே கேள்விக்குறியானது. இதனால், காதலுக்காக பூட்டு போட வேண்டாமென கேட்டுக் கொள்ளும் பாரிஸ் நகர நிர்வாகம், பூட்டு போடப்பட்ட பாலத்தின் வேலிகளை அகற்றி புது வேலி அமைத்து வருகிறது. அதோடு, நூற்றுக்கணக்கான டொன் பூட்டு வேலிகளை ஏலத்தில் விடுகிறது. இதன் மூலம் கிடைக்கும் தொகை, பாரிஸின் தஞ்சமடையும் அகதிகளுக்கு செலவிடப்பட உள்ளதாம்.

## ஆடு யோகா

உலகமே வியக்கிற யோகாவை கண்டுபிடித்தது இந்தியாதான். ஆனால் அதிலே ஆட்டை புகுத்தி புது யோகாவை பிரபலமாக்கிக்கொண்டு வருகிறது அமெரிக்கா.

'ஆடு யோகா' என்பது ஆட்டை வைத்து யோகா செய்வது என எண்ண வேண்டாம். யோகாவிலுள்ள ஆசனங்கள் மட்டும் தான் செய்ய வேண்டும். கூடவே நம்முடன் ஆடுகள் வந்து தட்போடு பழகும். நம் மீது ஏறி குதிக்கும். அவ்வளவுதான். இந்த ஒரு சின்ன வித்தியாசம், மனக்கும் ஆறுதலாக இருப்பதாக ஆடு யோகா செய்பவர்கள் புகழ்கிறார்கள்.

## ஏன் தாமதம்?

சவூதி அரேபியாவில் கட்டப்பட்டு வரும் உயரமான கட்டடத்தின் நிர்மாண பணி தாமதமாகியுள்ளது என அந்நாடு தெரிவித்துள்ளது.

உலகிலேயே உயரமான கட்டமான ஜித்தா டவர் சவூதி அரேபியாவில் கட்டப்பட்டு வருகிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இக் கட்டடத்தின் கட்டுமானப் பணி பொருளாதார நெருக்கடி காரணமாக 2019ஆம் ஆண்டு முடிவடையும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இது சவூதி இளவரசர் அல்வாலீத் பின் ஏஎஃப்பி செய்தி நிறுவனத்திடம், ''கட்டடத்தை முடிக்கும் பணி பொருளாதார நெருக்கடி காரணமாக தள்ளிப் போடப் பட்டுள்ளது. 2019ஆம் ஆண்டுக்குள் கட்டடத்தின் கட்டுமானப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்றார்.

2011ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக் கட்டடத்தின் கட்டுமானப் பணி 2018ஆம் ஆண்டு முடிவடையும் என்று சவூதி சார்பில் முன்னர் தெரிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# பிறந்த குழந்தைக்கு பாலூட்ட மட்டுமல்ல; இறந்த குழந்தைக்கு உயிரூட்டவும் ஒரு தாயால்தான் முடியும்



ஒரு தாயால் பிறந்த குழந்தைக்கு பாலூட்ட மட்டுமல்ல.., இறந்த குழந்தைக்கு உயிருட்டவும் முடியும் என்பதை நிரூபிக்கும் நெகிழ்ச்சி சம்பவத்தை அன்னையர் தினத்தை நினைவுகூர்ந்து வெளியிடுவதில் அளவற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

நவீனகால கண்டுபிடிப்புகளால் மருத்துவத் துறையில் சில அற்புதங்கள் ஏற்படுவதாக டாக்டர்கள் குறிப்பிடுவதுண்டு. ஆனால், டாக்டர்களே பிணம் என்று கைவிட்ட குழந்தையையும் உயிர் பிழைக்க வைக்கக்கூடிய அற்புதம் ஒரு பெண்ணின் பொறுமை மற்றும் தாயன் பால்தான் நிகழ முடியும் என்பதை நிருபித்த ஒரு சம்பவத்தை மீண்டும் நினைவுடுத்திப் பார்ப்போம்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர வைத்தியசாலையொன்றில், கடந்த 2010ஆம் ஆண்டு பிரசவத்திற்காக கேட் ஒக் டேவிட் என்ற பெண்மணி அனுமதிக்கப்பட்டார். கருத்தரித்து 27 வாரங்களே ஆனநிலையில். அவருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன. குறைந்த எடையில் பிறந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என இரு குழந்தைகளையும் காக்க டாக்டர்கள் பெருமுயற்சி செய்தனர்.

ஆனால்.., பெண் குழந்தை உயிர்பிழைத்தது. கடைசிவரை விடாமுயற்சியுடன் சுமார் அரைமணி நேரம் டாக்டர்கள் போராடியும் ஆண் குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. அந்த குழந்தை இறந்துவிட்டதாக தாயிடம் தெரிவிக்கப் பட்டது.

அதைத் தாங்கிக் கொள்ள முடியாத கேட் ஒக், இறந்த குழந்தையை தூக்கி வரும்படி கண்ணீர் மல்கக் கூறினார். அதன் அழகைக் கண்டதும் தனது மார்போடு கட்டியணைத்தபடி, கதறிஅழ ஆரம்பித்து விட்டார்.

தொடர்ந்து இரண்டு மணிநேரம் தனது உடலுடன் சேர்த்து அணைத்துக் கொண்டு அழுதவாறே இருந்தார். அப்போது.., குழந்தை மெதுவாக மூச்சு விடுவதை அவர் உணர்ந்தார். உடனிருந்த அவரது கணவர் டாக்டர்களை அழைத்து குழந்தை மூச்சுவிட ஆரம்பித்ததைக் கூறினார்.

அவநம்பிக்கையுடன் கேட் ஒக் படுத்திருந்த கட்டிலின் அருகேவந்த ஒரு டாக்டர், அந்த ஆண் குழந்தையின் மார்பில் ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பார்த்துவிட்டு, 'ஐ காண்ட் பிலிவ் திஸ்' (என்னால் நம்பவே முடியவில்லை) என்றபடி பரசவப்பட்டுப் போனார். உடனடியாக பிற டாக்டர்களை உற்சாகத்துடன் அழைத்தார்.

அக் குழந்தைக்கு அவசர சிகிச்சை அளித்த டாக்டர்கள், அதை இன்கு பேட்டரில் வைத்து, சகஜ நிலைக்குக் கொண்டு வந்தனர். சிறிது நேரத்தில் கண் விழித்த குழந்தை, தன்னைப் பார்த்து.. ஆனந்தக்கண்ணீர் விட்ட தாயின் விரல்களை பிடித்துக் கொண்டது.

பிறந்த குழந்தைக்கு பாலூட்ட மட்டுமல்ல... இறந்த குழந்தைக்கு உயிருட்டவும் ஒரு தாயால் முடியும். அதுதான் பொறுமை கலந்த தாயன்பின் தனி மகத்துவம் - தன்னிகரில்லாத அற்புதம் என்பது சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இந்த சம்பவத்தின் மூலம் நிருபணமாகியுள்ளது.

'என் குழந்தை சாகவில்லை என்ற உள்ளுணர்வின் உந்துதலால் அவன் இறந்து போனதாக டாக்டர்கள் கூறியதை ஏற்றுக்கொள்ள என்னால் இயலவில்லை. எங்கள் நாட்டில் தாய் கங்காரு குட்டிகளை எவ்வாறு பாதுகாக்கும்? என்ற கதைகளை நான் சிறு வயதில் கேட்டிருக்கிறேன்.

கங்காரு குட்டி பிறந்தவுடன் தாயின் கதகதப்போ, வாசமோ, இதயத்துடிப்பின் ஓசையோ கேட்கவில்லை என்றால் அது துடிதுடித்து உயிரிழந்துவிடும் என கூறப்படுவதுண்டு. ஒரு தாய் கங்காரு எப்படி தனது குட்டியை வயிற்றின் அடிப் பகுதியிலுள்ள பைக்குள் அரவணைத்து வைத்திருந்து கதகதப்பு ஏற்றுமோ..? அதேபோல் எனது சருமத்தின் கதகதப்பில் பிரிந்துபோன எனது குழந்தையின் உயிர் மீண்டும் உடலில் குடியேறும் என நான் முழுமையாக நம்பினேன்.

எனது நம்பிக்கை வீண் போகவில்லை. என் மகன் கண்விழித்து, வளர்ந்து தற்போது ஐந்து வயது சிறுவனாக அடிக்கும் லூட்டியை தாங்க முடியவில்லை'' என இச்சம்பவம் நடந்து சுமார் ஐந்தாண்டுகளுக்குப் பிறகு கடந்த 2015ஆம் ஆண்டு தனது மலரும் நினைவுகளை யூடியூப் மூலம் வீடியோவாக பகிர்ந்துள்ள கேட் ஒக் டேவிட் பேட்டியை இதுவரை பல கோடி பேர் பார்த்துள்ளனர்.

# உலகச் செய்திகள்

# எதிர்ப்பை மீறி வடகொரியா புதிய ஏவுகணை சோதனை

## வலுவான தடைகளை கொண்டு வர அமெ. அழைப்பு



உலக நாடுகள் எதிர்ப்பை மீறி வட கொரியா நேற்று மீண்டும் புதிய ஏவுகணை சோதனை நடத்தியது.

வட கொரியாவின் இந்த ஏவுகணை சோதனையால் கடுப்பாகியுள்ள அமெரிக்கா, அந்நாட்டிற்கு எதிராக வலுவான தடைகளை கொண்டு வர அழைப்பு விடுத்துள்ளது.

வடகொரியா தொடர்ந்து அணுகுண்டு சோதனை, ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. தென் கொரியா அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபையும் கடும் எச்சரிக்கை மற்றும் பொருளாதார தடை விதித்தும் கண்டு கொள்ளவில்லை.

இதனால் கொரிய தீப கற்பகத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே தென் கொரியாவில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. புதிய ஜனாதிபதியாக மூன்ஜெ-இன் பதவி ஏற்றார். தகுந்த நேரம் வரும் போது வட கொரியா சென்று அதன் தலைவர் கிம் ஜோங்-உங்கை சந்திப்பேன் என்று அறிவித்தார். இதன் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றம் குறையும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதை பொய்யாக்கும் விதத்தில் வட கொரியா நேற்று உள்ளூர்நேரப்படி காலை 5.27 மணிக்கு மீண்டும் புதிய ஏவுகணை சோதனை நடத்தியது. இச்சோதனை வட மேற்கு பியாங்யாங்கில் உள்ள குசாங் பகுதியில் இருந்து நடத்தப்பட்டது.

அங்கிருந்து ஏவப்பட்ட ஏவுகணை 2 ஆயிரம் கி.மீ. தூரம் பாய்ந்து சென்று ஜப்பான் கடலில் விழுந்தது. இதற்கு முன்பு 2 வாரத்துக்கு முன்பு வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியது. அது தோல்வி அடைந்தது.

இந்த ஏவுகணை கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து சென்று தாக்க கூடியது அல்ல என அமெரிக்க பசுபிக் கமாண்ட் தெரிவித்துள்ளது. வடகொரியா இது போன்ற 2 ஏவுகணைகளை தயாரித்துள்ளது. அது அமெரிக்காவை தாக்கும் திறன் கொண்டது.

வடகொரியாவின் இந்த சோதனையை ஆத்திரமூட்டும் செயல் என விமர்சித்துள்ள வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சீன் ஸ்பைசர்,

வட கொரியாவிற்கு எதிராக வலுவான பொருளாதார தடைகளை உலக நாடுகள் கொண்டுவர வேண்டும். தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் வட கொரியாவின் செயலை உன்னிப்பாக கவனித்து வருகிறது. வட கொரியாவினால் அப்பகுதியில் நீண்ட கால அச்சுறுத்தல் நிலவி வருகின்றது. எனத் தெரிவித்துள்ளார்.

வட கொரியா நடத்தியுள்ள சோதனையில் பயன்படுத்தப்பட்ட ஏவுகணை, ஜப்பான் எல்லையை தாண்டி ரஷ்யா வரை சென்று தாக்கும் எனவும் சீன் ஸ்பைசர் தெரிவித்துள்ளார்.

புதிய ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது பற்றி வடகொரியா எந்தவித தகவலும் வெளியிடவில்லை.

# எகிப்தில் 17 புதிய 'மம்மி'கள் கண்டெடுப்பு

உலக அதிசயங்களில் ஒன்றான எகிப்திலுள்ள பிரமிட்டுகளிலிருந்து 17 மம்மிகளை தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

எகிப்திலுள்ள பிரமிட்டுகள் அடங்காத ஆச்சரியங்களையும், அதிசயங்களையும் தன்னுடன் புதைத்துக்கொண்டுள்ளது. பழைமையான காலங்களின் அந்நாட்டை ஆண்ட மன்னர்கள் இறந்தவுடன் அவர்களது உடல்கள் பதப்படுத்தி இந்த பிரமிட்டுகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ளனர். பதப்படுத்தி புதைக்கப்பட்ட இந்த உடல்களானது மம்மி என ஆராய்ச்சியாளர்களால் அழைக்கப்படுகிறது. எப்போது, இங்கு மம்மிகள் கண்டறியப்பட்டதோ, அப்போது முதல் இந்த பிரமிட்டுகள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் சொர்க்கபுரியாக திகழ்கிறது.

இந்நிலையில், அந்நாட்டின் மத்திய பகுதியிலுள்ள டவுனா காபால் மாவட்டத்திலிருக்கும் பழமையான பிரமிட்டுகளில் 17 மம்மிகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

கடந்த மாதம் லூக்சோர் நகரத்தில் 3500 ஆண்டுகள் பழமையான 8 மம்மிகள் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தனியார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நாயகம் எச்.எம். சீ. நிமலசிறி தெரிவித்தார்.

இந்த அங்கீகாரம் வழங்கப்பட்ட இலங்கை விமான நிலைய விமானச் சேவை நிறுவனம் இந்த விமான நிலையத்தில் பராமரிப்பினை பொறுப்பேற்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த உள்நாட்டு விமான நிலையம் ஜெட்ஸ் மற்றும் 50 ஆசனங்களைக் கொண்ட விமானங்களை உள்வாங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விமான நிலையத்தில் ஓடுபாதை 1200 மீற்றர் நீளமானது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு இந்த விமான நிலையத்தைப் புனரமைப்பதற்கு 100 கோடி ரூபாவை ஒதுக்கியிருந்தது.

இதுவரை விமானப் படையின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த விமான நிலையம், இம்மாதம் 31ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் சிவில் விமான அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டும்

அமைச்சரவை அங்கீகாரப்படி இதற்கான வர்த்தமானி அறிவித்தல் 2016 ஜூலை முதலாம் திகதி வெளியிடப்பட்டது.

## பலமடையும் மஹிந்த....

(04ஆம் பக்க தொடர்)

இவ்வரசு அமையும் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மீது பலவாறான குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர்.அக் குற்றச் சாட்டுக்களில் ஒன்றையேனும் இவர்களால் இது வரை நிரூபிக்க முடியவில்லை. அவர்களை விசாரணைக்கு அழைத்தல்,அவமானப்படுத்தல் போன்ற பல செயற்பாடுகள் இவ்வரசாங்கத்தில்முன்னெடுக்கப்பட்டன.அதிலும் குறிப்பாக யோசித்த ராஜபக்ஸ கைது செய்யப்பட்டுவிசாரணைக்காக அழைத்து செல்லப்பட்ட போது மஹிந்த குடும்பத்தினர் கண்ணீர் சிந்தியமையானது பலரது கவனத்தையும் ஈர்த்திருந்ததோடு அனுதாபத்தைபெறச் செய்திருந்தது. மேலும், இவ்வாறானவற்றை அவதானிக்கும் போது மஹிந்த ராஜபக்ஸ மீது இவ்வரசினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் வெறும் போலியானவை என்பதை வெளிப்படுத்துகின்றன. அன்று மஹிந்த நாட்டை ஆட்சி செய்ததன் காரணமாக அவரது ஆட்சியில் அது நொட்டை இது சொட்டை என குறை கூறவும் விமர்சனம் செய்யவும் முடிந்தது.எப்போதும் விமர்சனம் செய்வதும் குறை கூறுவதும் மிக இலகுவானது.தற்போது அன்று குறை கூறியவர்கள் நாட்டை ஆட்சி செய்து கொண்டிருக்கின்றனர்.தற்போதுஅவர்களது ஆட்சியைமஹிந்த விமர்சித்து கொண்டிருக்கின்றார்.இவ்வாறான விமர்சனங்களையும் இன்றைய சவால் களையும் இவ்வரசினரால் முகம் கொடுக்க முடியாதுள்ளது. மிக நீண்டகாலமாக எதிர்க்கட்சி அரசியல் செய்து பழக்கப்பட்ட ஐ.தே.கவுக்கு ஒரு சிறந்த ஆட்சியை ஏற்படுத்திக் கொள்ள சில ஆண்டுகள் தேவைப்படும். அவ்வாறான நேர இடைவெளி ஐ.தே.கவுக்கில்லை.

கடந்தவருட மே தினத்தை தொடர்ந்து மே இரண்டாம் திகதி மஹிந்த ராஜபக்ஸவின் இராணுவ பாதுகாப்புகுறைக்கப்பட்டிருந்தது.அதே போன்று இவ்வருடமும் மே தினத்தை தொடர்ந்துஅவரது இராணுவ பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. இவ்வரசு அவரின் பாதுகாப்பை குறைப்பதனூடாக அவரின் செயற்பாடுகளை கட்டுப்படுத்த சிந்திக்கலாம்.பல விடயங்களில் மஹிந்த ராஜபக்ஷவை குறை கூறினாலும் யுத்தத்தை முடித்த கதாநாயகனாக மக்கள் மனங்களில் இருப்பதை மறுக்க முடியாது.

இதன் காரணமாக அவருக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளமை மறுக்க முடியாத உண்மை.முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுக்கு முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் அல்லாமல் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்ததால்உள்ள அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு விசேட பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை இவ்வரசுக்குள்ளது.

இவ்வரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடுவதன் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஸவின் அச்சுறுத்தல் உள்ளமை மறுக்க முடியாத உண்மை. இவ்வரசு எல்லை நிர்ணயத்தை காரணம் காட்டுகின்ற போதும் அதன் செயற்பாடுகள் திட்டமிட்டு மிகவும் மந்தகதியில் இடம்பெறுவது போன்ற தோற்றப்பாட்டை தற்போது அவதானிக்க முடிகின்றமை இதனை உறுதி செய்கிறது.

இந் நிலையில் அவரது மே தின கூட்டத்தை பார்த்தால் இவ்வரசு இக் காலத்தில் தேர்தலை நடத்தாது என்றே எண்ணத் தோன்றுகிறது.இருந்தாலும் மஹிந்த ராஜபக்ஷ மே தின கூட்டத்தில் வைத்து தேர்தலுக்கான சவாலை விடுத்துள்ளதால் தேர்தலை இன்னும் காலம் தாழ்த்துவது மிகவும் ஈனமான செயலாக அமைந்து விடும்.முன்னாள் ஜனாதிபதி பகிரங்கமாக தேர்தலை நடாத்துங்கள் என சவால் விட்டுள்ள போதும் அதனை ஏற்க யாருமே தயாரில்லை.எல்லை நிர்ணயத்தை இனியும் காரணம் காட்ட முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இறுதியாக கூறப்போனால் இவ்வாண்டு மஹிந்த ராஜபக்ஸ ஒன்று கூட்டி காட்டிய மக்கள் எண்ணிக்கையினூடாக ஐ.தே.க.சு.க ஆகியவற்றை மதி கலங்கச் செய்துள்ளார் என்பதே யதார்த்தமாகும்.

## அபுதாபி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வேண்டுகோளின் பேரிலும் தனது குடும்ப உறுப்பினர்களுடன் இலங்கை வந்த அந்த கொடைவள்ளல் முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களுக்குச் சென்று அங்கு மீளக்குடியேறியுள்ள அகதிகளின் துன்பங்களை நேரில் கண்டறிந்தார்.

ஆரம்பக் கட்டமாக இந்த அகதிகளின் தேவைக்காக மனிதாபிமான ரீதியில் 120 வீடுகளை அமைத்துக் கொடுக்கின்றோம். மீள்குடியேறிய மக்களுக்கு இன்னோரன்ன தேவைகள் இருப்பதை அறிந்து கொண்டோம். இந்த மக்களுக்கு தண்ணீர் பெரும் பிரச்சினையாக இருப்பதால் அடுத்த கட்டமாக குடிநீர் தேவைக்கென நீர் வழங்கல் திட்டமொன்றும் விவசாயம் மற்றும் வேறு பல தேவைகளுக்கும் இன்னுமொரு நீர் வழங்கல் திட்டமும் ஏற்படுத்திக் கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம் என்று அந்த அபுதாபி தனவந்தர் தெரிவித்தார்.

அமைச்சர் றிஷாட் பதியுதீனின் வேண்டுகோளின் பேரிலேயே நாங்கள் இந்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து நிலைமைகளை அறிந்து கொண்டோம். இந்த பிரதேசத்துக்கு அழைத்து வந்து மக்களின் பிரச்சினையை தீர்த்து வைக்க உதவிய அமைச்சருக்கும் நாம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை ஓர் அழகான நாடு. நாங்கள் எத்தனையோ நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கின்றோம். இருந்த போதும் இலங்கை மக்கள் அன்பானவர்களாகவும் பண்பானவர்களாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டோம். நாட்டின் ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும் எங்கள் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறோம்?? என்றும் அந்த தனவந்தர் மேலும் தெரிவித்தார். அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அங்கு கருத்து தெரிவிக்கும் போது,

அரபுலக கொடைவள்ளலின் உதவிகளுக்காக மக்களின் சார்பிலும் எனது தனிப்பட்ட ரீதியிலும் அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

25 வருடங்களுக்கு மேலாக துன்ப துயரங்களில் வாழும் இந்த மக்களில் பலர் இன்னும் அகதி முகாம்களிலேயே வாழ்கின்றனர். கொடை வள்ளல் மஹ்மூத் பேட் ஹாலி அப்துல்லாஹ்வைப் போன்ற மனித நேயம் கொண்ட பரோபகாரிகளும் பல்வேறு முஸ்லிம் நாடுகளின் அமைப்புக்களும் எங்களுக்கு உதவிகளை நல்கி வருகின்றன. அவர்களின் கருணையிலும் உதவியினாலும் இந்த பிரதேசத்தில் பல வீடுகளும் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் குடிநீர் பிரச்சினையை ஓரளவு தீர்த்து வைப்பதற்கும் அவர்கள் உதவியுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன் என்றும் அமைச்சர் கூறினார்.

# அய்யூப் அஸ்மின் நிலைப்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றேன்

## வட மாகாண சபை உறுப்பினர் றயீஸ்

(வாஸ் கூஞ்ஞ, தலைமன்னார் நிருபர்)

வட மாகாண சபையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் போனஸ் ஆசனத்தை பிரதிநிதித்துவபடுத்துகின்ற நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் அய்யூப் அஸ்மின் 'முஸ்லிம்களுக்கான தனியான தென்கிழக்கு அலகு இருக்க கூடாது' என்பதில் தமிழ்த்தலைமைகள் உறுதியாக இருக்க வேண்டும் என கூறிய கருத்தை தான் மிகவும் வன்மையாக கண்டிப்பதோடு, முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகள் தொடர்பான தீர்மானம் மேற்கொள்கின்ற பொறுப்பினை இலங்கை முஸ்லிம்கள் தமது தாய்க் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் ஒப்படைத்திருக்கின்ற உண்மை நிலையினை விளங்கிக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக வடகிழக்கு வாழ் முஸ்லிம்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாக காணப்படுகின்ற அரசியல் தீர்வு சம்பந்தமாக முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்ற இக்கால கட்டத்தில் இவ்வாறான விசமத்தனமான கருத்துக்கள் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் நிலவிவருகின்ற நல்லுறவை சீர்குலைப்பதற்கான முயற்சியாகவே தன்னால் பார்க்கப்படுவதாக வட மாகாண சபை உறுப்பினர் எச்.எம்.றயீஸ் ஊடகங்களுக்கு அனுப்பியிருக்கின்ற செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த ஜனவரி மாதம் கனடாவில் இடம்பெற்ற வடகிழக்கு மீன் கட்டுமாண மாநாட்டில் வடமாகாண சபை சார்பாக கலந்து கொண்டிருந்த அஸ்மீன் முஸ்லிம் மக்கள் தொடர்பாக முன்வைத்த கருத்துக்களையும் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அஸ்மீன் கடந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர். எனவே முஸ்லிம் மக்கள் சார்பாக குறிப்பாக வட கிழக்கு முஸ்லிம்கள் சார்பாக தீர்மானம் மேற்கொள்ள எவ்வித அங்கீகாரமும் அவருக்கு இல்லை. தனக்கு போனஸ் ஆசனத்தை வழங்கிய தமிழ் கூட்டமைப்புக்கு நன்றி விசுவாசத்தைக் காட்ட தன் சமூகத்தை காட்டிக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. இந்நிலையில் நல்லாட்சிக்கான மக்கள் முன்னணி அய்யூப் அஸ்மினை வடமாகாண சபையில் இருந்து மீளழைத்தல் என தமது உயர்சபையில் தீர்மானித்திருக்கின்ற முடிவினை உடனடியாக அமுல்படுத்த முன்வரவேண்டும் என்ற கோரிக்கையினை வடமாகாண முஸ்லிம்கள் சார்பாக தான் விடுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தமது சமூகத்தினது உரிமைகளையும் அபிலாஷைகளையும் தலைவர் ஹக்கீம் தலைமையில் அடைந்து வருகின்ற நிலையினை சிலாவத்துறை படைமுகாம் அகற்றுதல் விடயத்தில் இறைவன் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த தைவிட்டு மன மகிழ்கின்றேன். அத்துடன் முஸ்லிம் சமூகம் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் தனியான அரசியல் அதிகாரத்தை பிரயோகிக்கின்ற ஓர் அலகு மறைந்த தலைவர் மர்ஹூம் அஸ்ரப் கொண்டிருந்த இலட்சிய அரசியல் அலகினை நிறுவுகின்ற காலம் விரைவில் கிட்டவிருப்பதாகவும் றயீஸ் தெரிவித்துள்ளார்.

## ருக்மன் சேனாநாயக்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஞாயிறன்று இரவு சந்தித்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் தற்போதைய அரசியல்நிலை குறித்து இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடு எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவுக்கு தனது ஆதரவினை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக முன்னாள் அமைச்சர் ருக்மன் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

## அமைச்சரவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அத்தருணத்தில் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவது முறையாகாது என்றே அப்போது பிற்போடப்பட்டது.

இந்நிலையிலேயே, எப்படியும் இம்மாதத்துக்குள் அமைச்சரவையில் மாற்றங்கள் இடம்பெறும் என்று நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து தற்போது தெரிய வந்துள்ளது. அந்தவகையில், பிரதமர் தனது சீன விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர்வரும் 19 ஆம் திகதி நாடு திரும்பியதும் மேற்படி மாற்றங்கள் நிகழும் என கூறப்பட்டுள்ளது.

மேலும், இதற்கான ஏற்பாடுகள் மற்றும் கலந்துரையாடல்களை பிரதமர் சீனாவுக்கு செல்லும் முன்னரே ஜனாதிபதி உள்ளிட்ட அரச பிரதானிகளுடன் நடத்தி விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உலக வங்கி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதில் அதிகமானவர்களை உள்வாங்குவதற்கு, பட்டப்படிப்புகளின் தரத்தை உயர்த்துவதற்கு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் நடுத்தர வர்க்க நாடு என்ற நிலையை எய்துவதற்கான இலங்கையின் அபிலாஷையானது நாட்டிலுள்ள மக்கள் எந்தளவிற்கு திறனுள்ளவர்களாகவும் பல்துறைசாரா ஆற்றலைக்கொண்டவர்களாகவும் இருப்பதிலேயே தங்கியுள்ளது என உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பணிப்பாளர் ஊடாக வராவ்ரிடில் கொவ் இதுதொடர்பில் கருத்து வெளியிட்டார்.

மேலும், இந்த நாட்டின் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய அதிக திறன்களைக் கொண்ட விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், தொழில்முயற்சியாளர்கள், கொள்கைவகுப்பாளர்கள், கல்விமான்கள் மற்றும் ஆசிரியர்களை உயர்கல்விக் கட்டமைப்பானது உருவாக்கவேண்டும். நாட்டில் போட்டித் தன்மையை முன்னேற்றுவதும் வளர்ச்சியை ஏற்படுத்துவதும் இலங்கை அரசின்; முக்கிய நோக்கமாக உள்ளது. இந்த முயற்சியில் இலங்கைக்கு ஒத்துழைப்பதைவிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம் என்றும் அவர் கூறினார்.

## அரசாங்க...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அகில விராஜ் காரியவசம் தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி அமைச்சின் ஆங்கிலம், மற்றும் வெளிநாட்டு மொழிப் பிரிவுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தற்போது மூன்றாம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகளுக்கே ஆங்கில மொழிப் புத்தகங்கள் உள்ளன.

இதேநேரம் கல்வி அமைச்சு ஆங்கில மொழிப் போதனாசிரியர்களுக்கு ஆங்கில மொழிப் போதனை குறித்தும் விசேட பயிற்சிகளை வழங்கவுள்ளது.

## அரச...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் ஓரே கரையோரம் ஓரே பாதை என்ற மாநாடு நேற்றையதினம் ஆரம்பமாகியது. இதன்போது கருத்து தெரிவிக்கும் போதே மலேசிய பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இருநாடுகளுக்கிடையில் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை சக்தியுடையதாக மாற்றவும் மலேசிய முதலீட்டாளர்களை இலங்கை முதலீட்டாளர்களாக மாற்றவும் இருதரப்பு குழுக்களும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

65 நாடுகள் பங்குபற்றும் இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கை சார்பில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான குழுவொன்று பீஜிங் சென்றுள்ளது. இந்த மாநாடு இருநாட்கள் இடம்பெறவுள்ளது. இதில் சுமார் 20 அரச தலைவர்கள் கலந்து கொள்வதோடு இந்தியா இதன்பொருட்டு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலன்னறுவை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பதவியேற்று சில வாரங்களில் இக் கல்லூரிக்கு விஜயம் செய்த போது கொழும்பு சாஹிராக் கல்லூரி போன்று இக்கல்லூரியை முன்னேற்றித் தருவதாக வாக்குறுதியளித்திருந்தார். முதற்கட்டமாக ஜனாதிபதியின் பணிப்பில் மூன்று மாடிக்கட்டடத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 70 இலட்சம் ரூபா ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பாடசாலை, இராணுவப் படையினராலே நிர்மாணிக்கப்பட்டது. 'பிபிதமு பொலன்னறுவை' என்ற திட்டத்தின் கீழே இப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டதாக வடமத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். அன்சார் தெரிவித்தார்.

## மகாபோதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இல்லாமையால் இவ்வாரத்திற்கு ஒத்தி போடப்பட்டது.

ஜனாதிபதி சார்பில் அமைச்சர் கடந்த வாரத்தில் மதிச்சுக்கட்டி சென்று 44 நாளாக நடந்த போராட்டம் நடத்தியவர்களிடம் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டிருந்தார்.

நீதியான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்த பின்பே போராட்டம் கைவிடப்பட்டது.

## அரச ஹஜ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உள்ளடங்குகின்றனர்.

இவ்வாண்டு ஹஜ் கடமைகளுக்காக 2800 கோட்டா கிடைத்துள்ளதுடன் 2500 க்கு மேற்பட்டோர் தம் பயணத்தை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கலாநிதி எியாத் எம். தாஹா தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

வழமையாக முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் பிரதிநிதிகளே சவூதி அரசின் ஹஜ் தொடர்பான அமைச்சின் பிரதிநிதிகளைச் சந்தித்து ஹஜ் ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவர். அரச ஹஜ் குழுவினர் கலந்துகொள்ளும் முதல் தடவை இதுவே. இவ்வாண்டு ஹஜ் ஏற்பாடுகள் குறித்த அனைத்து ஏற்பாடுகளுக்குமான கலந்துரையாடல்கள், முடிவுகள் மேற்கொள்ளப்படும் சந்திப்பே இது.

இம்முறை புதிதாக நான்கு ஹஜ் முகவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேலும் 4 முகவர்கள் வாய்ப்பை இழந்துள்ளனர். மொத்தமாக 96 முகவர்கள் ஹாஜிகளை அழைத்துச் செல்ல தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அத்தோடு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்பானது மிகவும் வெற்றிகரமான முறையில் இடம்பெற்றது என்றும் அவர் கூறினார்.

சர்வதேச வெசாக் நிகழ்வை முன்னிட்டு இலங்கைக்கு கடந்தவாரம் விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடன் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்க் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பு தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சந்திப்பின்போது புதிய அரசமைப்பு தொடர்பிலேயே நாம் அவருடன் விசேடமாக கலந்துரையாடினோம். அதாவது, கடந்தவருடம் நவம்பர் மாதம்வரை துரித கதியில் இடம்பெற்றுவந்த அரசமைப்பை அமைக்கும் பணிகள் அதற்குப் பின்னர் திடீரென மந்த கதியை அடைந்தமை தொடர்பிலும் இது உள்ளிட்ட ஏனைய சில செயற்பாடுகளும் இவ்வரசில் தாமதமடைந்து வருகின்றமை தொடர்பிலும் நாம் அவரது கவனத்துக்கு கொண்டுவந்தோம்.

அரசமைப்பை பொறுத்தவரை ஒற்றையாட்சி முறைமை மீண்டும் வரக்கூடாது என்றும் அதி உயர் அதிகாரப்பகிர்வு இடம்பெறல் வேண்டும் என்றும் அவரிடம் தெரிவித்தோம். மேலும், தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கையும் கிழக்கையும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டையும் அவரிடம் தெளிவுப்படுத்தினோம்.

அத்தோடு அரசியல் கைதிகளின் விடுவிப்பு, காணி விடுவிப்பு போன்ற செயற்பாடுகளை அரசு துரிதப்படுத்த இந்திய மத்திய அரசு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனவும் மோடியிடம் கேட்டுக்கொண்டோம். அதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வந்திருந்தபோது, தான் இவ்விடயங்கள் தொடர்பில் அவரிடம் பிரதானமாக சுட்டிக்காட்டியதாக மோடி தெரிவித்தார்.

அந்தவகையில், இந்தியாவும் இவ்விடயங்களில் அக்கறைக் கொண்டுள்ளதாகவே தெரிகின்றது. எனவே, இந்தியாவின் அக்கறையும் அழுத்தங்களும் இருக்குமாக இருந்தால் இலங்கை அரசு நிச்சயமாக இதுவிடயங்களில் அதிக கவனத்தை செலுத்தும் என்றார்.

## அமைச்சரவையில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளமையால் உடனடியாக அதனை செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகளிலேயே அரசு தற்போது தீவிரம் காட்டி வருகின்றது.

எனினும், அமைச்சரவையில் தற்போதைய நிலையில் எந்தவொரு மாற்றமும் இடம்பெறாது என்றும் அரசின் சில தரப்பினரால் கூறப்படுகின்றது. இந்நிலையில், இதுகுறித்து கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் எஸ்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதாவது, இதுவிடயம் குறித்து ஜனாதிபதி தான் இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்கவேண்டும். ஆனால், எம்மைப் பொறுத்தவரை இந்த அமைச்சரவையில் உடனடியாக மாற்றமொன்றை மேற்கொள்வதே சிறந்த ஒன்றாகும் என கருதுகிறோம்.

இதில் தற்போது பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதிலுள்ளவர்களுக்கு எதிரான சில முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, அமைச்சரவையில் மாற்றமொன்றை ஏற்படுத்துவதே நல்லாட்சி அரசுக்கு ஆரோக்கியமாக அமையும் என்று பதிலளித்தார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்



## மோடியின் உரை எனக்கு கௌரவம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, எனது பெயரை குறிப்பிட்டதை மிகப்பெரும் கௌரவமாக கருது கிறேன் என இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்தார். சர்வதேச வெசாக் தின நிகழ்வுகளுக்காக இலங்கைக்கு வந்திருந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, மலையகத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

இதன்போது, மக்கள் மத்தியில் வெள்ளிக்கிழமை பேசிய அவர், முத்தையா முரளிதரன், மறைந்த தமிழக முதல்வர் எம்ஜிஆர் ஆகியோர் இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களால் உலகுக்கு வழங்கப்பட்ட பரிசு என்று புகழ்ந்துரைத்தார். இதற்கு முத்தையா முரளிதரன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இது குறித்து பிரபல வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில்,

தனது உரையின்போது எனது பெயரை அவர் (பிரதமர் மோடி) குறிப்பிட்டது எனக்கு மிகப்பெரிய ஆச்சரியத்தை அளித்துள்ளது. உலகிலேயே மிகப்பெரும் ஜனநாயக நாடாக இந்தியா திகழ்கிறது. இந்நிலையில், எனது சொந்த நாட்டில் எனது பெயரையும், நான் சார்ந்த சமூகத்தின் அடையாளத்தையும் அவர் குறிப்பிட்டுப் பேசியது எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். இந்தியாவுடன் எனக்கு மிகவும் நெருங்கிய உறவு உள்ளது. நான் தென்னிந்தியாவைச் சேர்ந்த பெண்ணைத்தான் திருமணம் செய்துள்ளேன். எனது மூதாதையர்கள் இந்தியாவில் இருந்து இலங்கை வந்தவர்கள் தான். நாங்கள் அவர்களது 4 அல்லது 5வது தலைமுறையினர் ஆவோம்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் மிகநெருங்கிய நட்புறவு நிலவுகிறது. இலங்கையின் மூத்த சகோதரனாக இந்தியா உள்ளது. இலங்கைக்கு பல்வேறு உதவிகளை இந்தியா செய்து வருகிறது. எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு மேலும் வலுப்படும் என்று நம்புவதாக முரளிதரன் தெரிவித்தார்.

## மிஸ்பா, யூனிஸ் விடைபெறல்



சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து விடைபெறவுள்ள பாகிஸ்தான் அணியின் நட்சத்திர வீரர்களான மிஸ்பா உல் ஹக் மற்றும் யூனிஸ்கான் ஆகியோர் தமது இறுதி இன்னிங்ஸை விளையாடி மைதானத்திலிருந்து வெறியேறினர்.

மேற்கிந்திய தீவுகள்- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டொமினிகாவில் நடைபெற்று வருகிறது. இதில் போட்டியின் 4ஆவது நாளான நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் அணி 2ஆவது இன்னிங்ஸிற்காக 174 ஓட்டங்களை எடுத்து டிக்ளேயார் செய்தது. இதன்படி மேற்கிந்திய தீவுகள் அணிக்கு 304 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது. இந்நிலையில் தமது இறுதி டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்ற யூனிஸ்கான் 2ஆவது இன்னிங்ஸில் 35 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இதனையடுத்து பாகிஸ்தான் அணிக்காக சுமார் 2 தசாப்தங்களாக விளையாடி வந்த இவ்விரு ஜோடிகளும் தமது இறுதி டெஸ்ட் இன்னிங்ஸை நிறைவுக்குக் கொண்டு வந்தனர். இவர்கள் ஆட்டமிழந்து வெளியேறிய போது வீரர்கள் எழுந்து நின்று மரியாதை செலுத்தியிருந்தனர்.

## ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட தொடர்:
# சம்பியனானது சிங்கப்பூர் இலங்கைக்கு நான்காமிடம்




பீ.எப்.எம் றிஷாட்

தென் கொரியாவின் ஜியொஞ்சு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் 10ஆவது ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட வல்லவர் போட்டிகளின் அரை இறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் குழு மட்ட போட்டிகளில் மலேசிய அணியிடம் தோல்வியுற்றிருந்த சிங்கப்பூர் அணி, இறுதிப் போட்டியில் 47-43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 10ஆவது ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி மலேசிய அணிக்கு பதிலடி கொடுத்தது.

குழு மட்ட போட்டிகளில் 53-50 என்ற புள்ளிகள் அடிப்படையில் சிங்கப்பூர் அணி மலேசிய அணியிடம் தோல்வியுற்றிருந்தது. எனினும், விறுவிறுப்பான இறுதிப் போட்டியின், முதல் கால்பகுதி நேரத்தில் 11-10 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், முதல பாதி முடிவின் போது 19-22 புள்ளிகள் அடிப்படையில் மலேசிய அணி முன்னிலையில் காணப்பட்ட போதும், மூன்றாம் மற்றும் நான்காம் கால்பகுதிகளில் மீண்டெழுந்த சிங்கப்பூர் அணி, முறையே 15-12 மற்றும் 13-9 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இந்நிலையில், மூன்றாவது இடத்துக்கான விறுவிறுப்பான போட்டியில் நடப்புச் சம்பியனான இலங்கை அணியை 58-49 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி மூன்றாவது இடத்தை ஹொங்கொங் அணி தக்க வைத்துக்கொண்டது.

குழு மட்ட போட்டிகளில் ஹொங்கொங் அணியை 60-45 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டி இருந்த இலங்கை அணி, மூன்றாவது இடத்துக்கான நொக் அவுட் போட்டியில் துரதிஷ்டவசமாக தோல்விகண்டது. அதேவேளை மறுமுனையில், சிறந்த தடுப்பாட்டத்துடன் விளையாடிய ஹொங்கொங் அணி, ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட வரலாற்றில் முதற்தடவையாக இலங்கைக்கு எதிராக வெற்றியைப் பதிவு செய்து 3ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. விறுவிறுப்பான முதல் கால் பகுதியில் 12-11 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஹொங்கொங் அணி முன்னிலை பெற்றுக்கொண்டது. இரண்டாம் கால் பகுதியில், 20-17 என்ற புள்ளிகள் அடிப்படையிலும், மூன்றாம் கால் பகுதி நிறைவின் போது, 43-38 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஹொங்கொங் அணி முன்னிலை பெற்றது.

நான்காவதும் இறுதியுமான தீர்மானம் மிக்க கால் பகுதி நேரத்தில், இலங்கை அணி செய்த தவறுகளினால், வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட ஹொங்கொங் அணி 12 புள்ளிகளை மேலதிகமாகப் பெற்று முன்னிலை அடைந்தது. இறுதி வரை போராடிய இலங்கை அணிக்கு ஹொங்கொங் அணியை முன்னிலை அடைய முடியவில்லை. அந்த வகையில் ஆட்ட நிறைவின் போது, 58-49 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஹொங்கொங் அணி வெற்றி பெற்றது. இவ்வெற்றியின் மூலம் 1994ஆம் ஆண்டுக்கு பின்னர் ஹொங்கொங் அணி இம்முறையே மூன்றாம் இடத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## எப்.ஏ கிண்ண கால்பந்து தொடர்:
# இராணுவ, ஜாவாலேன் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி




பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் காகில்ஸ் புட் சிட்டியின் அனுசரணையில் நடைபெற்றுவருகின்ற எப்.ஏ கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் 2 அணிகளைத் தெரிவு செய்வதற்காக விறுவிறுப்பான 2 அரையிறுதிப் போட்டிகளும் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றன.

முதல் அரையிறுதிப் போட்டியாக எப்.ஏ கிண்ண கால்பந்து தொடரின் நடப்பு சம்பியனான இராணுவ அணிக்கும், 2015 சம்பியன் கலம்போ எப்.சி அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி கடைசிவரை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இதன்படி 3க்கு 2 என்ற கோல்கள் அடிப்படையில் இராணுவ அணி வெற்றிபெற்றது. இதன்படி, இராணுவ அணியின் வேகம், கலம்போ எப்.சி. அணியின் விவேகத்தை மிஞ்சி மீண்டும் எப்.ஏ கிண்ண இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை இராணுவ அணி உறுதிசெய்தது.

போட்டியின் முதல் பாதியில் இராணுவத்தின் அனுபவ வீரர் மொஹமட் இஸ்ஸதீனின் 22 மற்றும் 25 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக்கொண்டு அவ்வணியை முன்னிலை பெறச்செய்தார். எனினும், போட்டியின் 2ஆவது பாதியில் கலம்போசி எப்.சி அணி சார்பாக டிலான் கௌஷல்ய போட்டியின் 50 மற்றும் 65ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக்கொடுக்க போட்டி சமநிலையானது. போட்டியின் இறுதிக்கட்டத்தில் கொழும்பு அணி ஒரு புறம் சரமாரியாக கோல் வாய்ப்புகளை உருவாக்க, மறுமுனையில் கவுண்டர் முறையில் இராணுவப்படை வீரர்கள் கோல் அடிக்க முயற்சித்தனர்.

எனினும், ஆட்டத்தின் 86ஆவது நிமிடத்தில் சந்திரசேகர அடித்த பந்தினை மொஹமட் இம்ரான் தடுக்க அப்பந்து மீண்டும் மொஹமட் இஸ்ஸதீனிற்கு சென்றது. அவர் அதனை தலை கால் முட்டி கோலாக மாற்றி, தனது ஹெட்ரிக் கோலினை அவர் பதிவுசெய்தார். இதன்படி, போட்டியின் மீண்டும் முன்னிலை பெற்ற இராணுவப் படை இறுதி நிமிடங்களில் கவத்தடுப்பில் முழுக் கவனத்தையும் செலுத்தியது. சர்வான் ஜோஹர் மற்றும் நாகுர் மீரா அடித்த வாய்ப்புகள் தடுக்கப்பட, ஆட்டத்தின் இறுதியில் இராணுவப்படை அணி வெற்றியை பதிவு செய்தது.

இந்நிலையில், எப்.ஏ கிண்ண கால்பந்து தொடரில் முன்னாள் சம்பியன் சோண்டர்ஸ் அணியை வெற்றி கொண்டு ஜாவாலேன் அணி முதற்தடவையாக இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இலங்கையில் மிகவும் பழைமைவாய்ந்ததும் எப்.ஏ. கிண்ணத்தை அதிக தடவைகள் வென்றதுமான சோண்டர்ஸ் கழகம் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் அரை இறுதியில் விளையாட தகுதிபெற்றதுடன், எப். ஏ. கிண்ண வரலாற்றின் ஜாவாலேன் கழகம் முதல் தடவையாக அரை இறுதியில் விளையாடியது. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 5க்கு 3 என்ற பெனால்டி கோல்கள் அடிப்படையில் ஜாவாலேன் அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இந்தப் போட்டியின் ஆரம்பம் முதலே சமபலம் மிக்க இரு அணி வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைக்காத விதத்தில் விறுவிறுப்பான விளையாட்டில் ஈடுபட்டனர். எனினும் கிடைத்த ஒரிரு வாய்ப்புக்களின் போதும் இரு தரப்பினராலும் சிறந்த நிறைவுகள் மேற்கொள்ளப்படாமை, முதல் பாதி கோல்கள் இன்றி நிறைவுறுவதற்கு காரணமாக அமைந்தது. இரண்டாவது பாதியை சௌண்டர்ஸ் விளையாட்டுக் கழகம் தமது ஆதிக்கத்துடன் ஆரம்பித்தது. போட்டியின் 61ஆவது நிமிடத்தில் சுந்தர்ராஜ் நிரேஷ் சோண்டர்ஸ் அணிக்காக முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய சோண்டர்ஸ் அணி வீரர்கள் போட்டியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். எனினும் ஜாவாலேன் அணி தமது வேகத்தினை பயன்படுத்தி கோல் வாய்ப்புகளை உருவாக்க முயற்சித்தனர். இதனால் போட்டியின் 75ஆவது நிமிடத்தில் நவீன் ஜுட் ஜாவாலேன் அணிக்காக கோலொன்றைப் பெற்றுக்கொத்து போட்டியை சமப்படுத்தினார்.

புத்துயிர் பெற்ற ஜாவாலேன் அணியின் முன்கள வீரர்கள் வெற்றி கோலிற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர். போட்டி இறுதிக் கட்டத்தை நோக்கி நகர, இரு அணிகளும் சளைக்காமல் போராடினர். எனினும் போட்டி 1-1 என முடிவுற்று பெனால்டி முறைக்கு சென்றது. பெனால்டிக்கு சென்ற போட்டியில் சோண்டர்ஸ் அணியின் அனுபவ வீரர் சஜித் தர்மபால அவரது வாய்ப்பை தவறவிட்டார். ஜாவாலேன் சார்பாக அனைவரும் கோலினை அடிக்க 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஜாவாலேன் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.






2017ஆம் ஆண்டுக்கான கல்பிட்டி பிரீமிய லீக்கின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய டி.எஸ் அணி 10 ஓவர் முடிவில் 68 ஓட்டத்தினை 6 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹைப்ப வேல்ஸ் அணியினர் 5 விக்கெட்டுக்களால் வெற்றியினை தனதாக்கிக்கொண்டது. இச் சுற்றுப்போட்டிக்கு அதிதியாக வர்த்தக மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிஷாத் பதியுதீன் கலந்துகொண்டதுடன், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் புத்தள தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எ.எச்.எம் நவபி மற்றும் கல்பிட்டி தொகுதிக்கான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.ஆர்.எம் முசம்மில், எம். ஆப்தீன் எகியா, எம். சப்ரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். வெற்றியீட்டிய அணித்தலைவருக்கு அமைச்சர் றிஷாத் பதியுதீன் வெற்றிக் கிண்ணத்தினை வழங்கி வைப்பதனைப் படத்தில் காணலாம். (பள்ளிவாசல்துறை அம்ஜத்)

# இலங்கை பெட்மின்டன் சங்கம் தடைசெய்யப்படுமா?

பீ.எப்.எம் றிஷாட்

அரசியல் தலையீடு இன்றி தேர்தலை நடாத்தி அதன் அறிக்கையை திருபத்தை எதிர்வரும் ஜுன் மாதத்திற்கு முன்பு அனுப்புமாறும், இல்லையேல் இலங்கை பெட்மின்டன் சங்கம் தடைசெய்யப்படும் என தெரிவித்து இலங்கை பெட்மின்டன் சங்கத்திற்கு சர்வதேச பெட்மின்டன் சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி இலங்கை பெட்மிட்டன் சஙகத் தேர்தல்கள் நடைபெற்றுள்ள நிலையில், கடந்த வருடத்துக்கான நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்காது தேர்தலை நடத்தியதன் காரணமாக இந்த பெறுபேறுகளை நீக்கிவிட்டு இந்த சங்கத்தின் நிர்வாகத்தினை விளையாட்டு பணிப்பாளரின் கீழ் நியமிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர நடவடிக்கை எடுத்திருந்தார்.

இதற்கான அறிவிப்பு ஏப்ரல் 20ஆம் திகதி விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையிலேயே புதிய தேர்தலை நடத்தி அதன் கற்று திருபத்தை அனுப்புமாறு சர்வதேச பெட்மின்டன் சங்கம் இலங்கையை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Sri Lanka Badminton



## டயமன்ட் லீக் மெய்வல்லுனர்:
# 19 வயது அமெரிக்க வீரர் 200 மீற்றரில் முதலிடம்




சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு 17 கட்டங்களாக வருடாந்தம் நடைபெறும் டயமன்ட் லீக் மெய்வல்லுனர் போட்டிகளின் 2ஆவது கட்டம் நேற்றுமுன்தினம் சீனாவின் ஷெங்ஹாயில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்ட 19 வயதான அமெரிக்க வீரர் நோ லயல்ஸ், குறித்த போட்டியில் தங்கம் வென்று அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளார்.

... ரிக்காவின் லஷான் மெரிட், பிரித்தானியாவின் அடம் ஜமேலி ஆகிய வீரர்கள் பங்குபற்றியிருந்த இப்போட்டியில் 19.9 செக்கன்களில் அவர் போட்டியை நிறைவு செய்து, 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் தனது சிறந்த காலத்தைப் பதிவு செய்தார். அத்துடன் 200 மீற்றர் ஓட்டத்தில் இவ்வருடத்தில் வீரரொருவர் பதிவு செய்த சிறந்த நேரமாகவும் இது அமைந்தது. முன்னதாக அவர் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை 20.09 செக்கன்களில் நிறைவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்குபற்றிய ஜமைக்காவின் எலினா தொம்சன், போட்டித் தூரத்தை 10.78 செக்கன்களில் ஓடிமுடித்து மீண்டும் வெற்றியைப் பதிவு செய்தார்.

# சம்பியனுக்கு 33 கோடி பரிசு

இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சம்பியனாகும் அணிக்கு 2.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை பணப்பரிசிலாக வழங்க சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித்துள்ளது. இது இலங்கை பணப்பெறுமதியில் 33.8 கோடியாகும்.

இதன்படி, கடந்த 2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட தொகையை விட 5 இலட்சம் டொலர் அதிகமாகும். அத்துடன் 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொள்ளும் அணிக்கு 16.9 கோடி ருபா பணப்பரிசில் வழங்கப்படவுள்ளதுடன், அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் 4 அணிகளுக்கும் தலா 6.93 கோடியும் வழங்கப்படவுள்ளதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 15TH MAY 2017